விலை 20 ரூபா

# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 15 • 01.11.2015






அரவாணிகள் என்றாலே வேடிக்கையாக பார்ப்பவர்களின் முகத்திலறைகின்றன அவரது வார்த்தைகள். நினைத்தும் பார்க்க முடியாத கொடுமைகளை கடந்து வந்த துயரத்தின் வார்த்தைகள் உங்களையும் அலைகழிய வைக்கலாம். யாழ்ப்பாண அரவாணிகளின் பிரதிநிதியாக பேசுகிறார் நிலா. யாரும் நுழையாத அரவாணிகளின் உலகத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறோம். வாருங்கள்...

தொடர்ச்சி 10-ம் பக்கம்

# ‘ஆம்... நான் அரவாணிதான்’

யாழ் அரவாணிகளின் இரகசிய உலகம்


# அரசியலை சமைத்து சாப்பிடலாமா?

வடகடலோர மீனவர்களின் ஒட்டுமொத்த கேள்வியிது. இலங்கைச்சிறைகளை இந்திய மீனவர்களின் வாடிவீடுகளைப் போலாக்கிய நமது அரசியல்தலைவர்களின் நடவடிக்கையினால் எழுந்த கேள்வியிது. இந்திய மீனவர்களை அரசியல் காரணங்களால் கட்டுப்படுத்த முடியாதென்கிறீர்கள். சரி... இந்தக்கடலை மட்டுமல்ல, கரைகளையும் இந்தியர்களிடம் கொடுத்து விடுகிறோம். ‘நீங்கள் சொல்லும் அரசியலை சமைத்து சாப்பிடலாமா?’ என மீனவர்கள் கேட்பது நம் எல்லோரது முகத்திலும் அறைகிறது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்



உள்ளே...



பொலிஸ்நிலையம் போன பேஸ்புக் 9




எவ்வளவு அடிச்சாலும் வலிக்காது 16



பனி வாங்கும் கிளிநொச்சி கண்ணகி அம்மன் 20

# சொட்டு சொட்டாய் சேர்க்கும் செல்வம்!

யாழ்ப்பாண குடாநாட்டின் நன்னீரின் ஒரே ஆதாரமான நிலத்தடி நீர் விரைவாக மாசடைந்து வருவது தொடர்பான எச்சரிக்கைகள் அண்மைய வருடங்களாக தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மனிதர்களின் பொறுப்பற்ற நடத்தைகளினால் நிலத்தடி நீர் மாசடைந்து வரும் வேகம் அபாயமான அளவில் உள்ளதாகவும், தற்போதைய மாசினளவு கூட ஒரு அபாய கட்டமென்றும்தான் சொல்கிறார்கள்.

அதுதவிர, நிலத்தடி நீர் விரைவாக குறைந்து வருவது அடுத்த பேராபத்து. இந்த இரண்டில் ஒன்று நடந்தாலே குடாநாட்டுவாசிகள் ஒரு பாலைவன வாழ்க்கையைத்தான் வாழ வேண்டியிருக்கும்.

பொதுவாகவே நம்மவர்களிடம் நிறைய 'மிதப்புக்கள்' உள்ளன. அவற்றில் பிரதானமானது, நன்றாக படித்தோம் என்பது. கல்வியறிவு கூடியவர்கள், உலகெல்லாம் பரந்து சாதித்து வருகிறார்கள் என்றெல்லாம் நிறைய சுயதம்பட்டங்கள் நம்மத்தியில் உள்ளது.

என்றாலும், நம்காலடிக்குள் இருந்து நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கும் நிலத்தடிநீரின் மாசு தொடர்பான எந்த அக்கறையும் நம்மவர்களிடம் கிடையாது. வழக்கமாக நமது அரசியல்வாதிகள் என்ன பிரச்சனையென்றாலும், தொண்டை நரம்பு புடைக்க 'சிங்கள பேரினவாதத்தின் நடவடிக்கையை கண்டிக்கிறோம்' பாணியில் நான்கைந்து வசனங்கள் எதுகைமோனையாக பேசிவிட்டு சென்று கொண்டேயிருக்கும் அரசியலைத்தான் செய்கிறார்கள். ஆனால், நிலத்தடி நீரை மாசடைய செய்ததில் பெருமளவு பங்கு நம்முடையதுதான்.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய கலந்து விவகாரம் தமிழர்களின் நிர்வாக, சமூக பொறுப்பு மற்றும் அறிவியல் விடயங்களில் உள்ள திறனை பெருமளவிற்கு கேள்விக்குட்படுத்தியிருந்தது. நிலத்தடி நீர் விவகாரத்தின் உண்மைத்தன்மையை இன்னும் தமிழர்களின் நிர்வாக பொறிமுறைகள் எதுவும் சரிவர கண்டுபிடிக்கவில்லை அல்லது தீர்வை பெற்றுத்தரவில்லை. இந்த விடயத்தில் நாம் குற்றம் சுமத்துவது தனியே வடமாகாணசபையையோ அல்லது அதில் சர்ச்சைக்குள்ளான அமைச்சர் ஐங்கரநேசனையோ மட்டுமல்ல. தமிழர்களின் பெயரால் அரசியல் செய்யும் அனைவரிற்குமே இதில் சமபங்கு பொறுப்புணர்வு உள்ளது.

கழிவு எண்ணெய் வலிகாமத்தின் சில பகுதிகளின் கிணறுகளில் அவதானிக்கப்பட்டபோதும், அந்த விவகாரத்தில் தமிழர்களின் நிர்வாக அலகுகளால் வினைத்திறனுடன் செயற்பட முடியாதது மட்டுமல்ல, உலகளாவிய தமிழர்களின் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைக்க முடியவில்லை என்பதெல்லாம் பேரதிர்ச்சி தருவது. கண்முன்பாக நிலத்தடி நீர் மாசடைந்து வரும்போது, தென்னிலங்கையை கண்டித்து அறிக்கைமேல் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கும் ஒரு அரசியல் பரம்பரையினால் இதற்குமேல் எதையும் செய்ய முடியாதென்பதே யதார்த்தம்.

நம்மிடமுள்ள ஒரே குடிநீர் ஆதாரத்தையும் கண்முன்னே நஞ்சாக்கிக் கொண்டுள்ள நிலையில், நிலத்தடி நீர் தொடர்பான பிரக்ஞையுடன் சில தனிநபர்கள், அமைப்புக்களாவது செயற்படுவது மட்டும்தான் ஒரேயொரு சிறிய ஆறுதல். ஞானம் அறக்கட்டளை நிறுவனம் யாழ்ப்பாண குடாநாட்டில் மழைநீர் சேகரிப்பு திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. சந்திரிகா குமாரதுங்காவை பணிப்பாளராக கொண்ட தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய நல்லிணக்க அமைப்புடன் அந்த நிறுவனம் ஒப்பந்தமும் கைச்சாத்திட்டுள்ளது. யாழில் 1000 மழைநீர் சேமிப்பு தொட்டிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மழைநீரை தொட்டிகளில் சேமிக்கும் ஏற்பாடுகள் இலங்கையின் பல பகுதிகளிலும் ஏற்கனவே பல வருடங்களாக நடைமுறையில் உள்ளது. குறிப்பாக அதிக வறட்சியான, குளங்கள் அரிதான பகுதிகளில் இப்படியான நடைமுறைகள் உள்ளன. வவுனியாவின் சில பகுதிகளிலும் உள்ளது. இப்பொழுதுதான் யாழ்க்குடாவிற்கு இப்படியொரு திட்டம் வருகிறது. வடக்கில் பொதுவாகவே நீர்முகாமைத்துவ கட்டமைப்புக்கள் கிடையாது. அதிகளவான மழைநீர் வீணாக கடலில் கலக்கும் பிரதேசங்களாகவும் உள்ளன. வளம், அறிவு நிறைந்த பண்டைக்கால இராச்சியங்கள் இல்லாமை, நீண்ட யுத்த சூழல் என பல்வேறு காரணங்களால் நேர்த்தியான மழைநீர் தேக்கும், வடிகால் அமைப்புக்கள் எதுவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இவற்றால் நிலத்தடி நீர் மாசடைதல், குறைவடைதல், நீர் உவரடைதல் என ஏராளம் விளைவுகளை சந்திக்கிறோம்.

இப்பொழுது ஞானம் அறக்கட்டளை திட்டமிடும் மழைநீர் சேகரிப்பு திட்டம் யானைப்பசிக்கு இடும் சோளப்பொரிதான். அரசுகளும், அதிகாரிகளும் சிந்திக்காததை சிந்தித்திருக்கிறார்கள். இப்படியான ஆரம்பங்கள் பலருக்கும் ஆர்வத்தை தூண்டுவதாக அமையலாம். இந்தவகையில் அவர்களை பாராட்ட வேண்டும்.

அண்மையில் வடக்கு முதல்வரும் வெளிநாட்டு முதலீடுகளையும், தொழில்வழங்குனர்களையும் வடக்கிற்கு அழைத்திருந்தார். முதல்வரின் அழைப்பினால் இந்த திட்டம் நடந்ததென்பதல்லத்தான். ஆனால், இலங்கைக்கு வருவதற்கு புலம்பெயர் முதலீட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் இன்னும் முழுமையான ஆர்வம் காட்டாத நிலையில், முதல்வரின் அழைப்பும், ஞானம் அறக்கட்டளையின் ஆரம்பப்பணியும் இன்னும் புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம்.

தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com

# சொன்னார்கள்



**ஆனந்தசங்கரி**
**தமிழர் விடுதலை கூட்டணி**

கருணா தற்போது வசிக்கும் வீடும் எனது வீடும் அருகருகில் உள்ளன. இதனால் அடிக்கடி வெளியில் சந்தித்து கொள்வோம். அப்போது பரஸ்பரம் நலம் விசாரிப்போம். இதை வைத்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம் என கூறுவது அபத்தம்.



**சி.வி.விக்னேஸ்வரன்**
**முதல்வர்**

மத்திய அரசாங்கம் நினைத்ததை கொண்டு வந்து எமது மக்களிற்கு திணித்து, இதுதான் நல்லிணக்கம், ஏற்றுக்கொள்ளுங்கள் என கூறுவதில் எந்தப்பலனுமில்லை. உண்மைகளை அறிந்து, மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென அறிந்து செய்ய வேண்டும்.



**டிலான் பெரேரா**
**அமைச்சர்**

கடந்த தேர்தலில் ஐதேகவும், தமிழ்தேசிய கூட்டமைப்பும் இணைந்து சுலபமாக ஆட்சியமைக்க கூடிய நிலையிருந்தது. அதற்கு பதிலாக சுதந்திரக்கட்சியை ஆட்சியின் பங்காளியாக்கியது ஜனாதிபதியின் சாணக்கியம்.



**கோத்தபாய ராஜபக்ச**
**முன்னாள் பாதுகாப்பு செயலர்**

ஜனாதிபதி மாளிகையின் சொகுசு பங்கர் பற்றி அனைத்து இராணுவ உயரதிகாரிகளும் அறிந்திருந்தனர். புலிகளின் வான் தாக்குதல் அபாயத்திலிருந்து ஜனாதிபதியை காப்பாற்ற பாதுகாப்பு செயலகமே அதனை அமைத்தது.



**கலாநிதி குணதாச அமரசேகர**
**தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்**

சிறைகளில் உள்ள புலிகளை விடுதலை செய்வதென்பது, புலிகளிற்கு அங்கீகாரம் கொடுப்பதற்கு சமம். அவர்களை விடுவித்து நாட்டை குழப்ப அரசு விரும்புகிறது. அவர்கள் விடுவிக்கப்பட்டால் ஐந்தாம் கட்ட ஈழப்போர் வெடிக்கும்.



**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**

இனப்பிரச்னை தீர்வு, நல்லிணக்க முயற்சிகளிற்கு சர்வகட்சி மாநாடுகளை நடத்த கட்சிகளின் ஆலோசனைகளை கேட்பதைவிட, போரால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மக்களுடன் கலந்துரையாடல்கள் நடத்துவதே சிறந்தது.

# க்ளிக் பக்கம்

ஒருமாலை நேரத்தில் மீனவர்கள் தொழிலை முடித்துவிட்டு வலைகளை அடித்து சுத்தப்படுத்தும் காட்சி. கடல்மடியில் அள்ளிவந்த செல்வங்களின் மகிழ்ச்சி மின்ன, உற்சாகமாக வலைகளை காற்றில் பறக்கவிடும் பொழுது படம்பிடித்தது.

**என்னைப்பற்றி:** ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இரண்டாம் வருட மாணவன். சிறு வயதில் இருந்து புகைப்படங்களைப் பார்த்து கற்பனை செய்வேன். ஆனால் இடவியல் கற்கத் தொடங்கியதன் பின்னர் போட்டோகிறாபி பற்றியும், அதில் உள்ள நுட்பங்களையும் என்னால் விளங்கிக்கொள்ள முடிந்ததுடன். கதை சொல்லும் படங்களையும் என்னால் கிளிக் செய்ய முடிகிறது.



படப்பிடிப்பாளர்:
**விவேகானந்தன் விபுலானந்தன்.**

இடம்:
**காக்கை தீவுக் கடற்கரை**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com




அண்மையில் கொழும்பிற்கு அண்மித்த கடற்பரப்பில் பிடிக்கப்பட்ட மீனினம். தீபம் இணையத்தில் கடந்த வாரம் அதிகம் பார்க்கப்பட்ட, பகிரப்பட்ட செய்திப்படம் இது. இது மீன் முதலையா? முதலை மீனா? என குசும்பு வாசகர்கள் அடித்துக் கொண்ட கொமண்ட் லூட்டிக்கு அளவேயில்லை. தீபம் பேஸ்புக் பக்கத்தில் சில அடிக்கப்பட்ட சில 'தெறிமாஸ்' கொமண்ட்டுகள்

**கடந்த வார கலக்கல்**

| | |
|---|---|
| **Smart Sakthi** | : தண்ணிக்குள்ள எதோ தப்பு நடந்திருக்கு |
| **Raji Rajan** | : முதலைக்கும் மீனுக்கும் கள்ள தொடர்பு இருக்கு |
| **Safny Mohamed** | : Gator fish |
| **Sheriff Madurai** | : இதோட அம்மாவின் நடத்தை சரி இல்லை |
| **Lenard Senan** | : இத போல மூன்று மீன்கள் வத்தளை white house உணவகத்தில இருக்கு ஒரு மீன் ஒரு லட்சம் ரூபா என்று சொன்னார்கள் |
| **Mohammed Sahafdeen** | : இது போன்ற மீன்களை மனிதர்கள் அருந்தக்கூடாது |

அனுராதபுரத்தில் கராத்தே சம்பியன் கொலைச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான முன்னாள் படைச்சிப்பாய், கொலைக்கு முன்னர் பேஸ்புக்கில் எழுதியது. 'நீண்ட காலத்தின் பின் பூமியதிர்ச்சி, 'அநுராதபுரத்தில் பாதாள செயல்கள் புதுபிக்கப்படும். எமக்கு மற்றும் சமூகத்திற்கு தவறு இழைத்தவர்கள் மிகவும் கவனமான இருக்கவும்... விரைவில் எதிர்பாருங்கள் - லொக்கு மல்லி'





**Mano Ganesan**

".....பொது மன்னிப்பு அடிப்படையில் அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலையாக வேண்டும் என்பதுதான் என் நிலைப்பாடு. ஆனால், இது ஒரு கூட்டு கட்சி அரசாங்கம். பொது மன்னிப்பு மட்டுமல்ல, அதைவிட குறைந்த கரிசனையையும் கூட தமிழ் கைதிகளுக்கு காட்டப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் அரசாங்கத்துக்கு உள்ளேயே சிலர் பலமாக இருக்கின்றார்கள். இந்நிலையில் ஒரு நடுநிலை முதற்கட்ட தீர்வுதான், இந்த "பிணை" என்பதாகும். உண்ணாவிரதமிருந்த கைதிகளை போராட்டத்தை கைவிடும்படி கடுமையாக அன்று நான் வலியுறுத்தவில்லை. அதுபோல் இன்றும் இந்த தீர்வை ஏற்றுக்கொள்ளும்படியும் வலியுறுத்தவில்லை. தமிழர்களின் சமகால வரலாறு நமக்கு வழிகாட்டினால் சரி என்று மட்டும் நினைக்கின்றேன்...."

**Rimaz Ahamed**
இலங்கை கடற்பரப்பில் எரிகல் விழும் அபாயம் ராய்ட்டர்ஸ் இந்திய மீனவர்கள் தயவுசெய்து அன்றைக்காவது தங்கள் கடற்பரப்பில் மட்டும் மீன் பிடிக்கவும்!!!

**Fathima Naleera**
மனித உரிமை என்பது வாயால் மெல்லப்படும் விடயமல்ல. ஆனால் துப்பப்படும் விடயமும் இதுவாகதான் உள்ளது.




கேப்டன் சற்று ரிலாக்ஸாக கடற்கரை மணலில் படுத்தவாறு ஓய்வெடுக்கிறார்.

ஓர் ஐரோப்பியன் அவர் அருகே வந்து, "Are you relaxing?" என்று கேட்கிறான்.

"No. I am Captain" என்று நேர்மையாகவும் கண்ணியத்தோடும் பதில் அளிக்கிறார் கேப்டன். அவன் ஏதோ முணகியபடியே போகிறான்.

அடுத்து ஓர் அமெரிக்கன் வருகிறான். அதே கேள்வி. "Are you relaxing?" கேப்டன் மீண்டும் தேசிய முற்போக்கு திராவிடக் கட்டுப்பாடோடு பதில் அளிக்கிறார். "No. I am Captain"

அடுத்து ஊர் பேர் அடையாளம் தெரியாத லெவலுக்கு ஒரு வெளிநாட்டுக்காரன் வருகிறான். "Are you relaxing?"

எத்தனை முறை கேட்டாலும் கேப்டனிடம் ஒரே பதில்தான். "No. I am Captain"

இதென்னடா வம்பு என்று நாக்கை மடித்தவாறே எழுந்துச் செல்கிறார் கேப்டன்.

சற்று தூரத்தில் ஒரு சப்பை மூக்கு ஜப்பானியன், தன் ஐரோப்பியத் தோழிகளோடு சூரியக் குளியல் நடத்திக் கொண்டிருக்கிறான். அவனிடம் போய் கேப்டன் கேட்கிறார். "Are you relaxing?"

அவன் "Yes" என்கிறான்.

கேப்டன் அவருக்கே உரித்தான பாணியில் ஒரு காலை தூக்கி 'கிக்' விட, அவன் தூரமாக போய் விழுகிறான்.

"ராஸ்கல். உன்னை அங்கே எத்தனை பேரு தேடிக்கிட்டிருக்காங்க. நீ பாட்டுக்கும் இங்கே பொண்ணுங்களோட ஜல்சா பண்ணிக்கிட்டு இருக்கியா?"






கருநீலநிற சேலை... நெற்றிநிறைய விபூதி... குங்குமம். மெலிந்த, சற்று வளைந்த தோற்றம். மிக சாதுவாக முகம். யாழ்ப்பாண பேரூந்து நிலையத்திற்குள் காலை எட்டுமணிக்கெல்லாம் ஆஜர். பிறகென்ன... 'தெறிக்க விடலாமா' பாணியில் கலக்சன், கலாட்டா, 'கப்' அடித்தல் என வாழ்க்கை களைகட்டும்.

இந்தபெண்மணியை பற்றித்தான் சொல்கிறோம்... யாருக்குமே இவரது பெயர் தெரியாது. அதனால் நமக்கும் தெரியாது. எல்லோரையும் போல 'அன்ரி' என்றே வைத்துக் கொள்வோம்.

யாருக்கு 'அன்ரி' என தலையை குழப்பாதீர்கள். உங்கள் வீட்டில் யாராவது யாழ்ப்பாண நகரத்திற்கு படிக்கப்போகும் பையன்கள் இருக்கிறார்களா? அவர்களிற்குத் தான் அன்ரி. பிச்சையெடுப்பவர் என யாரும் பொருட்படுத்தாமலிருந்தாலும், அவருக்கு ரியூசன் பொடியள் நல்ல கூட்டு.





# சாராயம், காணிக்கை, சோசலிசம்...

நகரத்துக்கு படிக்க வருபவர்களில் பேரூந்து நிலையத்தில் இறங்கி, ஸ்ரான்லி வீதிக்கான இணைப்பு வீதியாலோ வைத்தியசாலை பின்வீதியாலோ சொல்பவர்களில் பலர் அன்ரியின் கூட்டாளிகள். பையன்கள் 'அன்ரி.. அன்ரி'யென வாய்க்குவாய் உருகி உருகி கூப்பிட, அன்ரியும் பையன்களில் உயிர். அன்ரிக்கு தினமும் காலையில் பணம் கொடுக்கும் பையன்களையும் பார்த்திருக்கிறோம்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட தோற்றத்தில் காலை எட்டுமணிக்கெல்லாம் பேரூந்து நிலையத்திற்கு வந்துவிடுவார். பிச்சையெடுப்பது தொழில். காலை வேளையில் உங்களிடம் 'அன்ரி' பிச்சைக்கு வந்தாரெனில் நீங்கள் கொடுத்து வைத்தவர். நேரமாகி மதியம் ஏறினால் அன்ரி சாதாரண ஆள் அல்ல. சொர்ணாக்கா பாணி அன்ரியாகிவிடுவார். அன்ரி அப்படியாகாகவிட்டாலும், உள்ளே 'இறங்கியது' ஆக்கிவிடும்.

காலையில் பிச்சை கேட்பார். யாராவது இல்லையென்றாலும் மௌனமாகவோ அல்லது கொஞ்சம் இரக்கம் சொட்டும் விதமாக இரண்டு வார்த்தை சொல்லிவிட்டோ போய்விடுவார். அதுவே, சொர்ணாக்காவான பின்னரெனில், 'செந்தமிழ் அர்ச்சனை'தான். அன்ரியின் சொந்தமிழிலுக்கு ஈடுகொடுக்கும் பேச்சாற்றலுள்ளவர் அந்த சுற்று வட்டாரத்திலேயே இல்லையென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

மாலை வரையும் பேரூந்து நிலைய பகுதிகளில் வளைய வந்து கலக்சன் செய்வார். மாலை 3 மணியடித்ததும் சொல்லி வைத்ததைப்போல ஸ்ரான்லி வீதிக்கு இறங்குவார். அங்குள்ள சாராயக் கடையொன்றின் தினசரிவாடிக்கையாளர் அன்ரி.

அன்ரிக்கு லோக்கல் ஐயிற்றங்கள் தான் பிடிக்குமாம். அதுவும் ராவா அடிக்க வேண்டுமாம்.

அரையோ, காலோ ஏதோ தோதான ஒன்றைவாங்கிக்கொண்டு வங்கியொன்றிற்கு அருகில் உள்ள ஒழுங்கைக்குள் இறங்குவார். அங்கு அன்ரியைப் போன்றவர்கள் இன்னும் சிலர் இருப்பார்கள். சிறிய தொகை பணத்தை எடுத்துக் கொண்டு எஞ்சிய பணத்தை அவர்களிடம் பகிர்ந்து கொடுத்து விடுவார். பிறகு ராவா.

மாலையில் அன்ரி 'இரண்டு பேராக' நடந்து வருவார். ராவா செய்த வேலை. வரும்போது, மற்றவர்களுடன் பகிரும்போது மிச்சம் பிடித்த பணத்தை ஸடரான்லிவீதி பேரூந்து நிலைய இணைப்பு வீதியிலுள்ள கோயில் உண்டியலில் போட்டுவிடுவார்.


மாலையில் அன்ரி அசல் சொர்ணாக்காதான். மாலை முழுதும் சண்டையென வழக்கப் படுத்தி வைத்திருக்கிறார். யாராவது படிக்கும் பையன்கள் 'அன்ரி'யென்றால் மட்டும் கண்கள் மின்ன ஒரு சிரிப்பு. மற்றும்படி அன்ரி பெண்தாதாதான்.

பொழுது மங்கும் வரை பேரூந்து நிலையப்பகுதிகளிற்குள் சர்ச்சைகளுடன் திரிவார். பின்னர் எப்படி மறைகிறார் என தெரியாமல் எங்கோ மறைந்துவிடுவார். மீண்டும் காலையில்த்தான்.

அன்றன்று உழைப்பு... அதை அனைவரும் பகிர்ந்துண்ணல். அடடா... சோசலிச வாழ்க்கையென்பது இதைத்தானா?

---

# மறந்துவிட்ட சகுனங்கள்



முன்னைய காலங்களில் மக்களின் நம்பிக்கைகளாக ஏராளமான சாஸ்திரங்கள் இருந்துள்ளன. ஆனால் இன்று பல சாஸ்திரங்கள் காணாமல் போய் விட்டன. அவை அனைத்தும் நமது மூதாதையர்களால் ஏதோ ஒரு விடயத்தை முக்கியப்படுத்தி ஏதோ ஒரு சந்தர்பத்தில் ஒரு நன்மையை கருத்தில் கொண்டு பின்பற்றப்பட்டவை. ஆனால் இன்று அவற்றையெல்லாம் பின்பற்றும் அளவிற்கு நேரமும் இல்லை. இயந்திரமயமான உலகில் இயந்திரத்தை தவிர வேறெதிலும் நம்பிக்கையும் இல்லையென்றே கூறலாம். ஆனால் இதை நாம் நம்புகின்றோமோ இல்லையோ கடைப்பிடிக்கிறோமோ இல்லையோ ஆனால் இவை எல்லாம் நமது பண்பாட்டுக்குள் இருந்துள்ளன என்பதை வளர்ந்து வரும் சந்ததிகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

1 **பல்லி சொல்லுதல்:** முன்பெல்லாம் ஏதாவது ஒரு பொருளை எடுக்கும் பொழுதோ, ஏதாவது ஒரு காரியத்தை செய்யத் தொடங்கும் போதோ பல்லி சொன்னால் அது அவ சகுனம். எனவே அதை செய்வதை பிற்போட்டு விடுவார்கள்.

2 **பூனை குறுக்கே வருதல்:** யாராவது வீட்டை விட்டு வெளியில் செல்லும் பொழுது பூனை குறுக்கே வந்தால் அது கூட அப சகுனம் தான். வழி அனுப்பி வைக்க வருபவர்கள் சொல்வார்கள் 'கடவுளே பூனை குறுக்க போகுதே. விபத்து ஏதும் ஆயிடப்போது. நீங்கள் போக வேண்டாம்' என வெளியில் செல்பவரை தடுத்து விடுவார்கள்.

3 **ஏழு புழுனி பார்த்தல்:** ஏழு புழுனி பறவையை ஒரே தடவையில் பார்த்தால் அந்த நபருக்கு ஏதோ ஒரு செல்வம் கொந்தளிக்க போகுதென்று அர்த்தம். செல்வாக்கு பெருகுமாம்.

4 **ஒற்றை மைனா பார்த்தல்:** ஒற்றைமைனா பார்த்தால் அன்று வீட்டில் உங்கள் காதலன் அல்லது கணவருடன் சண்டை வரும் என்பதால் ஒற்றை மைனாவை எதேச்சையாக பார்த்துவிட்டால் அன்று முழுதும் சண்டை வராமல் இருக்க கவனமாக நடந்து கொள்வர்.

5 **போக விட்டு கூப்பிடுதல்:** வெளியில் செல்லும் போது, பின்னாலிருந்து கூப்பிடுவது ஆபத்தான சகுனம் என்பர்.

6 **நிறைகுடம்:** வெளியே செல்லும் பொழுது யாராவது வாளி அல்லது குடத்தில் தண்ணீர் தளம்பத்தளம்ப கொண்டு போனால் அது நல்ல சகுனம். அன்று அவருக்கு ஏதோ நல்லது நடக்க போகிறது என்று அர்த்தம்.

7 **பசு கத்தினால்:** நாய் ஊளையிட்டால் இரவு வேளையில் பசு கத்தினாலோ இல்லை நாய் ஊளையிட்டாலோ அந்த ஊரில் எமன் வந்துவிட்டதாகவும், ஏதோ ஒரு இறப்பு நடக்க போவதாகவும் அந்த ஊர் மக்கள் கதிகலங்கிவிடுவார்கள்.

8 **தாவணி விழுதல்:** ஏதாவது ஒரு நிகழ்வில் ஒரு ஆணினுடைய கையில் உள்ள தாவணி ஒன்று எதேச்சையாக பறந்து யாராவது ஒரு பெண்ணின் மேல் போய் விழுந்தால் அவர்கள் இருவருக்கும்; திருமணம் என கடவுளால் உத்தேசிக்கப்பட்டதாக அர்த்தம்.

9 **குங்குமம் பறந்தால்:** ஏதோ ஒரு சமயத்தில் ஒரு கன்னி பெண்ணின் மீது குங்குமம் பறந்தால் அல்லது கொட்டினால் அவருக்கு திருமணம் நடக்க போவதாக அர்த்தம்.

10 **கோவில் மணி அடித்தால்:** நாம் ஏதாவது ஒரு முக்கியமான செயலை செய்வதற்கு ஏதோ ஒரு விடயத்தை நினைத்து கொண்டு இருக்கையில் கோவில் மணி அடித்தால் அந்த செயல் வெற்றிகரமாக அமைய போகிறது. நல்ல சகுனம் என்று நம்பிக்கை.

# செய்திக் கட்டுரையின் தகவல் ஒன்றுக்கு மறுப்பு

**தீபத்தின் இதழ் 14 (25.10.2015) இல் வெளியான கிளிநொச்சி 'கலவர' மகாவித்தியாலயம் கட்டுரையின் தகவல் ஒன்று தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தனது மறுப்பை தெரிவித்திருக்கிறார். அவர் எமக்கு அனுப்பிய மறுப்பு கடிதம் இது.**



தங்களுடைய *25.10.2015* திகதிய பத்திரிகையில் "கிளிநொச்சி "கலவர" மகாவித்தியாலயம்" என்ற கட்டுரையைப் படித்தேன். பல உண்மையான விடயங்களைத் துணிச்சலான முறையில் வெளிக் கொண்டு வந்துள்ளீர்கள். அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வளர்ச்சியடைந்த பாடசாலையின் வீழ்ச்சி நோக்கிய நிலையை யாரும் விரும்ப முடியாது. ஆகவே அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

அதேவேளை அந்தக் கட்டுரையில் கிளிநொச்சியில் நிலவும் அரசியற் போட்டிகளே இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என சம்மந்தமற்ற முறையில் என்னைப் பற்றிய தவறான ஒரு தகவல் இடம் பெற்றுள்ளது. அந்தத் தகவலை மறுப்பதுடன் அதைத்திருத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மீள் குடியேற்றம் நடந்த காலப் பகுதியில் சில பாடசாலைகளை நாம் துரிதகதியில் இயக்க வேண்டியிருந்தது. அதில் கிளிநொச்சி மகாவித்தியாலயமும் ஒன்று. பாடசாலையின் முன்னாள் அதிபர் பங்கயற்செல்வனும் பெற்றோரும் நலன் விரும்பிகளும் விடுத்த கோரிக்கைகளின் அடிப்படையிலும் அதிகமான மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள் என்பதாலும் குறித்த இந்தப் பாடசாலைக்கு விசேட அடிப்படையில் கூடுதலான நிதி மற்றும் பங்களிப்புகளை வழங்கியிருந்தோம். கூடவே பாடசாலையினுடைய பேறுபேறுகளின் அடிப்படையில் அதனைத் தரமுயர்த்துவதற்காகவும் நான் பாடு பட்டிருக்கிறேன். இது போன்ற முன்னேற்றகரமான விடயங்களில் என்னுடைய பிரசன்னம் இருந்ததே தவிர, அரசியல் ரீதியாக இடமாற்றங்களைச் செய்வதோ, பதவி உயர்வுகள், பதவி இறக்கங்களைச் செய்வதோ என்னுடைய நோக்கமாகவும் பணியாகவும் இருக்கவில்லை. கிளிநொச்சி ம.வியில் மட்டுமல்ல, பிற இடங்களில் உள்ள எத்தகைய நிர்வாகங்களிலும் இதனை நான் மேற்கொள்ளவில்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன். அரச அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்து வினைத்திறனுடன் மீள்குடியேற்ற கால அவசர அவசியப்பணிகளில் பணியாற்றியிருக்கிறோம்.

அத்துடன் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களிலும் ஒருங்கிணைந்து வேலை செய்திருக்கிறோம். இதைத் தவிர, தனிப்பட்ட ரீதியில் எத்தகைய நிர்வாகத் தலையீட்டையும் நான் மேற்கொண்டதில்லை.

மேலும் இந்தப் பாடசாலையின் அதிபர் இடமாற்றச் சேதியை அறிந்து நானும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன். அந்த இடமாற்றம் அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்டது என்பதில் எனக்கு மனவருத்தமே. அத்துடன், இந்த இடமாற்றம் பாரளுமன்றப் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த காலத்தில் செய்யப்பட்டது. இது தவறானது என நான் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாட்டைச் செய்திருந்தேன். இந்த இடமாற்றத்தையும் அதனால் ஏற்பட்ட மாணவர் போராட்டங்களையும் அறிந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மகளிர் விவகாரத் துணை அமைச்சராக அப்போதிருந்த விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் பாடசாலைக்குச் சென்று மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் உரையாடியிருந்தனர். அப்பொழுது இந்தப் பிரச்சினையில் நானும் பாடசாலைக்குச் சென்று நிலைமைகளைக் கேட்டறிய வேண்டும் எனச் சிலரால் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டன.

பாடசாலை விடயங்களில் நாம் அரசியல் தலையீடுகளை மேற்கொள்வதில்லை என்பதாலும் தேர்தல் அறிவிப்பு வெளியான சூழல் என்ற காரணத்தினாலும் நான் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்த்திருந்தேன். எனினும் இந்த நிலைமைகள் குறித்து என்னுடைய அவதானங்களைச் செலுத்தி வந்திருக்கிறேன். இதைத் தவிர, பாடசாலைகளிலும் பிற நிர்வாகங்களிலும் எந்தத் தரப்பையும் மனங்கொண்டு போட்டி நடவடிக்கைகளையும் பழிதீர்க்கும் நடவடிக்கையையும் நாம் மேற்கொள்வதில்லை என்பதை மீண்டும் தெரிவிக்கிறேன்.

**நன்றி.**

**இவ்வண்ணம்,**

**முருகேசு சந்திரகுமார்**

**(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)**



1-ம் பக்க தொடர்ச்சி

அரசியலை சமைத்து ஒருநேர சாப்பாடு சாப்பிடலாமா?

இப்படியொரு கேள்வியை கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? கேட்டவனை அங்கொடைப்பக்கம் அனுப்பி விடுங்கள் என சொல்ல மாட்டீர்களா?

நாங்களும் அப்படித்தான் நினைத்தோம் வடகடலோரங்களிற்கு செல்லும் வரை. கரைதொடும் துரம் வரை வந்து கடல்வளத்தை சூறையாடும் இந்திய றோலர்களஞ் கரையில்ஒதுக்கப்பட்டுள்ள உள்ளூர் மீனவர்களின்படகுகள்ஞ்முறையிட முடியாத கோபத்துடன் கரையில் கொதித்துக் கொண்டிருக்கும் மீனவர்கள்... அடுப்பெரியாத குடிசைகள்.. இந்தக்காட்சிகளை பார்த்துக்கொண்டுசெல்லும்போது மீனவர்கள் எம்மிடம் கேட்ட கேள்வியிது. முல்லைத்தீவு தொடக்கம் மன்னார் வரையான எல்லா கடலோர கிராமங்களின் கதையும் இதுதான்.

நம்மிடம் பதிலில்லை.. உங்களிடம் இருக்கிறதா?

நமது சொந்த கடல்வளத்தை கண்ணெதிரே சூறையாடிச்

> **சக ஆண் நண்பர்களுக்கு மத்தியில் அசௌகரியத்தை உணர்ந்தார். ஆண்கள் அனைவரும் ஒன்றாக குளிக்கும் போதோ, உடைமாற்றும் இடத்தில் நிற்கும் போதோ மிகவும் கூச்சமான தன்மையை உணர்ந்ததாக கூறுகிறார்.**

செல்லும் இந்திய றோலர்கள். அரசியல்காரணங்களை கூறி வாய் மூடியிருக்கும் நமது தலைவர்கள். அத்துமீறி நுழைந்து சூறையாடிச் சென்றவர்களை நான்கு நாள் தங்கவைத்து 'கடாவெட்டி விருந்து வைத்து' விடுதலை செய்யும் இராஜதந்திர உறவு.இதுதான் மீனவர்களை கொதிக்க வைத்துள்ளது.

அத்துமீறி நுழையும் மீனவர்களை கறாரான நடவடிக்கைகள் மூலம் விரட்டவோ அல்லது கைது செய்யப்படுபவர்களை கடுமையாக தண்டிக்கவோ செய்யாமல், 'வந்ததுதான் வந்தீர்கள்... இரண்டுநாள் ரெஸ்ட் எடுத்துட்டு போங்கப்பா' பாணியில் ஓரிரண்டு நாட்கள் தடுத்து வைத்துவிட்டு விடுதலை செய்வதையும், விடுதலையான மறுநாளே றோலரில் மீண்டும் வந்து 'நல்லா கவனிச்சீங்கப்பா.. தாங்ஸ்' என அவர்கள் சொல்லி விட்டு போவதையும் ஒத்த நடவடிக்கைகளை எந்த வகைக்குள் அடக்குவது?

இரண்டுநாடுகளின் உறவு என கூறி ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்க்கையையே அழித்துக் கொண்டிருக்கிறார்கள். வடகடலோர மீனவர்களின் கல்லறைகளின் மீதுதான் இருநாட்டு உறவுகளும் கட்டியெழுப்பப்படப் போகிறதா?

இலங்கையின் வடகடலோரங்

> **இராமேஸ்வரத்தில் இருந்து 9வது கடல்மைலுடன் இந்திய கடல்எல்லை முடிகிறது. எனினும், 200 கடல்மைலிற்கு அப்பாலுள்ள திருகோணமலை கடற்பரப்பிற்குள்ளும் இந்தியர்கள் அத்துமீறி நுழைந்து சூறையாடுகிறார்கள். அண்மையிலும் 4 இழுவைப்படகுகளை கடற்படையினர் பிடித்திருந்தனர்.**



அத்துமீறிய சமயம் கைதானவர்கள்

களில் அண்மைய வருடங்களில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவதும், இலங்கை கடல்வளங்கள் சூறையாடிச் செல்வதும், மீனவர்களின் வலைகளை அறுத்துச் செல்வதும் அன்றாட வழக்கமாகி விட்டது. எல்லைகடந்து வந்து சூறையாடிச் செல்லும் இந்திய மீனவர்கள் இடையிடையே கைதாவதும், பின்னர் அரசியல் காரணங்களை கூறி அவர்கள் விடுதலையாவதும் வழக்கமாகிவிட்டது. இதன் இறுதி நிகழ்வுதான் இலங்கைச்சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 120 மீனவர்களின் விடுதலையும்.

நீண்ட யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களின் மீனவர் சமூகமும் ஒன்று. உயிரைப்பணயம் வைத்துத்தான் தொழில் செய்து வாழ்க்கை நடத்தினார்கள். கரணம் தப்பினால் மரணம் என்ற கதைதான் அவர்களது. தொழிலுக்கு சென்று கரைதிரும்பாத மீனவர்களின் தொகை யாருக்கு தெரியும்?

யுத்தத்தின் பின்னரும் அவர்களின் தலையிலேயே இடி விழுந்துள்ளது. தொப்புள் கொடி உறவு என வாய்க்குவாய் சொல்லிக் கொள்ளும் தமிழக மீனவர்கள்தான் இப்பொழுது இடியை இறக்கியவர்கள். மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பகுதி தொப்புள் கொடிகளின் அடிவயிற்றில் தீமூட்டியுள்ளனர் தமிழக மீனவர்கள்.

### 'மரண' மன்னார்

தமிழகத்திற்கு மிக அண்மையில் உள்ளதால் மன்னார், தலைமன்னார் பகுதி மீனவர்கள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்களால் அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளான அளவை குறிக்க பெரிதும் என்ற வார்த்தை போதுமானதல்ல. பெரிதும் என்பது சிறிதுதான். அதனிலும் பெரிய பாதிப்பு.

தலைமன்னார் பகுதிகளிலெல்லாம் ஒன்றுவிட்ட ஒருநாள் இந்திய றோலர்கள் அத்துமீறி நுழைந்துவிடும். கட்டுமரத்தில் சென்று போடப்பட்ட வலைகளையெல்லாம் அறுக்கும், இழுத்துச் செல்லும் அளவிற்கு இந்திய மீனவர்களின் அடாவடி எல்லைமீறிச் சென்றுவிட்டது. இதேநிலைமை நீடித்தால், இலங்கைக்கரைகளில் இந்திய மீனவர்கள் வலைகளை காயப்போடும் நாள் விரைவில் வரும் என்கிறார்கள்.

வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாள் அத்துமீறி நுழைந்து சூறையாடுகிறார்கள். வரும்போது சுமார் ஆயிரம் றோலர்கள் வருகின்றன. இந்திய றோலர்களால் பாக்குநீரிணைக்கே உரித்தான மீனினங்களில் சுமார் 10 15 வரையானவை அழிந்துவிட்டன.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடிமுறைகளையே இந்திய மீனவர்கள் பயன்படுத்துகிறார்கள். கடல்வளங்கள், மீனினங்கள் அழிவடையாத பாதுகாப்பான மீன்பிடிமுறைகளை இலங்கைமீனவர்கள் கடைப்பிடிக்க, அவர்களை முடக்கிவிட்டு, கடல்வளத்தை சூறையாடத் தொடங்கியுள்ளனர் இந்தியர்கள்.

கரையில் நிற்பவர்களிற்கு 'ஹாய்' சொல்லும் தூரம்வரையும் இந்தியப்படகுகள் வருகின்றன. கடல்வளத்தை இழப்பதுடன், தமது வலைகளையும் இந்திய மீனவர்களால் இழக்கிறார்கள் நமது மீனவர்கள்.

இந்திய மீனவர்களின் சூறையாடலால் மன்னார் மீன்பிடி கிட்டத்தட்ட செயலிழக்கும் நிலைக்கு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. யுத்தகாலத்தை விட மோசமான நிலைக்கு மீனவர் குடும்பங்கள் சென்றுவிட்டன. கடலில் மட்டுமே மிதக்ககற்றுக்கொண்ட குடும்பங்கள் வேறுதொழில்களைதேட வேண்டிய கொடுமையும் மெதுமெதுவாக அரங்கேறத் தொடங்குகிறது. கடலோட மட்டுமே தெரிந்த மீனவர்கள் சிலரை சட்டவிரோத செயற்பாடுகளில் இறங்கவைப்பதும் இந்திய மீனவர்களால் ஏற்படும் வறுமைதான் என்றும் கூறப்படுகிறது.

### முன்னொருகால மீன்

இந்தியர்கள் பயன்படுத்தும் இழுவைப்படகுகள் 48 அடி முதல் 60 அடி வரையான நீளமானது. 100 மீற்றர் நீளமும் 200 மீற்றர் அகலமும் கொண்ட இரட்டைமடி மூலம் கடல்வளத்தை வழித்து துடைக்கிறார்கள். இந்த இரட்டை



**அல்பட் ஜஸ்ரின் சொய்சா**
தலைவர்
மன்னார் மாவட்ட
கடற்றொழில் சம்மேளனம்

> **இந்திய மீனவர்களின் அத்துமீறலை பாராளுமன்றத்திற்கு வடக்கு பிரதிநிதிகள் கொண்டு செல்வதில்லை. அரசியல் ரீதியான எந்த எதிர்ப்பும் இதற்கு எழவில்லை. இந்திய அரசின் பகைமையை சம்பாதிக்க நேரலாமென தமிழ் தலைமைகள் மௌனமாக இருக்கிறார்கள். தொடர்ந்தும் நாம் மௌனம் காத்தால் எமது சந்ததி கூலித் தொழிலாளர்களாகத்தான் மாறுவார்கள்.**

மடியை இரண்டு இழுவைப் படகுகள் இழுக்கின்றன. இவை ஆறு சிலிண்டர் வலுவைக் கொண்டவை.

இந்தமீன்பிடி முறையை பயன்படுத்தினால் பவளப்பாறைகள், கண்டமேடைகள், கடல்தாவரங்கள் அழிவடைகின்றன. நிலத்தை உழுவதற்கு பயன்படுத்தும் உழுகருவிகளை ஒத்தவிதமானவை இந்தியர்கள் பயன்படுத்துவது. ஒருமுறை தரையில் அதனை பயன்படுத்தினால் ஒருவாரமளவிற்கு தரையில் வழித்த அடையாளம் தெரிகிறது. இந்தியர்களை அத்துமீறி நுழைய அனுமதித்தால் 10 12 வருடங்களின் பின்னர் 'முன்னொரு காலத்தில் கடலில் மீனினம் இருந்தது' என்று கதைதான் சொல்ல வேண்டிவரும் என்கிறார்கள்.

### இலங்கை வாடிவீடுகள்

அத்துமீறி இலங்கைக்குள் நுழைவது இந்தியர்களிற்னு அல்வா சாப்பிடுவது போல ஆகிவிட்டது. எந்த தயக்கம், தடையின்றி இலங்கை எல்லைக்குள் நுழைந்து வளங்களை கொள்ளையடித்து செல்கிறார்கள். இதற்குஎந்தவிதமான தடங்கல்களும் அவர்களிற்கு கிடையாது.

அத்துமீறி நுழைபவர்கள் கைது செய்யப்படுகிறார்களே என யாராவது அப்பாவியாக கேட்கலாம். அத்துமீறி நுழைந்ததற்காக தண்டனை அனுபவித்த, அல்லது சற்று நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இந்திய மீனவரை காட்ட முடியுமா என்றால்... விடை சற்று சிரமம்தான்.

இலங்கைக்குள் அத்துமீறி நுழையும் மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும் விரைவிலேயே அவர்கள் விடுதலையாகிவிடுகிறார்கள். அரசியல் காரணங்கள் அதன் பின்னால் உள்ளன. இருநாட்டு மீனவர் விடுதலை, பொதுமன்னிப்பு, நல்லெண்ண நடவடிக்கை என கவர்ச்சிகரமான அரசியல்வார்த்தைகளின் மூலம் இது நடக்கிறது. இதனால் அத்துமீறுவதெல்லாம் இந்தியர்களிற்கு 'திருநெல்வேலி அல்வா' சாப்பிடுவதைப் போலாகிவிட்டது.

கைது செய்யப்பட்டு, சிறைக்கு செல்வதை இலங்கையிலுள்ள 'வாடிவீட்டில்' தங்கிச் செல்வதைப் போல இந்தியர்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என



பாதர் தபால் பெட்டி இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த தபாலட்டை போராட்டம்

## ஜே.ஏ.கிரிமிநாத் டயஸ்
தலைவர்
தலைமன்னார் கடற்தொழிலாளர் சமாசம்



**இந்திய மீனவர்களின் அத்துமீறிற வருகையால் மன்னார் மீனவர்கள் தொழிலையே இழந்துவிட்டனர். வாரத்தில் மூன்றுநாள் இந்தக்கடலில்த்தான் கிடக்கிறார்கள். நமது மீனவர்கள் வலைகளை போட்டுவிட்டு வந்து, பின்னர் சென்றால், நம்மவர்கள் போவதற்கு முன் இந்திய படகுகள் அதை இழுத்து சென்று விடுகிறது. இந்தியர்களின் மீன்பிடிமுறையால் நமது கடல்வளம் முழுதும் அழிகிறது. அதை தடுக்காவிட்டால் 15,20 வருடங்களில் முழு வளமும் அழிந்துவிடும். இப்போதே நமது மீனவர்கள் தொழிலை செய்ய முடியாமல் உள்ளனர். இந்திய மீனவர்கள் அத்துமீறுவதை கட்டுப்படுத்துவது ஒன்றுதான் இதற்கு தீர்வு.**

பரவலாக மீனவர்கள் விமர்சிக்க தொடங்கியுள்ளனர். இன்று போனால் நாளை விட்டுவிடுவார்கள் என்ற உணர்வுதான் அவர்களிடமுள்ளது. இந்தியா என்ற பிரமாண்ட நாட்டின் கீழ் உள்ள இலங்கை போன்ற நாடுகள், அதன் அரசியல், கலாசார, பொருளாதார செல்வாக்கிற்கு உட்படுவது சகஜம்தான். என்றாலும், இலங்கை சற்றே அதிகமாக 'பம்முகிறதோ' என்று தோன்றுகிறது.

அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் எந்தச்சிக்கலுமின்றி விரைவிலேயே விடுதலையாகிவிடுவார்கள் என்பதே யதார்த்தமாக உள்ளது. இதுவே இந்தியர்களிற்கு அதிக துணிச்சலை கொடுப்பதுடன், நினைத்தநேரமெல்லாம் இலங்கை கரைவரை வந்து கடல்வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

**மன்னாரின் வடகடலில் தலைமன்னார் பியர் தொடக்கம் தேவன்பிட்டி வரையும், தென்கடலில் தலைமன்னார் கிராமம் முதல் சிலாபம் வரையும் இந்தியர்கள் ஆக்கிரமித்துள்ளனர். கிளிநொச்சியில் நாச்சிக்குடா முதல் வலைப்பாடு வரையும், யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு முதல் பருத்தித்துறை வரையும், முல்லைத்தீவு திருகோணமலை இணைந்த கடற்பரப்பையும் இந்தியர்கள் 'குத்தகை'க்கு எடுத்துள்ளனர்.**

இந்திய பெரியண்ணனின் மனம் நோகாமல் நடக்கும் இலங்கையின் பவ்வியம் எல்லைகடந்து செல்வதற்கு இன்னொரு உதாரணம், மகிந்த ராஜபக்சவின் காலத்தில் நடந்தது. இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தியபோது கையும் மெய்யுமாக சிக்கிய போதைப் பொருள் கடத்தல்காரன் ஒருவனிற்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

எனினும், அந்த கடத்தல்காரன் விடுவிக்கப் பட்டிருந்தான். இருநாட்டு உறவென்ற துரும்புச்சீட்டு போதைப் பொருள் கடத்தல்காரனை சிறையிலிருந்து விடுவித்தது. அத்துமீறி நுழைபவர்கள் விடுதலையாவது இன்றும் தொடர்கதையாகவே உள்ளது. இதன் இறுதி நிகழ்வுதான் 120 மீனவர்களின் விடுதலை.

### இந்தியாவிற்கு இரத்தம் இலங்கைக்கு தக்காளி சட்னி

எல்லைகடந்து வருபவர்கள் விடயத்தில் எந்தவித சமரசத்திற்கும் இடமின்றியிருப்பதொன்றுதான் இலங்கையின் இறைமை மற்றும் வடக்கு மீனவர்களின் நலனை பேணும் ஒரே நடவடிக்கை.

எல்லை கடப்பவர்கள் விடயத்தில் எந்த சமரசத்திற்கும் இடம் கொடுக்க கூடாதென்பதே வடக்கு மீனவர்களின் பரவலான கருத்தும். தற்போதைய பாணி நடவடிக்கைகளே தொடர்ந்தால் இன்னும் சில வருடங்களில் இலங்கை கடல் வளங்களும் அழிந்துவிடும்.

இந்தியாவிற்கு இன்னொரு முனையின் எல்லையான பாகிஸ்தான் கடற்பரப்பிற்குள் இந்தியர்கள் அத்துமீறி நுழைவதில்லை. தவறி நுழைந்தால் அவர் நீண்டகாலம் சிறையில் அடைக்கப்படுகிறார். பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு இந்தியா தலையால் நடக்க வேண்டியுள்ளது. பாகிஸ்தான் பக்கம் எட்டிப்பார்தால் வீட்டை மறக்க வேண்டியதாகிவிடும்.

இதேபோலத்தான், அருணாச்சல எல்லைப்பகுதிகளில் சீனர்கள் அத்துமீறி நுழைகிறார்கள் என ஐநா வரை கூப்பாடு போடுகிறது இந்தியா. அதேவாயினால்த்தான் இலங்கைக்குள் நுழைந்த மீனவர்களை விட்டுவிடுங்கள் என கேட்கிறது. இரண்டுமே எல்லை கடக்கும் விவகாரம்தான். 'இந்தியக்கரைகளில் மீன் அழிந்துவிட்டது அதனால் வருகிறோம்' என்றால், 'சீனாவில் மக்கள் தொகை கூடிவிட்டது. அதனால் இந்தியாவிற்குள் குடியேறப்போகிறோம்' என சீனா சொன்னால் கேட்கத்தானே வேண்டும்.

இந்த விவகாரம் விஸ்பரூபம் எடுத்ததன் பின்னர் இருநாட்டு மீனவர் பேச்சு, அதிகாரிகள் மட்ட பேச்சு என சில சுற்றுபேச்சுக்கள் நடந்தும் விட்டன. உண்மையில், மீனவர் பிரச்சனைக்கு இவையெதுவுமே தீர்வல்ல. இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வாரத்தில் மூன்றுநாள் மட்டும் உன்வீட்டில் வந்து கொள்ளையடிக்க அனுமதிதா பாணி பேச்செல்லாம் நமது மீனவர்களை ஏமாற்றுவதே. இந்தியர்களின் பொறுப்பற்ற மீன்பிடி முறையின் விளைவுகளிற்காக நீங்களும் விலை கொடுங்கள் என நமது மீனவர்களை கோருவது எந்த விதத்தில் நியாயம்?

இதனால்த்தான் நம்மிடம் மீனவர்கள் கேட்கிறார்கள், நாங்கள் மீன்பிடியை விட்டுவிடுகிறோம். இந்தியர்கள் வந்து அள்ளிச் செல்லட்டும். நாங்கள் அரசியலை சமைத்து சாப்பிடலாமா என.

நம்மிடம் இதற்கு பதிலில்லை. நமது அரசியல்வாதிகள் ஒவ்வொருவரிடமும் கேட்கிறோம். தெரிந்தால் சொல்லுங்கள்.






# இது தான் ஐயா விவசாயம்



திவாகரன் சிவபாலன
thivaharan07@gmail.com

உலக மக்கள் அன்றிலிருந்து இன்றுவரை உணவை எதிர்பார்த்துத் தான் வாழ்கின்றார்கள். தம் வாழ்விற்கு உணவு இன்றியமையாத ஒன்று என்பதும் அவர்களுக்குப் புரிந்த ஒன்றே. ஆனால் சந்தைப்படுத்தப்படும் பொருட்களும் அதன் விலைகள் மட்டுமே நுகர்வோருக்குத் தெரிகின்றது. 'வெங்காயம் ஏன் இந்த விலை? கத்தரிக்காய் ஏன் இவ்வளவு விலை?' என்று கேட்கின்ற மனிதர்கள் அந்த உணவுப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளின் மறுபக்கத்தை யாரும் தெரிந்து கொள்வதும் இல்லை. தெரிந்து கொள்ள விரும்புவதும் இல்லை.

நொடிப்பொழுதில் எல்லாமே மாறிவிடும் என்பார்களே. என் வீனைக் கேட்டால் அதற்கு சிறந்த உதாரணமாக விவசாயிகளின் வாழ்க்கையைத்தான் சொல்வேன். அதைத்தவிர வேறு எதிலும் அவ்வளவு பொருத்தமான உதாரணம் கிடைக்காது என்றே சொல்வேன். இயற்கை நொடிப் பொழுதில் ஆட்டி வைக்கும் அற்பப் பொருள்தான் விவசாயி.

நிலத்தை பண்படுத்துவதிலிருந்தும் விதைக்கும் விதையிருந்தும் தொடங்குகின்றது விவசாயத்திற்கான செலவு. இயற்கைப்பசளை, செயற்கைப் பசளை, களைநாசினி, கிருமிநாசினி, நீர் பாய்ச்சும் எரிபொருள்ச் செலவு, தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கான கூலி, விளைந்த பயிரை வீடு கொண்டு வருவதற்கான செலவு என விதைவிதைத்ததில் இருந்து அதை விற்பனைப் பொருள் ஆக்கும் வரை செலவு செலவு...

அதுகூட பரவாயில்லை. உற்பத்தி செய்த பொருட்களுக்கு அவனால் விலை நிர்ணயம் செய்ய முடியாத கொடுமையை எப்படி சொல்வது? கத்தரி நட்டு காவலிருந்தது ஒருவனாம், காய்பிடுங்கி கறிவைத்தது வேறொருவனாம் என்றகதைதான் இங்கும். இது பரிதாபமான நிலைமை. மனித வாழ்விற்கான அத்தியாவசியமான பொருளை உற்பத்தி செய்பவன் அதற்கான விலையை நிர்ணயிக்கும் பொறுப்பை வேறு யாரிடமோ கொடுத்துவிட்டான். அல்லது அவர்களே பறித்துக் கொண்டார்களா?

விவசாயிகளுக்கு அரசாங்மம் மானிய விலையில் நெல்லுக்கான உரம் வழங்குகின்றது. அத்தோடு விவசாய சம்மேளங்கள் சிறந்த விவசாயிகளின் தெரிவு அடிப்படையில் உழவு இயந்திரங்கள், கிருமிநாசினி விசிறிகள், நீர்ப்பம்பிகள் என்பனவற்றை வழங்குகின்றது. இது அவர்களுக்கான ஓர் ஊன்றுகோல் தான். இல்லை என்று சொல்லவில்லை.

வங்கிகள் விவசாயத்திற்கான கடன்களை குறைந்த வட்டியில் வழங்குகின்றன. அது அவர்களுக்கு பெரும் உதவிதான். ஆனால் விவசாயத்தில் போட்ட பயிர் எல்லாம் நாசமாகிப் போய்விட்டால் அந்த கடனை திரும்பச் செலுத்துவது என்பது விவசாயிகளுக்கு இயலாத காரியமாகின்றது. ஆனால் கடனை கட்டாயம் திருப்பி செலுத்தியாகவேண்டும். அந்த நேரங்களில் விவசாயிகளின் நிலை என்ன? இரண்டு மூன்று வருடங்கள் தொடர்சியாக அழிவு ஏற்பட்டால் விவசாயிகளின் கதி என்ன? கொஞ்சம் சிந்தித்து பாருங்கள். உங்கள் தலையே வெடிப்பது போல் இருக்கின்றது அல்லவா.

போகத்தில் விதைத்த பயிரின் விளைச்சலை எதிர்பார்த்தே அவன் தனது வாழ்க்கையை ஓட்டுகின்றான். எதிர்பார்ப்பிலும் நம்பிக்கையிலும் தனது முழு உழைப்பையும் தன் தோட்டத்திலே செலவழிக்கின்றான். சில வேளைகளில் அவனது எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் பொய்த்துப் போய் விடுகின்றன. அந்த வேளைகளில் அவன் அடுத்தநிலைஎன்னவென்று தெரியாதவன் ஆகிவிடுகின்றான். இது தான் விவசாயின் உண்மையான வாழ்க்கை.


மழையும் வெய்யிலும் அவனின் உற்ற நண்பர்கள். சில வேளைகளில் அவைகளே அவனின் எதிரியாகி அவனையே அழித்தும்விடுகின்றன. மழையில்லாமல் கடும் வெய்யில் அடித்தால் பரப்புக்கு தரக்கூடிய சாகுபடியின் அளவு குறைந்துவிடுகின்றது. அதேகடும்மழைபெய்தால் விளைந்த பயிர்கள் எல்லாம் நாசமாகிப் போய்விடுகின்றது.

ஒரு பரப்புக்கு ஆறு அல்லது ஏழு அந்தர் விளைச்சல் தரக்கூடிய வேதாளங்காய் வெங்காயம் மழையில்லாமல் கடும் வெய்யில் அடிக்கின்ற பொழுது பரப்புக்கு இரண்டு அல்லது மூன்று அந்தர் விளைச்சளையே கொடுக்கின்றது. எந்தப் பயிரும் காலநிலை சீர் இல்லாவிட்டால் விளைச்சல் எதிர்பார்த்தபடியிருக்காது. கடும் மழை பெய்தால் பயிர் முழுக்க நாசமாகிவிடும். அழிவு ஏதும் நிகழாமல் நல்ல முறையில் விளைச்சல் கிடைத்து விட்டால் சந்தையில் உற்பத்திப் பொருளின் விலை இறங்கிவிடும். காலநிலை மாறிவிட்டால் எந்தப்பயிருக்கும் இந்த நிலைமை தான்.

குறிப்பாக களித்தரை, கிளாளை நிலங்களில் நீர் அதிகம் தேங்கி நிற்கும். வழிந்தோடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. அந்த நிலங்களில் பயிர் செய்கின்ற போது கடும் மழை பெய்தால் வெள்ளம் தேங்கி பயிர்கள் எல்லாம் அழுகிவிடும். ஆந்த நிலங்களில் விவசாயம் செய்பவர்களே அதிக மழையால் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

என்று மனிதன் நிலத்தை உழுதானோ அன்று நாகரிகம் தோற்றுவிக்கப்பட்டதென்பார்கள். ஆனால் விவசாயிகள் படும்பாடோ பெரும்பாடு.






நெடுக்கேணி ஒலிமடு வித்தியாலத்தில் புலமை பரீட்சையில்; இருந்து 165 புள்ளிகளை பெற்ற யே.வினோயன் மற்றும் 161 புள்ளிகளை பெற்ற எம்.அருண் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மாண்டபத்தில் இடம் பெற்றது.



முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்பரப்பில் மீனவர்களின் வலையில் சிக்கிய 70 அடி பிரமாண்ட திமிங்கிலத்தை கடலலைகள் கரையொதுக்கியிருந்தன. கடந்த 23ம் திகதி இது நடந்தது. உயிருடன் கரையொதுங்கிய திமிங்கிலத்தை படையினரும், உள்ளூர் மீனவர்களும் எட்டுமணிநேர போராட்டத்தின் பின் ஆழ்கடலில் விட்டனர்.



# பொலிஸ்நிலையம் போன பேஸ்புக்

பொலிஸ் நிலையம்... வாசலில் இரண்டு பாடசாலை மாணவிகள். சகோதரிகள். ஒருவருக்கு 13 வயது. மற்றையவரிற்கு15வயது.மாணவிகள் இரண்டுபேர் தயங்கித்தயங்கி உள்ளே வருவதை கண்டு பொலிசாருக்கும் ஆச்சரியம். அவர்களை அழைத்து என்ன ஏதென்று கேட்டனர். மாணவிகள் இருவரும் நிதானமாக ஒரு முறைப்பாடு கொடுத்தனர்.

'நாங்கள் எங்கள் வீட்டில் இருக்க மாட்டோம்... எங்களிற்கு பாதுகாப்பான புகலிடமொன்று தாருங்கள்'

இது கற்பனை கதையல்ல. நிஜமாகவே நடந்தது. கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. சகோதரிகளாக இரண்டு பாடசாலை மாணவிகள் பொலிஸ் நிலையமொன்றிற்கு சென்று தமது பெற்றோரிடமிருந்து விலகியிருக்க விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இந்தச் செய்தியை படித்ததும், இந்தக்கால இளசுகள் இப்படித்தான்... வீட்டுக்கடங்காததுகள் என அரற்ற ஆரம்பிக்காதீர்கள். விடயத்தை முழுமையாக படியுங்கள்.

சகோதரிகளில் ஒருவர் நகரிலுள்ள பிரபல்ய பாடசாலையில் கல்வி கற்பவர். மற்றவர் புறநகர் பாடசாலையொன்றில் கல்வி கற்பவர். இவர்களின் முறைப்பாட்டால் பொலிசார் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லாமல் போய்விட்டது. அவர்களை உட்கார வைத்து விடயத்தை கேட்டபோது, கிளம்பிய பூதம் இது.



சகோதரிகளின் பெற்றோர் யாழ்ப்பாண நகரிற்கு அண்மையில் வசித்து வருகிறார்கள். தந்தையார் தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றுகிறார். தாயார் வீட்டுப்பணிப் பெண்... மன்னிக்கவும், மார்க் பெக்கரிடம் பணியாற்றுகிறார். அதுதான் பேஸ்புக்கில். பேஸ்புக் நிறுவனத்தில் பணியாற்றவில்லை, பேஸ்புக் நிறுவனத்திற்காக பணியாற்றுகிறார். அதாவது, பேஸ்புக்கே கதியென கிடக்கிறார்.

தந்தையார் காலையில் நேரத்துடன் வேலைக்கு கிளம்பிச் சென்றுவிடுவார். இரவாகும்போது போதையில் வீடு திரும்புவார். வீடு திரும்பியதும்,வீடு போர்க்களமாகும். தாயுடன் பிரச்சனை. பின்னர் அடிதடியாகும். ஆத்திரத்தை மகள்களில் காட்டுவார். அவர்களிற்கு சரமாரியாக அடிவிழும்.

பிள்ளைகளின் இரவுகள் கண்ணீருடன் கழியும். காலையில் அப்பா சென்றுவிடுவார். ஏதோ சமைத்தோம்என அவசரகதி சாப்பாடொன்று தயாராகும். பின்னர் அம்மா பேஸ்புக்கே கதியென சென்றுவிடுவார். பகல் முழுவதும் அம்மா பேஸ்புக்கில் பொழுது போக்கிக் கொண்டிருப்பார்.

அடிக்கும் அப்பா... அரவணைக்காத அம்மா... போர்க்களமான வீடு... பிள்ளைகள் பொலிஸ்நிலைய படியேறியிருக்கிறார்கள்.

பின்னர் பெற்றோரை அழைத்த பொலிசார், அவர்களிற்கு அறிவுரை கூறி பிள்ளைகளுடன் அனுப்பி வைத்துள்ளனர்.

பிள்ளைகள் இளமையில் திசைமாறிச் செல்வதற்கு பிரதான காரணம் பெற்றோரின் பொறுப்பற்ற தனம்தான். போதை, பேஸ்புக் என இரண்டு விடயங்களால் இந்த பெண்பிள்ளைகள் பெரும் கொடுமையை சந்தித்துள்ளனர். இளம்வயதில் பெண்பிள்ளைகளிற்கு தாயின் அரவணைப்பு அவசியம்.

விபத்துக்களில் சிக்குபவர்களை காப்பாற்றாமல் பேஸ்புக்கில் படம் போடும் மனநிலையை கடந்த இதழ்களில் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்த இதழில் பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியேறிய கதையை கூறியிருக்கிறோம். இதன் அர்த்தம் பேஸ்புக் பிழையான ஊடகம் என்பதல்ல. உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துகிறார்கள். அவர்களின் வீடுகளில் பிரச்சனைகள் ஏற்படுகிறதா? செய்தியாகிறார்களா?

எதற்கும் ஒரு வரையறை உள்ளது. அருந்தாதீர்கள் என பிரசாரம் செய்யப்படும் மதுசாரத்தையும் மருந்திற்காக பயன்படுத்துகிறார்கள். அதாவது அளவுதான் தீர்மானிக்கிறது நீங்கள் மருந்தைஎடுக்கிறீர்களா அல்லது போதையை எடுக்கிறீர்களா என்பதை.

தற்கொலையில் முடிந்த பேஸ்புக் காதல், பெண்களின் தனிப்பட்ட வாழ்விற்கு பேஸ்புக்கால் அச்சுறுத்தல், படங்களை பதிவேற்றி காதல் மிரட்டல் என தொடரும் செய்திகளின் இறுதி செய்தியிது.

குடும்பத்தைவிட, வாழ்க்கையை விட பேஸ்புக் பெரிதா?




கடந்த 23ம் திகதி மாலை 4 மணிக்கு மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற இலங்கை போக்குவரத்துசபை பேரூந்தில் நடந்த சம்பவமிது. மன்னார் பேரூந்து நிலையத்தில் பேரூந்து புறப்பட தயாராகவிருந்தது. பேரூந்து நிறைந்த பயணிகள். புறப்பட தயாரானபோது ஒரு பௌத்தபிக்கு பேரூந்துக்குள் ஏறினார். மதகுருமாருக்கு என ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் கைக்குழந்தையுடன் ஒரு பெண். அவருக்கருகில் இன்னும் இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தனர்.

அந்த ஆசனத்தை தரும்படி பௌத்தபிக்கு கேட்டார். பெண்கள் எழுந்திருக்க மறுத்துவிட்டார்கள். தகராறு உச்சமடைய தனது குடையை எடுத்து அவர்களை அடிக்க ஓங்கியிருக்கிறார் பிக்கு. பெண்களும் விடாமல் சவால் விட்டுள்ளனர். பெண் என்பதால் விடுகிறேன், ஆண் என்றால் அடித்து கொன்றிருப்பேன் என எச்சரித்துவிட்டு பிக்கு இறங்கிச் சென்றுவிட்டார்.

இந்த தகராறு நடந்து கொண்டிருந்தபோது நடத்துனர் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார். பிரச்சனையில் தலையிட்டு, தீர்த்து வையுங்கள் என பயணிகள் கேட்டபோதும், 'முன்பக்கம் பிரச்சனை நடக்குது. ரைவர்தான் பார்க்க வேணும்' என கூறி பின்பக்க வாசலால் இறங்கிச் சென்றுவிட்டார்.

பௌத்த பிக்குவின் ஆசனத்தில் அமர்ந்த கைக்குழந்தைப் பெண்ணா? கைக்குழந்தை பெண்ணை எழச் சொன்ன பிக்குவா? பிழையாக நடந்து கொண்டார்கள் என்ற விவாதத்திற்கு முதல், அந்த பேருந்தின் நடத்துனரும், சாரதியும்தான் பொறுப்பு கூற வேண்டியவர்கள். பேரூந்திற்குள் இந்த விவகாரம் எழுந்தபோது, ஆரம்பத்திலேயே தலையிட்டு தீர்வு கண்டிருக்க வேண்டாமா?



1-ம் பக்க தொடர்ச்சி


‘குலை குலையாய் முந்திரிக்கா.. நரிய நரிய சுத்திவா’ இப்படி பாடியபடி ஏழெட்டுப் பேர் நாணிக்கோணி வட்டமாக வளைய வருவார்கள். ஆண்களைப் போலுமிருப்பார்கள். சேலையுடுத்தியிருப்பார்கள். கன்னத்தில் போட்டுக்கொண்டு அதிகமாக வெட்கப்படுவார்கள். பார்த்து சிரிப்பதற்கென்றே திரையில் காட்டப்படும் இந்த வகையானவர்களை நீங்கள் அடிக்கடி பார்த்திருப்பீர்கள்.

ஆம்.. அரவாணிகள், திருநங்கைகள் என பல்வேறு வார்த்தைகளால் அழைக்கப்படும் மூன்றாம் பாலினத்தவர் பற்றியே பேசுகிறோம்.

ஆணாக பிறந்து, பெண்ணாக உணர வைத்து, போலி வாழ்க்கை வாழ முடியாமலும், சொந்த வாழ்க்கையை வெளிப்படுத்த முடியாமலும் நம்மத்தியில் அன்றாடம் செத்து செத்து வாழ்ந்து கொண்டிருக்கும் அரவாணிகள் பற்றி நம்மில் எத்தனை பேர் அறிந்து வைத்துள்ளோம்? திரையிலும், பொது இடங்களிலும் பார்த்து சிரிப்பதற்காக அல்லாமல், அவர்களும் மனிதர்கள்தான் என்ற புரிந்துணர்வு நம்மில் எத்தனை பேரிடம் உள்ளது?

அரவாணிகள் என்றாலே, தீண்டத்தகாதவர்கள் என்பதைப் போன்ற உணர்வுதான் பலரிடமும் உள்ளது. பாலியல் தொழில் செய்வார்கள், பிச்சை எடுப்பார்கள், திருடுவார்கள் என்பதைப் போன்ற சித்திரம்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைக்கடந்து வாழ்க்கையை வாழத்துடிப்பதே அரவாணிகளின் கதையென்பதை அறிவோமா?

புரிந்து கொள்ளாத குடும்பம் அங்கீகரிக்காத சமூகம் என அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அரவாணிகளின் கதையை வெளிச்சமிட்டு காட்ட களமிறங்கினோம்.



திரையிலும், கதைகளிலும் தாராளமாக உலாவும் அரவாணிகள் நமது சூழலில் அவ்வளவு இலகுவாக அடையாளம் காண முடியவில்லை. சிறிய அலைச்சலின் பின்னர் அந்த உலகத்திற்குள் நுழைந்தோம். இந்த கதையின் நாயகியை அந்த உலகத்தில் தேடிப்பிடித்தோம்.

ஈழநிலா. இதுதான் அவர் தனக்கு தானே வைத்துக் கொண்ட பெயர். பிறப்பால் சேர்ந்து கொண்ட ஆண் அடையாளங்களை ஒவ்வொன்றாக கழற்றிச் செல்லும் அவரது வாழ்க்கைப் பயணத்தில், பெற்றோர் வைத்த பெயரையும் கழற்றிவிட்டுவிட்டார். அது பற்றி அவர் பேச விரும்பவில்லை.

## ஆணாக பிறந்த பெண்

பெற்றோரை பொறுத்தவரை தமக்கொரு ஆண்பிள்ளை பிறந்துள்ளது என்றே நினைத்தார்கள். எனினும், அந்தப்பிள்ளை தன்னை உணர்ந்தது ஒரு பெண்ணாக. ஆணாக பிறந்த பிள்ளை பெண்ணாக தன்னை மாற்றுவதை அங்கீகரிக்காத சமூகப்பார்வை, ஊருக்கு அஞ்சி தனக்குள்தானே தற்கொலை செய்து கொள்ள மனமில்லாத வீரியம் என்பன நேருக்குநேர் மோதும்போது வீடுகளை துறக்கிறார்கள் அரவாணிகள்.

**யா**ழ்பாணத்தில் உள்ள அரவாணிகளில் பலர் முறையான வைத்திய ஆலோசனைகளையோ சிகிச்சைகளையோ பெற்றுக் கொள்ளாமல் தாமாகவே பல மருந்துகளை பாவிக்கிறார்கள். ஏற்கனவே முறையற்ற சிகிச்சை எடுத்த இன்னொரு அரவாணியின் சிபாரிசில் இதனை செய்கிறார். இந்தப்போக்கு வரவர அதிகமாகிக் கொண்டே செல்வதாகசலவும் இதனால் புற்றுநோய் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமென்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

இப்பொழுது பெற்றோர், உறவினர்கள் என்ற சமூகவட்டத்திலிருந்து வெளியில் வந்துவிட்டார் ஈழநிலா. உடல், உளரீதியில் முக்கால் பங்கிற்கும் அதிகமாக பெண்ணாக மாறிவிட்டார் நிலா.

அரவாணிகளின் உலகத்தில் உள்ள பிரதான இரண்டு சாவல்களில் முதலாவது வீடுகளை துறப்பது. தாம் யார் என்பதை அவர்கள் உணரும் சமயத்தில், வீட்டில்... சமூகத்தில் அதனை புரிந்து கொள்ளும் பக்குவம் இருப்பதில்லை. வேரைப்பிடுங்கிக் கொள்ளும் சவால் முதலாவது. இப்படி வெளியேறும் அரவாணிகள் தமக்குள் ஒருபிணைப்பை எற்படுத்தி புதியதொரு குடும்பத் தொகுதியாக வாழ்க்கையை தொடங்குகிறார்கள்.

எனினும், தற்போது நிலைமைகளில் ஓரளவு முன்னேற்றம் உள்ளது. அரவாணிகளின் நலனை கவனிப்பதற்கென யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஒரு பிரிவு உள்ளது. அதுதவிர, சில தன்னார்வ அமைப்புக்களும் இயங்குகின்றன.

## ஆண்கள் கல்லூரியில் படித்த பெண்

இந்தப்பகுதிக்காக வேறும் பல அரவாணிகளுடனும் நாம் பேசினோம். நாம்பேசிய அனைவரிடமும் கடந்தகாலம் துயர்நிறைந்த, வலிமிகுந்த காலமாக மனதில் படிந்துள்ளது. பலரிடம் ஒருவித வன்மம் குடிகொண்டுள்ளது. அவர்கள் தம்மை உணர்ந்து கொள்ளத் தொடங்கும் போது, வீடுகளில் அதற்கு அங்கீகாரம் கிடைப்பதில்லை. அதனை மீறி தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும்போது, அவர்கள் மீது பல்வேறு கொடுமைகள் வீடுகளில் பிரயோகிக்கப்படுகிறது. வீட்டு கொடுமைகள் பெரும்பாலும் சமூகத்திற்கு அஞ்சியவையே. ஆணாக இருந்தவர் பெண் அடையாளங்களுடன் பகிரங்கமாக திரிவது குடும்பத்திற்கு அவமானமென வீடுகளில் கருதுகிறார்கள். இதனாலேயே என்ன வழியிலாவது அவர்களின் உணர்வுகளை அடக்கிவிட முயல்கிறார்கள். அந்தக்கொடுமைகளை சகிக்க முடியாமல் அவர்கள் வீடுகளைவிட்டு வெளியில் செல்கிறார்கள். இந்தக்காலமே வன்மமாக அவர்கள் மனதில் படிந்துள்ளது.

வெளிப்படுத்த முடியாத உணர்வுகள்.. இயல்பற்ற இளமைக் காலம்... படைப்பை மீறிய உணர்வுகள்... உணர்வுகளை முடக்க எத்தனிக்கும் வீட்டுசூழல் என அத்தனை கசப்பான காலத்தையும் கடந்தே வந்திருக்கிறார் நிலா. வெறும் 23 வயதுதான் இப்போது நிலாவிற்கு. அதற்குள் எத்தனை கசப்பு, போராட்டங்களை கடந்து வந்திருக்கிறார் என்பதை பேசும் போது புரிந்து கொள்ள முடிந்தது.

‘நான் கல்விகற்றது யாழ் நகரத்தில் உள்ள பிரபல்யமான பிரபலியமான கிறிஸ்தவ ஆண்கள் பாடசாலையில். அங்கு எனது வகுப்பில் என்னைப் போல ஆறு நண்பர்கள் ஒரே வகுப்பில் கல்வி கற்றார்கள். அவர்கள் படிப்படியாக பாடசாலையில் இருந்து இடைவிலகி விட்டனர். இறுதியில் உயர்தரப் பரிட்சைக்கு என்னுடன் இன்னும் ஒருவர் தோற்றியிருந்தார்’ என ஒரு கனவைப் போல கடந்த காலத்தை மீட்டினார் நிலா.

பாடசாலை காலம் முழுவதும் ஒரு ஆணாகவே அவர் இருந்தார். சில கலவையான எண்ணங்கள் மனதிற்குள் ஓடிக்கொண்டிருந்தாலும், தன்னுள்ளான மாற்றங்களை அவர் அறிந்து கொள்ளவில்லை. பாடசாலைக்காலத்தின் பின்னர் தான் மூன்றாம் பாலினம் தொடர்பான தெளிவு தன்னுள் ஏற்பட்டதாக நிலா கூறுகிறார். தன்னைப் போன்ற இன்னும் பலர் இருக்கும் தகவல் கிடைத்து, மெதுமெதுவாக அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அவர்களுடனான அறிமுகத்தின் பின்னரே தன்னுள் இருந்த கலவையான எண்ணங்கள் பெண் என்ற மையத்தை நோக்கி குவிந்ததாக சொல்கிறார்.

இந்த உணர்வுமாற்றத்துடன் நீண்டநாட்களாக தனக்குள்ளாகவே அவர் போராடிக்கொண்டிருந்திருக்கிறார். இந்த மாற்றம் பற்றி வீட்டில் பேச முடியாத நிலையிருந்துள்ளது. கல்வியறிவில்லாத பெற்றோர் அதனை எவ்வாறு அணுகுவார்கள், அவர்களால் புரிந்து கொள்ள முடியுமா என்பதில் நிலா குழப்பத்துடன் இருந்துள்ளார். இறுதியில் மாமாவிற்கு விடயத்தை சொல்லலாமென நினைத்தார். அவரால் தன்னை புரிந்து கொள்ள முடியுமென நம்பினார். ‘என்னை ஒரு பெண்ணாக உணர்கிறேன். இப்பொழுதிருக்கும் வெளியடையாளங்களை துறந்து புதிய அடையாளங்களை தேடப்போகிறேன்’ என ஏழு பக்கங்கள் கொண்ட கடித

**சக ஆண் நண்பர்களுக்கு மத்தியில் அசௌகரியத்தை உணர்ந்தார். ஆண்கள் அனைவரும் ஒன்றாக குளிக்கும் போதோ, உடைமாற்றும் இடத்தில் நிற்கும் போதோ மிகவும் கூச்சமான தன்மையை உணர்ந்ததாக கூறுகிறார்.**

**இ**லங்கையை விட இந்தியாவில் அரவாணிகள் பற்றிய பகிரங்க உரையாடல்கள் நடக்கின்றன. அவர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மூன்றாம் பாலினத்தவராக அடையாளப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. பெரும்போராட்ட வாழ்க்கையின் பின்னரே அரவாணிகள் இந்த நிலையை அங்கு எட்டியுள்ளனர்.

இலங்கையின் பாதுகாப்பான சிகிச்சை மூலமே ஆணுறுப்பை அகற்றும் நடைமுறை உள்ளது. பாதுகாப்பற்ற சிகிச்சைக்கு யாரும் துணிவதில்லை. எனினும், தமிழகத்தில் பாதுகாப்பற்ற சிகிச்சைமூலம் அணுறுப்பை அகற்றுவது வெகுசாதாரணம். இந்த சிகிச்கைக்கு திண்டுக்கல்தான் பிரசித்தம்.

அறுவைசிகிச்சைக்கு முன்னர் முதுகுதண்டு வடத்தில் மயக்கஊசி செலுத்துகிறார்கள். ஒரு மணித்தியாலம், ஒன்றரை மணித்தியாலம் நடக்கும் அறுவை சிகிச்சை. இந்தியப்பணத்தில் பத்தாயிரம் ரூபா இருந்தால் போதும். எனினும், அது பாதுகாப்பற்ற சிகிச்சை. அந்தமுறையில் ஆணுறுப்பை அகற்றுபவர்களில் பெரும்பாலானவர்களிற்கு ஆறுமாதங்களில் சிறுநீரகப்பகுதியில் பிரச்சனைகள் ஏற்பட ஆரம்பிக்கிறது.

இதில் பழைய முறை மிகவும் கொடுமையானது. அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியவர்களை ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள ஏதாவது ஒரு அரவாணி குடிசைக்கு கொண்டு போவார்கள். அங்கு அரவாணிகளின் தெய்வமான பேத்ராகி மாதா படத்துக்கு பூஜை செய்வார்கள். அறுவை சிகிச்சை செய்ய வேண்டியவரை நிர்வாணமாக நிற்க வைத்து, அவர்களது ஆண் உறுப்பை மொத்தமாக ஒரு கயிற்றால் இறுக்கமாக கட்டுவார்கள். பேத்ராகீ மாதாவின் பூஜையின் உச்சகட்டம் போகும்போது சவரக்கத்தியால் அவங்களுடைய ஆண் உறுப்பை வெட்டி விடுவார்கள். இந்த அறுவை சிகிச்சைக்கு எந்தவித மருந்துகளும் பாவிப்பதில்லை. முழுக்க முழுக்க அவர்கள் பெண்ணாக மாற வேண்டும் என்ற உறுதி, தைரியத்தினால் தான் நடக்கின்றது.

அதன் பின்னர்; 40 நாட்கள் அவங்களைத் தனி அறையில் வைத்திருப்பார்கள். அங்கு அவர்களுக்கு கருப்பு தேனீர் அதிகமாகக் குடுப்பார்கள். அப்போது வெளி ஆண்கள் முகத்தை பார்க்கக் கூடாது. கண்ணாடி பார்க்கக் கூடாது. இப்படி பல கட்டுப்பாடுகள் இருக்கிறது. 40வது நாள் எல்லா அரவாணிகளையும் கூப்பிட்டு பெரிய விஷேசம் செய்வார்கள். இது ஒரு பெண் வயதுக்கு வருகிற சடங்கு மாதிரி இருக்கும்.

## பொதுவாக மனிதனின் பாலியல் நடத்தைகள் ஐந்து வகைப்படும்

**1. ஆண் பெண் உறவு**

கிட்டத்தட்ட சனத்தொகையில் 75 வீதமானவர்கள் இவர்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆணை விரும்பும் ஆணாகவோ, பெண்ணை விரும்பும் பெண்ணாகவோ இருக்கமாட்டார்கள். இவர்களே ஆரோக்கியமான சந்தியினரை உருவாக்குகிறார்கள்.

**2. ஆண் + ஆண் உறவு (கோமோசெக்ஸ்)**

ஆண்களின் மீது ஆண்கள் விருப்பம் கொண்டு உறவினைப் வைப்பார்கள் இவர்கள். இந்த வகைக்குள் உள்ள ஆண்கள் சமூகத்தில் அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர். இவர்கள் உயர் பதவிகளிலும் உள்ளனர். குறிப்பாக ஆண்கள் ஒன்றாக சேர்ந்து உள்ள இடங்களில் இவர்கள் அதிகமாக இருப்பார்கள்.

எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு இந்த ஆண் ஓரினச்சேர்க்கையாளர்களது பங்களிப்பு அதிகமாகும். இவ்வாறான 100க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை மற்றும் ஆலோசனையை யாழ்ப்பாணத்தில் பெற்றுள்ளனர். இவரகளில் 50 வீதமானவர்கள் தம்மை மாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர். மீதிப் பேர் தவறான செயல்களில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

100 க்கும் அதிகமான ஆண்களுடம் உறவு வைத்திருந்த ஒருவர் அண்மையில் சிகிச்சை பெற்றிருக்கிறார்.

சிலர் திருமணமாகி குடும்ப வாழ்க்கையை சிறப்பாக நடத்தி குழந்தைகளையும் பெற்றுள்ளனர். எனினும், ஓரினச்சேர்க்கையையே அதிகம் விரும்புகிறார்கள்.

**3) பெண் + பெண் உறவு (லெஸ்பியன்)**

பெண்கள் மீது விரும்பம் கொண்டு, உறவினைப் பேணும் பெண்கள் இந்த வகைக்குள் அடக்கம். இப்படி நம்மத்தியில் ஏராளமான பெண்கள் காணப்பட்டாலும் அவர்களில் ஒரு சிலரையே இனங்கானக் கூடியதாக இருக்கிறது. யாழ்பபாணத்தில் ஒருவரே இவ்வாறு இனங்காணப்பட்டு சிகிச்சை ஆலோசனைகளை பெற்று வருகின்றார்.

**4) பெண்ணாக மாறிய ஆண்**

இவர்கள் ஆணாகப் பிறந்தவர்கள். எனினும், தான் ஒரு பெண் எண்ற உணர்வில் வாழ்பவர்கள். இவர்களது நடை உடை பாவனைகள் எல்லாம் பெண்களைப் போலவே இருக்கும். இருந்தாலும் இவர்கள் ஆரோக்கியமான சந்ததியினரை உருவாக்க கூடியவர்கள்.

**5) ஆணாகும் பெண்**

பெண்ணாகப் பிறந்து ஆணாக தம்மைமைப் பாவனை செய்து வாழ்பவர்கள். இவர்களது உருவ அமைப்பு பொண்ணாக இருந்தாலும் ஆண் போன்ற எண்ணங்கள் உள்ளவர்கள். ஆண்களுக்கு இருக்கும் தைரியத்தினையும் தம்மில் வளர்துக்கொண்டு வாழ்பவர்களாக காணப்படுகின்றார்கள். இவர்களுக்குள் இருக்கும் பெண்மையானது கருக்கட்டலுக்கு உகந்ததாகவும் காணப்படுகிறது.

மொன்றை அனுப்பியுள்ளார். அந்தக்கடிதமும் கிணற்றில் போட்டகல்லானது. புரிந்துகொள்வார் என நிலா நம்பிய மாமா எதுபற்றியும் அலட்டிக்கொள்ளாமல் மௌனமாக இருந்துவிட்டார்.


### பாதிரியாருக்கு படித்த பெண்

க.பொ.த உயர்தரத்தில் நிலா தேறியிருந்தார். பல்கலைகழக கலைப்பீடத்திற்கு தேர்வாகியிருந்தார். எனினும், தான் யார் என்பதை உணர்ந்துகொள்ளாத குழப்பத்தால் பல்கலைகழக வாய்ப்பை உதறிவிட்டார்.

இந்தமனப்போராட்டத்தில் நிலா ஒரு முடிவிற்கு வந்தார். மனதிற்குள் ஏற்பட்ட குழப்பங்களை தீர்த்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாக ஆன்மீகத்தை நாடினார். இடைப்பட்ட நாளில் மனதில் தோன்றிய குழப்பங்;களை ஆன்மீகம் தீர்த்து வைக்குமென அவர் நம்பினார். கிறிஸ்தவ மிசனரியின் இணைந்து கல்வி பயில தொடங்கினார்.

ஆன்மீகமும் அவரது மனக் குழப்பத்தை தீர்க்கவில்லை. சக ஆண் நண்பர்களுக்கு மத்தியில் அசௌகரியத்தை உணர்ந்தார். தன்னால் அவர்களுடன் வழமுடியாது என்ற முடிவிற்கு வந்தார். அங்கு இருந்த காலத்தில் ஆண்கள் அனைவரும் ஒன்றாக குளிக்கும் போதோ, உடைமாற்றும் இடத்தில் நிற்கும் போதோ மிகவும் கூச்சமான தன்மையை உணர்ந்ததாக கூறுகிறார். இன்னொரு விடயத்திலும் அவர் வேறுபட்டிருந்தார். இரவில் தூக்கும் போது அவர்கள் சாறம் உடுத்திருப்பார்கள். ஆனால் தான் பெண்கள் அணியும் பாவாடையின் தன்மையை ஒத்த காற்சட்டையையே அணிந்ததாகவும், அங்கிருந்த நாட்களில் ஆட்களின் முன்னால் மேற்சட்டையை கழற்றியதும் இல்லை என்றார்.

**யா**ழ்ப்பாண கோட்டைக்கு அண்மையில் தினமும் மாலையில் சில அரவாணிகள் முகாமிடுவார்கள். '500 ரூபாஞ் 1000 ரூபா தாருங்கள். உங்களுடன் வருகிறோம்' என 'பேரம்' பேசுகிறார்கள். இப்படி தினமும் உழைப்பதால்இ தன்னார்வ நிறுவனங்கள் ஏற்பாடு செய்யும் வேலைகளை விட்டு ஓடிச் செல்லும் அரவாணிகளும் உள்ளனர்.



'எமக்கு பொறுப்பாக இருந்த அருட்தந்தை எனது உணர்வுகளை புரிந்து கொண்டார். நான் யார் என்பதை அவரால் புரிய முடிந்தது. எனது குடும்பத்துடன் தொடர்பு கொண்டு வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறு பணித்தார். இதன்படி யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் சிரேஸ்ட வைத்தியர் ஒருவரிடம் ஆலோசனை பெற்றேன்.

என்னை பரிசோதித்தவைத்தியர், எனக்குள் எந்தவிதமான ஹோர்மோன் மாற்றமும் இல்லையென்றும், நான்தான் பெண்ணாக வாழ ஆசைப்படுவதாகவும் கூறினார். மனவன ஆலோசனை சிகிச்சைகளிற்கு சென்றால் மட்டும் போதுமானதென்றார்'

இருந்தாலும் வைத்தியரின் கருத்தை நிலா முழுதுமாக ஏற்கவில்லை. வேறுசில நண்பர்களின் உதவியுடன், யாழ் போதனா வைத்தியசாலையின் சிரேஸ்ட சுகாலீதாரப் பரிசோதகரும் உளவள ஆலோசகருமான நக்கீரனின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு பொது வைத்தியசாலையின் வைத்தியர் கபிலனிடம் தனது பிரச்சினைகள் தொடர்பாக பேசினார். நிலாவின் நிலைமையைப் புரிந்து கொண்ட அவர் நிலா முழுமையான பெண்ணாக மாறுவதற்கான சிகிச்சையைப் பெற்று தருவதாக தெரிவித்தார். அவரது வழிகாட்டலும், ஒத்தாசையும் நிலாவை புதிய உலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது.

'நான் புதிதாக என்னை உணரத் தொடங்கியபோது, வீட்டுக்காரருக்கு அது பிரச்சனையாக இருந்தது. பல தடவைகள் வீட்டு அங்கத்தவர்களால் துன்புறுத்தப்பட்டேன். பெரிய ரீப்பை முதல் காற்றுப் பம் வரை எல்லாப்பொருட்களாலும் என்னை அடித்தார்கள். எனது உடலில் உள்ள தழும்புகள், அடையாளங்கள் அரவாணிகள் சந்திக்கும் வீட்டு வன்முறையை சொல்லிக் கொண்டேயிருக்கும்' என்கிறார்.

வாழ்வே ஒரு பெரும் கொடுமையாக மாற, வீட்டைவிட்டு எங்காவது கண்காணாத இடத்திற்கு தப்பிச் செல்வதற்கு முடிவு செய்தார். அவரைப் போலவே வீட்டில் கொடுமைகளை சந்தித்த இன்னொரு தோழியும் கூட கிளம்பினார். தனது கழுத்தில் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை விற்றும், வீட்டில் சிறு செலவிற்கு கொடுக்கப்படும் சொற்ப பணத்தை சேமித்தும் இந்தியா செல்ல திட்டமிட்டார்.

அப்பொழுதுதான் இலங்கைச் சட்டங்கள் குறுக்கே வந்தன. நிலா பார்வைக்கு ஒரு பெண். அணிந்திருந்த ஆடைகளும் பெண்களாடைகள். ஆனால் ஆவணங்களோ, அவரை ஒரு ஆணாக அடையாளப்படுத்தின. வீட்டு நடைமுறைகள் மட்டுமல்ல, நாட்டு சட்டதிட்டங்களும் அரவாணிகளை வஞ்சித்தன. அரவாணிகள் பற்றி இலங்கை சட்டங்களில் எதுவுமே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதிகாரிகளின் பார்வையில் ஆணொருவர் பெண் வேடமிட்டுள்ளார். ஆள்மாறாட்ட சட்டத்தின் கீழ் கைதானார். விசாரணை, தடுத்து வைப்பு என அலைக்கழிவான வாழ்க்கை. இந்திய கனவும் அத்துடன் கலைந்தது.

### அவமான ஆண்குறி

அரவாணிகளின் வாழ்க்கையில் உள்ள பிரதான சவால் இதுவரை பேசிய எதுவுமில்லை. வீட்டிலிருந்து வெளியேறுவதோ, தனித்து வாழும் சிரமம் இவைகள் அனைத்தையும் விட அவர்களின் பிரதான சிக்கல் வேறு. எதையும் மாற்றிவிடலாம். சில அடையாளங்கள் கெட்ட கனவாக உடம்பில் ஒட்டியிருக்கும். ஆம். அரவாணிகளின் உடலில் கெட்ட கனவாக சேர்ந்திருப்பது ஆணுறுப்பு.

தமது உடலில் அது ஒட்டியிருக்கிறது என உணரும், நினைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அசௌகரியத்தை உணர்வதாக கூறுகிறார்கள் அரவாணிகள். அவர்கள் வெளிப்படுத்த நினைக்கும் உணர்விற்கு நேர்எதிரான தோற்றத்தை கொடுப்பது அது. அதனால் அரவாணிகளின் வாழ்வின் தலையாய இலட்சியமாக இருப்பது ஆணுறுப்பை உடலிலிருந்து அகற்றுவதே.

அதனை அகற்றாமல், அவர்கள் பெண்கள் என்ற அடையாளத்தை பெற இலங்கைச்சட்டங்கள் அனுமதிப்பதில்லை. மூன்றாம் பாலினத்தவர் பற்றிய சட்ட ஏற்பாடுகளும் கிடையாது. சட்டத்தை பொறுத்தவரை அவர்கள் ஆண்கள். பெண்கள் என்ற அங்கீகாரத்தை சட்டரீதியாக பெறுவதென்றால் ஆணுறுப்பை உடலிலிருந்து அவர்கள் அகற்றித்தான் ஆக வேண்டும்.

எல்லா அரவாணிகளதும் இலட்சியமாக இது இருந்தாலும் அது இலேசான காரியமல்ல. சிகிச்சையில் ஆணுறுப்பை அகற்றி, பெண் என்ற சட்டரீதியான அங்கீகாரத்துடன் யாழில் இருப்பது மூன்றேமுன்றே பேர்தான். அவர்களில் இருவர்தான் இப்பொழுது இருக்கிறார்கள். ஆனாலும், யாழில் மட்டும் கிட்டத்தட்ட நூறுபேர் வரையான அரவாணிகள் தற்போது இனம்காணப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு இரவு தூங்கச் செல்லும்போதும் நிலா கடவுளிடம் தவறாமல் வேண்டிக் கொள்வாராம். 'விடிந்து எழும்போது பெண்ணாக மாற வேண்டும்' என. இப்படியே நினைத்து நினைத்து இப்பொழுது தனக்கு கடவுள் நம்பிக்கையே இல்லாமல்ப் போய் விட்டதென்கிறார்.

இப்பொழுது நிலா சுதந்திரமான வாழ்வை வாழ்வதாக கூறுகிறார். அரவாணிகள் தொடர்பான தன்னார்வ நிறுவனமொன்றில் பணியாற்றுகிறார். ஆரவாணிகளின் உரிமைக்காக பாடுபடுவதே தனது இலட்சியமென்றும் கூறுகிறார். நிலா தனது வாழ்வை அடிப்படையாக கொண்டு எழுதிய 'மூன்றாம் பாலின் முகம்' என்ற நாவல் விரைவில் வெளியாகவுள்ளது.

### புதிய தாய்

வீடுகளிலிருந்து வெளியேறும் அரவாணிகள் குழுக்களாக இணைகிறார்கள். அப்பொழுது தமக்கிடையில் புதிய உறவுமுறையொன்றை கட்டமைத்து கொள்கிறார்கள். இளைய அரவாணியொருவர், கட்டாயமாக மூத்த அரவாணியொருவரின் மகளாகியே தீர வேண்டும்.

தத்தெடுத்த தாய், வேறு அரவாணிகளையும் தத்தெடுத்திருப்பாரேயானால் அவர்கள் அக்கா, தங்கைகளாவார்கள்.

மூடிய, இறுக்கமான யாழ்ப்பாண சமூகத்தின் போலியான திரைகளை கிழித்துக் கொண்டு வெளிவந்திருக்கிறார் நிலா. ஆரவாணிகள் பற்றிய பிழையான சமூக மதிப்பீடுகளிற்கு அரவாணிகளின் நடத்தையும் ஒரு காரணமாகிவிட்டது. அந்த நடத்தைக்கு காரணம் அவர்களின் உரிமைகளை முறையாக அங்கீகரித்து, சமமாக பார்க்காத தன்மையே.

அரவாணிகள் என்றாலே பிழையாக விளங்கிக் கொள்ளும் நமது சமூகத்தின் முகத்திலறைந்தாற்போல முன்னுதாரணமாக விளங்கும் பலருள் ஒருவரே நிலா. தனது சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்து வாழும் நிலாவிற்கு ஒரு சலூட் அடிக்கலாம்தானே!

**திரு G. நக்கீரன்**
சிரேஸ்ட சுகாதார பரிசோதகர்,
உளவள ஆலோசகர்
யாழ் போதனா
வைத்திய சாலை



**யா**ழ்ப்பாணத்தில் உள்ள 80க்கும் அதிகமான அரவாணிகளுடன் தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணி வருகிறேன். சமூகத்தில் அவர்கள் முறையான அங்கீகாரத்துடன் வாழ யாழ் போதனா வைத்தியசாலையில் பாலியல் நடத்தைகள் தொடர்பான ஆலோசனை மையம் மூலம் உதவுகிறோம். அதுதவிர, சக வாழ்வுக்கான பயணம் என்ற தன்னார்வ தொண்டு அமைப்பையும் நடத்தி வருகிறேன். அவர்களின் சுகாதாரம், உளரீதியிலான ஆரோக்கியத்திற்கு ஆதரவாக செயற்படுகிறோம்.

இவர்கள் ஆணாகப் பிறந்து பொண்ணாக மாற்றம் அடைந்தாலும் சட்டரீதியில் இவர்கள் ஆண்களே. வீடுகளில் வாழ முடியாமல் வெளியுலகத்திற்கு வரும் இவர்களின் வாழ்க்கை பெரும் சோதனையானது. முக்கியமாக உளரீதியான பிரச்சினைகள். இதனைத் தீர்க்க அவர்கள் முதலில் தம்மைப்போல் உள்ள அரவாணிகளைத் தேட ஆரம்பிக்கிறார்கள். அவர்களுடன் நட்பை ஏற்படுத்தி காலப்போக்கில் அனைவரும் ஒரே குடும்பம் என்று மனதளவில் ஒன்றித்து வாழ ஆரம்பிக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்திலே அவர்களுக்கு இன்னொரு பிரச்சினை ஆரம்பமாகின்றது.

அது தான் பொருளாதார பிரச்சினை. இவர்களுக்கு உதவ யாருமே இல்லை. வேலை வழங்கவும் தயாராக இல்லை. வாழ்க்கைச் செலவை எவ்வாறு ஈடுகட்டுவதென்ற கேள்வி எழுகிறது. இதனைத் தீர்ததுக் கொள்ள வேலை வாய்ப்புக்களைத் தேடி பல இடங்களுக்கு அலைகிறார்கள். சில இடங்களில் மட்டுமே இவர்களுக்கு வேலை கிடைக்கிறது.

இவர்களில் பெரும்பாலாணவர்கள் அடிப்படையில் கல்வியறிவு இல்லாதவர்களாக காணப்படுவதனால் தம்மை பாதுகாக்க முடியாத நிலை உருவாகின்றது. வேலை செய்யும் இடங்களில் இவர்களுடன் பலர் தவறாக நடக்க முற்படுகிறார்கள். இங்கு இவர்களது அடிப்படை உரிமைகள் அனைத்தும் பறிக்கப்படுகிறது. சட்ட உதவியை நாடி பொலிசில் முறையிட சென்றால் இவர்கள் ஒரு ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்க வேண்டும். இப்படி இருந்தால் ஆள்மாறாட்ட வழக்கில் இவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

இப்படி தமக்கு சமூகத்தில் இழைக்கப்படும் வன்முறைகளில் இருந்து. தப்பிக்கவும் தமக்கான வருமானங்களை உழைக்கவும் இவர்கள் பல குற்றச்செயல்களை செய்ய ஆரம்பிக்கிறார்கள். சிலர் போதைப்பொருட்களுக்கும் அடிமையாகின்றார்கள்.

இவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள், விழிப்புணர்வு, ஆலோசனை சேவைகளை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது வழங்குகின்றன. அதில் காட் ரூ காட் நிறுவனம் முக்கியமானது.

இப்பொழுது அரவாணிகள் தொடர்பான விழிப்புணர்வு இலங்கையில் அதிகரித்து செல்கிறது. எண்ணற்ற விழிப்புணர்வுகள் ஆலோசனைகள் என்று செய்தாலும் அவர்களில் சிலர் தம்மை மாற்றிக் கொள்ள முடியாது என்றும் நிற்கிறார்கள்.

பாலியல் தொழிலில் ஈடுபடுதல், களவு எடுத்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் அரவாணிகளில் ஒருபகுதியினர் மீது உள்ளது. அதேபோல, வேலை தேடி வருபவர்களில் சிலர் கிடைக்கும் வேலைகளை சரியாக செய்வதில்லை. உணவகங்கள், காமன்ஸ்கள், குழந்தை பராமரிப்பு என் இவர்களுக்கு கொடுத்த வேலைகளை இவர்கள் தமக்கு உகந்தது அல்ல என தட்டிக்கழிக்கின்றனர்.

இவர்களுக்கு மருத்துவசெலவிற்கு மாத்திரம் மாதாந்தம் 4000 ரூபாவிற்கு மேல் தேவைப்படுகிறது. இவர்கள் பெண்ணாகவோ அல்லது ஆணாகவோ மாறவேண்டுமானால் அதற்கான ஓமோன்களை பெற்றுக் கொள்ளவே இந்த செலவு ஏற்படுகிறது.

இந்த செலவுகளை நிவர்த்தி செய்ய இவர்களில் பலர் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர். உலகம் முழுவதும் அதிகளவிலான எயிட்ஸ் தொற்றுக்கு இவர்களே காரணமாக இருக்கிறார்கள். கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட 19 எயிட்ஸ் நோயாளிகளில் பெரும்பாலானோர் அரவாணிகள்தான்.

## பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவரா?

நீங்கள் புதிய தேடல் உள்ளவரா?
சுவாரஸ்யமாக எழுதத் தெரிந்தவரா?
பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவரா?
இன்றே இணையுங்கள்
தீபம் வார இதழுடன்.
பகுதிநேரமாகவோ,
முழு நேரமாகவோ பணியாற்றலாம்.



உடனடியாக உங்கள் சுயவிபரத்தை அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
deepamdesk@gmail.com



## திருஷ்டி படாத த்ரிஷா!

பதின்மூன்று வருடங்களின் முன்னர் சினிமாவில் அறிமுகமாகும் போது எப்படியிருந்தாரோ, அப்படியே இருக்கிறார் த்ரிஷா. புற்றீசல்கள் போல நாளொரு நடிகை முளைத்துக் கொண்டிருந்தாலும், அவர்களில் சிலரைத்தான் ரசிகர்கள் கொண்டாடுகிறார்கள். அப்படி ரசிகர்கள் உச்சந்தலையில் வைத்து கொண்டாடும் நடிகைகளில் ஒருவர்தான் த்ரிஷா. தற்போதும் கைவசம் ஐந்து படங்கள் வைத்திருக்கிறார். இதையெல்லாம் விட, அம்மணியின் கைக்குள் இப்பொழுது 40 இலட்சம் ரசிகர்கள் உள்ளனராம். ரவிற்றரில் 20 இலட்சம், பேஸ்புக்கில் 20 இலட்சம் என மொத்தம் 40 இலட்சம்பேர் அம்மணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்களாம்.



## ஆச்சரியப்பட்டவர்களை அலற வைத்த சமந்தா

சென்றவருடம் சமந்தாவின் பின்னால் அலைந்த திரையுலகு இப்போது அவர் பெயர் கேட்டால் அலறுகிறது. அஞ்சான், 10 எண்றதுக்குள்ள படங்களின் தோல்விதான் அதற்கு காரணம்.விக்ரம், சூர்யா, விஜய், தனுஷ் என்று முன்னணி நடிகர்களுடன் நடித்து வருகிறார் சமந்தா. அதில், விக்ரமுடன் நடித்த 10 எண்றதுக்குள்ளயும், சூர்யாவுடன் நடித்த அஞ்சானும் வெளியாகி மண்ணை கவ்விவிட்டன. தனுஷுடன் நடித்த தங்கமகன், அட்லி இயக்கத்தில் விஜய்யுடன் நடித்து வரும் காக்கி, சூர்யாவுடன் நடித்துவரும் 24 ஆகிய படங்கள் வெளிவர உள்ளன.

இரண்டு படங்கள் அடுத்தடுத்து தோல்வியடைந்ததால் சமந்தாவை படங்களில் ஒப்பந்தம் செய்ய தயாரிப்பாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

தங்கமகன் வெளியாகி சமந்தா மீதான துரதிர்ஷ்டத்தை துடைத்தால்தான் உண்டு.



## பேய் ஜோடி!

வரிசையாக பேய்ப்படங்களில் நடித்து கல்லா கட்டியவர் லாரன்ஸ். முனி, காஞ்சனா, காஞ்சனா 2 என அத்தனையும் கல்லா கட்டியது. ஏதோ நானும் இருக்கிறேன் என இதுவரை இருந்துவந்தவர், இப்பொழுது வசூல் குவிக்கும் நாயகனாகிவிட்டார். இப்பொழுது புதுப்படமொன்றில் ஒப்பந்தமாகியுள்ளார். ஜீவாவை வைத்து 'சிங்கம்புலி' இயக்கிய சாய் ரமணி இயக்கும் புதுப்படத்தில் பொலிஸ்காரராக நடிக்கிறாராம். அவருக்கு ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளதும் பேய்தானாம்... மன்னிக்கவும், பேயாக நடித்தவர்தான். நிக்கி கல்ராணி. 'டார்லிங்' படத்தில் பேய் வேடம் போட்டவர். பேய் வேடம் போட்ட இருவரையும் வைத்து எடுக்கப்படும் படம் நிச்சயம் பேய்ப்படம்தான் என நினைத்து ஏமாந்து விடாதீர்கள். இது பொழுதுபோக்கு படமாம்.

# டூரிங் டாக்கீஸ்



## ஓகே சொல்வாரா தமன்னா?

விஜயகாந்த் தனது மகன் சண்முகபாண்டியனை வைத்து தயாரித்த படம் சகாப்தம். வெற்றிப்படமா? தோல்விப்படமா? என்பதெல்லாம் தெரியாது. அவர்களும் சொல்லவில்லை. மும்பை புதுமுக அழகிகளை ஜோடியாக நடிக்க வைத்திருந்தனர். இப்பொழுது அடுத்த படம் தயாராகிறது. அப்பாவே தயாரிக்கிறார். சில இயக்குனர்களிடம் விஜயகாந்த் கதை கேட்டிருக்கிறார். அதில் சரித்திர பின்னணி கொண்ட கதையொன்று கப்டனிற்கு பிடித்துவிட்டதாம். உடனே பரபரப்பாக வேலைகளை தொடங்கிவிட்டார்கள். இப்பொழுது ஜோடிக்கு வலைவிரித்துள்ளனர். பல பட்சிகளுடன் பேசியும் ஒன்றும் சிக்கவில்லையாம். இறுதியாக தமன்னாவுடன் பேசிவருகிறார்களாம். விஜயகாந்த் மகனுடன் தமன்னா ஜோடி போடுவாரா என்பதில் பலருக்கு சந்தேகம் உள்ளதாம். சரித்திரக்கதை, கண்டபடி வாள்கள் சுழறும், மந்திரம் தந்திரம், ருத்திரமாதேவி சீன்ஸ் எல்லாம் உள்ளதென தமன்னாவிற்கு ஆசைகாட்டுகிறார்களாம்.



## சிவி குமார் படத்தின் கதாநாயகியான டாப்சி

'அட்டக்கத்தி', 'பீட்சா', 'சூது கவ்வும்', 'வில்லா2', 'தெகிடி' ஆகிய வெற்றிப்படங்களை தயாரித்தவர் சி.வி.குமார். இவர் சொந்தமாக வைத்துள்ள திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் மூலம் படங்களை தயாரித்து, வெளியிட்டு வருகிறார். தமிழ் சினிமாவில் தரமான தயாரிப்பாளராக வலம் வந்த சி.வி.குமார் தற்போது இயக்குனராகவும் அவதாரம் எடுத்துள்ளார். இவர் இயக்கும் புதிய படத்தில் 'யாருடா மகேஷ்' படத்தில் நடித்த சந்தீப் கிஷன் நாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக நடிக்க வைக்க பல நடிகைகளை பரிசீலித்து வந்த நிலையில், தற்போது, டாப்சியை ஹீரோயினாக தேர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது. சமீபகாலமாக ஹிட் படங்களில் நடித்து வரும் டாப்சிக்கு இந்த படமும் ஹிட் கொடுக்கும் என நம்பப்படுகிறது. திரில்லர் படமாக உருவாகும் இப்படத்தை நவம்பர் இரண்டாவது வாரத்தில் தொடங்கவிருப்பதாக கூறப்படுகிறது.




## பையா இந்தி ரீமேக்கில் ஸ்ருதி...?

திருப்பதி பிரதர்ஸுக்கு இருக்கும் கடன்கள் காரணமாக லிங்குசாமியால் தமிழில் படத்தை தயாரிக்கவோ, இயக்கவோ முடியாத நிலை. அதனால், தனது பையா படத்தை இந்தியில் இயக்க முடிவு செய்து அதற்கான வேலைகளில் இறங்கியுள்ளார். அஞ்சானில் நடித்த வித்யுத் ஜம்வாலை ஹீரோவாக்கி பையா இந்தி ரீமேக்கை எடுப்பதாக திட்டம். நாயகி வேடத்தில் நடிக்க அவர் ஸ்ருதியை அணுகியிருப்பதாக கேள்வி. உத்தம வில்லன் விவகாரத்தில் லிங்குசாமி கமல் மீது ஆழ்ந்த கசப்பில் இருக்கிறார். கமலை அவர் மறைமுகமாக விமர்சனமும் செய்தார். அப்படியொரு நிலையில் அவரது மகளை லிங்குசாமி அணுகுவாரா என்ற கேள்வியும் உள்ளது. பையா இந்தி புராஜெக்ட் இப்போது தொடக்க நிலையில் உள்ளது. அதனால் எது குறித்தும் முடிவாக இப்போது சொல்ல முடியாது என கழன்று கொள்கிறார் லிங்கு. மலிந்தால் கடைக்கு வரத்தானே செய்யும்.



## ராசியான ராகுல்!

தமிழில் ஈயோட்டிக் கொண்டிருப்பார்கள். இனி சரிவராதென தெலுங்குப் பக்கம் போவார்கள். தயங்கித் தயங்கிப் போனவர்கள், தாறுமாறாக கல்லா கட்டுவார்கள். நடிகைகள் விடயத்தில் இது தொடர்கதை. லேட்டஸ்ட் உதாரணம் ராகுல் ப்ரீத் சிங். தமிழில் வந்ததும் தெரியாமல், போனதும் தெரியாமலிருந்த மூன்று படத்தில் நடித்தார். படத்திற்காக பேசப்படவில்லை. அழக்காக இருக்கிறார் என்பதற்காக பேசப்பட்டார். இப்படியே ஈயோட்ட முடியாதென தெலுங்கு போனார். இன்றைய திகதியில் தெலுங்கின் கனவுக்கன்னி. கோயில்கட்டாத குறைதான். அத்தனை முன்னணி ஹீரோக்களுடன் ரவுண்டு கட்டுகிறார். இப்பொழுது புதிதாக நடிக்கும் 'புரூஸ்லி 2' படத்தை தமிழிலும் வெளியிடவுள்ளனராம். ராம் சரணோடு ஜோடியென்பதில் ராகுலும் பூரித்துப் போயிருக்கிறாராம்.



# எல்லோருக்குமிருக்கும் வானம்

யோ.கர்ணன்
Yo.karnan@yahoo.com

இன்றைக்குத்தான் இப்பிடியொரு கண்றாவிக்குள்ள மாட்டுப்பட்டிருக்கிறன். கண்றாவியென்றால் அப்பிடியொரு கண்றாவி. பஸ் யன்னலுக்குள்ளால வெளியில பார்க்கவே சங்கடமாயிருக்குது. ஒரு 'பிட்டு' படம் பார்க்கிற பீலிங். என்னதான் இரகசியமாக அந்தமாதிரி படம் பார்த்தாலும், பகிரங்கத்தில காட்டிக் கொள்ளலாமா?

எப்பவுமே பஸ் பயணங்களில நான் யன்னல்கரையோடதான் இருப்பன். நல்ல காற்றும் விழும். நாலு புதினத்தை பார்த்ததாகவும் முடியும். முக்கியமாக இன்னொரு காரணமுமிருக்குது. பஸ்சை இடையில மறிச்சு குழந்தைப் பிள்ளையயோட ஏறுற பொம்பிளையளுக்கு சீற் குடுக்க தேவையில்லை.

ஆனால் யன்னல்கரையுடன் இருந்ததினால் இன்றைக்கு இந்த கண்றாவியை பார்க்க வேண்டியிருக்கிறது. உண்மையில நான் ஒரு இரண்டும் கெட்டான் நிலைமையிலதானிருந்தன். வெளியில நடக்கிற கூத்தைப்பார்க்கவு மேலாமல் கிடக்குது. சரி. பார்க்கமலிருப்பமென்றால் அதுவும் முடியாமலிருக்குது. இருபது இருபத்திரண்டு வயசு மதிக்கத்தக்க ஒருபொடியனும் பெட்டையும் கீழே நிற்கினம். பஸ்ஸ்ராண்டின் கடைசிக் கட்டடத்துடன் ஒட்டியபடி இந்த பஸ் நிற்கிறது. பஸ்சுக்கும் கட்டடத்திற்குமிடையிலிருந்த இரண்டு மூன்று அடி இடைவெளியில் இருவரும் நிற்கினம். வெளியாட்களின் பார்வைபடாத இடமது. பொடியன் என்னடாவென்றால், அங்க இஞ்சையென்று பெட்டையின்ர பலபத்து இடங்களிலயும் தொட்டுக் கொண்டிருக்கிறான்.

ஆன பெட்டையென்றால் தடுக்கிறதுதானே. தடுக்கிற மாதிரி ஒரு அக்சன் போட்டுக்கொண்டு, யாரும் தங்களை கவனிக்கினமோ என்றுதான் பார்க்கிறாள். எத்தனையாயிரம் பேர் வந்துபோற இடத்தில நின்று இந்த கூத்து ஆடுதுகள். என்ன பிறப்புகளோ தெரியயில்லையென்று மனசுக்குள்ள திட்டிக் கொண்டிருந்தன். எங்கட தமிழ்ப் பண்பாடும் பாரம்பரியமும் இந்த மாதிரியான எளிய சீவனுகளால தான் காற்றில பறக்குது. இதுகளிற்கு ஒரு மேய்ப்பராக இல்லாவிட்டாலும், கொஞ்சம் நல்வழிப் படுத்த வேணுமென்று என்ர மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

இப்பிடியான கட்டங்களில கப்டன் விஜயகாந்திட்ட இந்த இரண்டுசீவனுகளும் மாட்டுப்பட்டிருக்க வேணும். அரை மணித்தியாலம் அட்வைஸ் பண்ணி அதுகளை கொன்றிருப்பார். எனக்கு இப்படியான ஐடியாக்கள் வராது. எனக்கு தெரிந்த ஒரே வழி, விடாமல் அதுகளை பார்த்துக் கொண்டிருக்கிறதுதான். என்ன தலையா போகப்போகிறதென விடாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்பிடிப்பார்த்தாவது தமிழ்பண்பாட்டை பாதுகாக்கலாமாவென பார்த்தேன். ஆனால் அதுகள் இதைப்பற்றி கவலைப்பட்ட மாதிரி தெரியவில்லை. கனபேர் பார்க்கிற நடு பஸ்ஸ்ராண்டில நிற்காமல், கொஞ்சப்பேர் பார்க்கிற இதில நிற்கலாமென அதுகள் யோசித்திருக்கலாம்.

அனேகமாக எங்கேயோ தூர இடத்திலயிருந்து ரவுணுக்கு படிக்க வந்ததுகளாக இருக்க வேணும். அறிஞ்ச தெரிஞ்ச சனங்கள் வரமாட்டுதுகள் என்ற துணிவில நிற்குதுகள் போல என யோசிச்சன். முந்தி எங்கட காலத்தில இப்பிடியே நிலைமையிருந்தது? முந்தி எங்கட காலமென்றதும், ஏதோ பல பத்து வருசமென யோசிக்க வேண்டாம். இரண்டு,மூன்று வருசம் முதல்தான். அப்ப நாடு இப்பிடியா இருந்தது? நானும் அந்த நேரம் பஸ்சேறி ஒரு மணித்தியாலம் பயணம் செய்து ரவுணுக்கு வந்துதான் படிச்சிட்டு போனனான். என்னை மாதிரியே ஏராளம் பொடியளும் வந்தவையள்தான்.

கனக்க ஏன், இப்பிடியொரு பஸ்சிலதான் கிரிசாவும் வந்தவள். பஸ் நெருக்கத்துக்க கூட அவளோட முட்டுப்பட பயந்து கொஞ்சம் தள்ளித்தான் நிற்பன். பிறகு, தெரிஞ்ச பெட்டையொருத்தியிட்டக் குடுத்துத்தான் அவளுக்கு கடிதம் அனுப்பினனான். அப்ப எங்களுக்கு வீட்டுக்காரருக்கோ, இயக்கத்துக்கோ, ஆமிக்காரருக்கோ பயமில்லை. எங்கட பயமெல்லாம் கலாச்சார சீரழிவென்ற சொல்லுக்குத்தான்.

அந்த நேரம் வந்த பேப்பருகளிலயும், நோட்டீசுகளிலயும் இந்த சொல் அடிக்கடி வரும். கலாச்சார சீரழிவில ஈடுபட்டவர் நையப்புடைக்கப்பட்டார். எச்சரிக்கப்பட்டார். சுடப்பட்டார் என்ற கணக்கில வரும். ஏன் வீண் சோலியை என்றிட்டு, படிக்கிற காலத்தில பெட்டையளில இருந்து மூன்றடி தூரம் தள்ளியே நின்றன்.

பஸ் கோர்ண் அடிச்சுது. வெளிக்கிடப் போகுதுபோல. பஸ் வெளிக்கிட்டால் மறைவிருக்காதுதானே. பொடியனும் அந்தரப்படத் தொடங்கினான். என்ன கருமத்துக்கென்று தெரியவில்லை. நானும் இமை வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன்.

முன்னுக்கு ஆரோ ஏதோ கேட்டது மாதிரியிருந்தது. என்னைத்தான் யாரும் கதை கேட்கினமோ தெரியவில்லையென திரும்பின்ன். அது முன் சீற்றில இருக்கிறவை தங்களுக்க கதைச்சுக் கொண்டிருக்கினம். பொடியனை தவறவிடக் கூடாதென 'டக்'கென திரும்பினேன்.

இடைப்பட்ட இந்த ஒன்றோ இரண்டோ செக்கனில பொடியன் பாய்ந்து பெட்டையின்ர கன்னத்தில கொஞ்சிப்போட்டான். நான் பார்க்கத்தான் அவனின்ர உதடு பிரிய மனமில்லாமல் அவளின்ர கன்னத்திலயிருந்து பிரியுது. தமிழ் பண்பாட்டை காப்பாற்றும் எனது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. கடைசியில் ஒரு 'பிட்'டு படம் பார்த்த உணர்வுதான் மிஞ்சியது.

பஸ் மெதுவாக நகர வெளிக்கிடத்தான் நாலைந்து பெட்டையள் அடிச்சுப்பிடிச்சுக் கொண்டு ஏறிச்சினம். அவையளும் ரவுணுக்கு படிக்க வந்திருக்க வேணும். கையில புத்தகம் கொப்பியள் வைச்சிருந்தினம். ஓடியோடி ஆட்கள் இல்லாத சீற்றுகளில இருந்திச்சினம். எனக்கு பக்கத்திலயுமொருத்தி இருந்தாள். என்னைப்பார்த்து இலேசாக

> இவ்வளவு சனத்துக்குள்ளயும் முத்தம் குடுத்து பிரியிற அளவு துணிவு என்னட்டயிருக்கவில்லை. பஸ்சை விட்டு இறங்கியதும், அவள் யன்னலுக்குள்ளால் எட்டிப்பார்த்து கையசைத்தாள்.

சிரித்த மாதிரியுமிருந்தது. நானும், சிரிக்கிறனோ இல்லையோ என்று அவவுக்கு டவுட் வரத்தக்கதான அக்சன் ஒன்றை குடுத்தன்.

அவள் பஸ்சேறும் போது நான் வடிவாக கவனிச்சிருக்கயில்லை. இப்பதான் கவனிச்சன். அப்பிடியொரு வடிவு. அவளுக்கு பக்கத்தில நானிருக்க குடுத்து வைச்சிருக்க வேணும். எல்லாம் நான் செய்த பூர்வ ஜென்ம புண்ணியம். இப்பிடியொரு சந்தர்ப்பம் வாய்த்தது. நீங்கள் அனேகமாக சாண்டில்யனின் கதையள் வாசிச்சிருப்பியள். அவரின்ர எல்லாக் கதையிலயும் வாற அரசிளங்குமரிகளைப்பற்றி ஏழெட்டுப் பக்கத்தில வர்ணிச்சிருப்பார். அது அப்பிடி. இது இப்பிடியென. ஒரு சிறுகதையில நான் அவளை அவ்வளவு தூரம் வர்ணிக்க ஏலாது. ஆகவே சுருக்கமாக சொல்லுறன்.

அவர் ஏழெட்டு பக்கத்தில எழுதினதை ஒரு வசனத்தில சுருக்கினால் இப்பிடித்தான் வரும் 'அந்த மாதிரிச்சரக்கு'. எனக்கென்றால் இருப்புக் கொள்ளவில்லை. அவளின்ர கவனத்தை என்ர பக்கம் திருப்ப பல முயற்சியள் செய்து கொண்டிருந்தன். அப்பிடி திரும்பினன். இப்பிடி திரும்பினன். செருமினன். நொக்கியா போனை எடுத்து வைச்சிருந்தன். அவள் ஆள் ஒன்றுக்கும் மசியிற மாதிரித் தெரியவில்லை. என்னத்தை பார்க்கிறாள் தெரியவில்லை. முன்னாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறாள். இருக்கும்தானே, கண்ணுக்கு இலட்சணமான பெட்டையென்றால் இதுவரை எத்தனை

தீபம் தொலைக்காட்சியை இலங்கையிலும் பார்க்கலாம்
TV

Channel name Deepam TV
Satellite Eutelsat 70B @ 70.5E
frequency 11356,
Polarization vertical
symbol rate 44900


பொடியள் பக்கத்திலயிருந்து இந்த அக்சனுகளை போட்டிருப்பினம்.

கடைசியில உயிரைப்பணயம் வைக்கிற மாதிரி ஒரு ஐடியா வந்தது. என்ர அகராதியில இதெல்லாம் இதுவரை இருக்கவில்லை. இப்பதான் ஆரம்பிக்குது. முந்தி மாதிரி இப்ப இல்லைத்தானே. கலாச்சார சீரழிவு சம்பந்தமாக நடுக்கம் தாற செய்திகளும் வாறதில்லை. பேப்பர்களில மட்டும் கசூரினா பீச்சில நடக்கும் கலாச்சார சீரழிவுகளினால் மக்கள் விசனம் என்பது மாதிரி வரும். முந்தி மாதிரியில்லாமல் இப்ப எங்கட ஆக்கள் விசனமடையிறதோடயே நிறுத்திக் கொண்டுவிடுகினம்.

பெட்டையிட்ட மெல்ல கதை குடுத்தன். பெட்டை ஆரம்பத்தில எல்லாத்திற்கும் சிரித்தது. பிறகு தான் பதில் சொன்னது. என்ர ஐடியாவும் நன்றாக வேலை செய்தது. நானும் ஏதோ பெரிதாக நினைச்சிருந்தன். நினைத்தது மாதிரி ஒன்றுமிருக்கவில்லை. நான் போட்ட அடித்தளமிதுதான்.

"ஹலோ.. மாவிட்டபுரம் கன தூரமோ?.."

சிரித்தாள். பிறகு, "இல்ல .. பக்கத்திலதான்.."

"பக்கத்திலயென்று?.."

சிரித்தாள். " ம்.. எனக்கு சரியா சொல்லத் தெரியேலை... ஒரு பத்து பன்னிரண்டு கிலோமீற்றர் வரும்.."

"ஓ.. ம்.. அதுசரி..போறதுக் கிடையில ஏதாவது பிரச்சனை வருமே?.."

"பிரச்சனையென்று?.."

"அதுதான் ஆமிச் செக்கிங்... கிக்கிங்.."

"ஒரு இடத்தில ஐ.சி பார்ப்பினம்... அவ்வளவுதான்.."

"பிரச்சினையில்லைத்தானே.."


"ஐயோ இல்லை... நீங்க அங்க வாறது பெஸ்ற் ரைமா?.."

"ம்.."

"நான் மாவிட்டபுரத்தில இறக்கி விடுறன்.."

"தாங்ஸ்.. அதுசரி.. உங்கட பேரை இன்னும் சொல்லயில்லை.."

இந்த அத்திவாரத்திலயிருந்து மளமளவென கட்டடம் கட்டத் தொடங்கினேன். வேகமென்றால் சொல்லி வேலையில்லை. கட்டடம் இரண்டாவது மாடிக்கு போக அவள் என்னோட நெருங்கியிருந்து கொண்டு



என்ர காதுக்குள்ள குசுகுசுத்துக் கதைக்கத் தொடங்கினாள். என்ர ரெலிபோனை வாங்கி செக் பண்ணினாள். நானும் அவளின்ர ரெலிபோனை செக் பண்ணினன்.

கட்டடம் மூன்றாவது மாடிக்கு வர அவள் இடையிடையே என்ர தோளில சாய்ந்து இருந்த மாதிரியிருந்தது. எனக்கு ஒரு சின்ன சங்கடமாகவுமிருந்ததுதான். பஸ்சுக்குள்ள கன பேரிருக்கினம். என்ன நினைப்பினம். பிறகும் பார்த்தன், இந்த மாதிரிச் சந்தர்ப் பங்கள் எப்பொழுதும் வராது. பஸ்சில இருக்கிறதெல்லாம் தெரியாத ஆக்கள்தானே. நானும் அவளின்ர கையை பிடிச்சன். அவள் என்ர தோளில சாய்ந்திருந்ததினால் காற்றடிக்கும் போது அவளது தலைமுடி என்ர முகத்தில படர்ந்தது. உண்மையில் அது அற்புதமான பொழுதாகயிருந்தது. அவளின்ர கூந்தல் நல்ல வாசம் வேறு. அந்த நேரத்திலயும் எனக்கு பாண்டிய மன்னன்தான் ஞாபகத்திற்கு வந்தான். இப்ப யோசிக்க, அந்த மனுசனுக்கு வந்த சந்தேகத்தில ஒரு பிழை சொல்ல ஏலாமல்கிடக்குது.

நான் அவளிட்டக் கேட்டன் "உம்மட கூந்தலுக்கு இயற்கையி லேயே மணமிருக்குதா.." என. அவள் ஐந்து நிமிடத்திற்கு குறையாத நேரம் விழுந்து விழுந்து சிரித்தாள். தான் இன்று காலையில்தான் நடிகை அனுஸ்க்கா விளம்பரம் செய்யும் சம்போ வைத்து முழுகியதாகவும், இல்லாவிட்டால் விசயம் தெரிந் திருக்குமெனவும் சொன்னாள்.

கட்டடம் இன்னும் கொஞ்சம் வளர, ரெலிபோன் நம்பருகளை பரிமாறிக் கொண்டோம். நம்பரை தந்துவிட்டு. "நைற்றில கோல் பண்ணுங்க.." என்றாள். கன சினிமாவிலஇப்பிடியான சீனுகளை பார்த்திருக்கிறன். இரண்டு பேரும் கட்டிலில படுத்திருந்து ரெலி பொனை காதுக்கள்ள வைச்சு குசுகுசுக்கிறசீனுகள் இனிமேல்என்ர வாழ்க்கையிலயும் ஓடப் போகுது. எங்கட சீற்றுக்குப் பக்கத்தில நிற்கிற ஒரு பொடியன் வைச்ச கண் எடுக்காமல் எங்களயே பார்த்துக் கொண்டிருக்கிறான். எனக்கு கொஞ்சம் சங்கடமாயுமிருந்தது. என்ர பிடியிலயிருந்து அவளின்ர கையை விடுவிச்சிட்டன். அவள் என்ர காதுக்குள்ள முணுமுணுத் தாள் "நாறின மீனை பூனை பார்த்த மாதிரி ஒரு குரங்கு பார்த்துக் கொண்டு நிக்குது.. என்ன பிறப்புக்களோ.. ச்சா.. கொஞ்சமும் டீசண்ட்டில்லாமல்.."

அவனும் என்ர ரைப் பொடியன் தானோ என்னவோ. தமிழ் பண் பாட்டை காப்பாற்ற முயல்கிறா னோ தெரியாது. நானும் கொஞ்ச நேரம் பேசாமலிருந்து பார்த்தன். அவன் விட்டுக்குடுக்கிற மாதிரித் தெரியவில்லை. நானும் கனநேரம் விட்டுக் குடுத்துக் கொண்டு இருக்க ஏலாது. இந்தப் பயணமே பன்னிரண்டு கிலோ மீற்றர் தூரப்பயணம்தான். இதுகளை யோசிச்சு சரிவராதென திரும்பவும் அவளின்ர காதுக்குள்ள குசுகுசுக்கத் தொடங்கினன்.

இடையில ஆமிக்காரர் அடை யாள அட்டைசெக்பண்ணிச்சினம். இறங்கிப் போகேக்க சொன்னாள் "நீங்கஎன்னைவிட சரியான உயரம்.." அவள் எதிர்காலத்தில மாலை மாற்றும்போது எற்படும் சிரமங் களை யோசிச்சிருக்கலாம். அடை யாளஅட்டை பரிசோதித்த ஆமிக்காரன் ஒரு பொடித்தரவளி. ஒரு ரொமான்ஸ் சிரிப்போடு கேட் டான் "கேர்ள் பிரண்ட்டா.." நான் தலையாட்டினன்.அவன் என்னைப் பார்த்து கண்ணடிச்சான். திரும்பவும் பஸ்சேறி கொஞ்ச தூரம் போனதும் நான் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது.

இவ்வளவு சனத்துக்குள்ளயும் முத்தம் குடுத்து பிரியிற அளவு துணிவு என்னட்டயிருக்கவில்லை. இரவுகட்டாயம்போன்பண்ணுவன் என்ற வாக்குறுதி கொடுத்து இறங் கினன். பஸ்சை விட்டு இறங்கியதும், அவள் யன்னலுக்குள்ளால் எட்டிப் பார்த்து கையசைத்தாள். நான் கண்ணடிச்சன். அவள் தொலை பேசியை எடுத்துக் காட்டினாள். பஸ் போய்விட்டது. அவளுக்கு உடனடி யாகவே அழைப்பு ஏற்படுத்த வேண்டும் போலிருந்தது. இரவு அழைப்பை ஏற்படுத்துவதாக சொல்லியிருந்தாலும், நான் உடனடி யாகவே போன் பண்ணுவேனென அவளும் எதிர்பார்த்திருக்கலாம். அப்போது கொஞ்சம் பலமாக காற்று வீசியது.கண்களை மூடினேன்.காற்று முகத்தை வருடியபடி கடப்பது, அவளது கூந்தல் முகத்தில படர்வது போலிருந்தது.

ஏனோ தெரியவில்லை, அந்த பேரூந்துதரிப்பிட பொடியன் என்னைப்பார்த்து சங்கடப் பட்டிருக்க தேவையில்லையென்று அப்போது பட்டது. யாரையும் பற்றி கவலைப்படாமல் அவன் அவளை முத்தமிட்டிருக்க வேண்டும். மிக நீண்ட நேரம். கன்னத்திலல்ல. உதட்டில்.



141வது உலக அஞ்சல்தினத்தை முன்னிட்டு வடமாகாண அஞ்சல்தின நிகழ்வுகள் அண்மையில் வவுனியாவில் நடந்துள்ளன. அஞ்சல்மா அதிபர் டி.எல்.பி.றோகண அபேவர்த்தன இதில் கலந்து கொண்டார்.





# கண்ணீர் அஞ்சலி



அமரர்

**பொன்னையா குருகுலசிங்கம்**

(பாரம்பரிய காவடிக் கலைஞர்)

வவுனியாவை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா குருகுலசிங்கம் அவர்கள் 22.10.2015 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

உறவினர்கள்
வவுனியா.

# எவ்வளவு அடிச்சாலும் வலிக்காது





அன்ரூ இக்னேஷ்

மும்பை வன்கடே மைதானத்தில் இந்திய அணியை புரட்டு புரட்டென தென்னாபிரிக்கா புரட்டியெடுத்த பேச்சு இன்னும் கிரிக்கெட்டை விட்டு செல்லவில்லை. நீண்டநாட்களிற்கு இந்த கதைகள் தொடரும் போலத்தான் தெரிகிறது. பத்திரிகைகள், இணையங்கள் இந்திய ரசிகர்களின் காயங்களில் வேல் பாய்ச்சும் காரியத்தை அவ்வளவு இலகுவில் கைவிடாது என்று தெரிகிறது. சமூகவலைத்தளங்களில் அனேக இந்திய ரசிகர்கள் சுயஎள்ளலிலும் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் பார்த்ததில் பிடித்த ருவிட் ஒன்று 'தென்னாபிரிக்கர்கள் ஊக்க மருந்தையும், இந்தியர்கள் தூக்கமருந்தையும் எடுத்து விட்டார்களா?'

துடுப்பாட்ட சாதனைகள் என்பது இந்தியர்களிற்கு சொந்தமானது என்பதையொத்த பிம்பமொன்று கிரிக்கெட்டில் உள்ளது. நீண்டகாலமாக பலம்மிக்க துடுப்பாட்ட வரிசையொன்று இந்தியாவிடம் இருந்தது. இதனாலேயே பல சமயங்களில் பெரிய இலக்குகளை நிர்ணயித்ததுடன், பெரிய இலக்குகளை துரத்தியும் பிடித்துள்ளது.


இந்தியாவிற்கெதிராக அதிக ஓட்டங்கள் குவிப்பதென்பதை இலகுவில் ரசிகர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வன்கடேயில் இந்தியப்பந்துவீச்சை வறுத்தெடுத்தது இந்தியக் கிரிக்கெட்டிற்கு அவமானகரமான ஒன்றாகத்தான் இந்திய ஊடகங்கள் கருத்துக் கூறி வருகின்றன. வெறும் ஆறு ஓட்டங்களை மட்டும் இன்னும் அதிகமாக பெற்றிருந்தால், ஒருநாள் போட்டிகளில் எடுக்கப்பட்ட அதிக பட்சஸ்கோராக அது இருந்திருக்கும். அன்று எடுக்கப்பட்ட 438 ஓட்டங்கள் ஒருநாள் வரலாற்றில் 3வது அதிகபட்ச ஓட்டம்.

இந்த போட்டியின் பின்னர் இந்திய அணி நிர்வாகம் 'வறுத்தெடுப்'பிற்காண காரணங்களை அணிக்குவெளியில் தேடத்தொடங்கியதைத்தான் எந்த வகைக்குள் அடக்குவதென தெரியவில்லை. அணியின் இயக்குனர் ரவிசாஸ்திரி மைதான பராமரிப்பாளரிடம் ஏறிவிழுந்திருக்கிறார். சுழற்பந்துக்கு சாதகமாக ஆடுகளத்தை அமைக்க சொன்னதாகவும், அவர் காலைவாரி விட்ட தாகவும் சாஸ்திரி எரிந்து விழுந்திருக்கிறார்.




எனினும், இந்த விவகாரத்தில் அணித்தலைவர் தோனியின் கருத்தொன்றுதான் கவனத்திற்குரியது. இந்திய அணியின் பிரதான பலவீனத்தை மனம் திறந்து பேசியிருக்கிறார். அந்த பலவீனத்தை தீர்க்காத வரையில் இந்திய அணி முழுமையான அணியாகாது.

பொதுவாகவே இந்திய கிரிக்கெட் அணியென்பது துடுப்பாட்ட அணிதான். கடந்த சில தசாப்தங்களில் அது துடுப்பாட்டம், பந்துவீச்சில் சமஆதிக்கம் நிறைந்த அணியாக இருந்ததில்லை. பந்துவீச்சு பலவீனத்தை பல சமயங்களில் துடுப்பாட்ட பலம் சமாளித்துக் கொண்டு சென்றுவிடும். ஜவகல் சிறிநாத், அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், சகீர்கான் என பல குறிப்பிடும்படியான பந்துவீச்சாளர்கள் இருந்தபோதும், அது பந்துவீச்சில் பலம்மிக்க கூட்டிணைவான அணியாக இருந்ததில்லை. இருந்தாலும், அது துருத்திக்கொண்டு வெளித் தெரியாத வகையில் துடுப்பாட்டத்துடன் ஏதோவிதமான சமரசமொன்றை பேணியது.




ஆனால் இப்பொழுது உள்ளது மிக மோசமான நிலை. இதைத்தான் தோனி சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்திய பந்துவீச்சு மகாமட்டம் என்பது தோனி சொல்லாமல் சொன்னது. தற்பொழுதுள்ள இந்தியப்பந்துவீச்சாளர்களிடம் கற்றுத்தேறும் ஆர்வமோ, திறனை மேம்படுத்திக் கொள்ளும் தன்மையோ இல்லையென்பது தோனியின் வெளிப்படையான குற்றச்சாட்டு.

இந்தியாவின் அவமானகரமான தோல்விக்கு பிரதானமான காரணம் அதுதான். இந்தியா குறிப்பிடத்தக்க டெஸ்ட் பெறுபேற்றை வெளிப்படுத்த ஆரம்பித்ததன் பின்னரான மோசமான பந்துவீச்சு அணி தற்போதைய அணிதான் என துணிந்து சொல்லலாம். தற்போது ஹர்பஜன், அஸ்வின் போன்ற பந்துவீச்சாளர்கள் இருந்தாலும், அணியின் பந்துவீச்சை தனிமனிதர்களாக தாங்கும் மாபெரும் வீரர்களாக அவர்கள் மாறவில்லை. முரளிதரன், வோர்ன், முஷ்டாக் போன்ற சுழற்பந்து மேதைகளை எட்டிப்பிடித்தாலே தவிர, இவர்களால் அப்படியொரு பொறுப்பை சுமக்க முடியாது.

கடந்தசிலமாதங்களாக அஸ்வின் ஓரளவு சிறப்பாக வீசியிருக்கிறார். சிலபோட்டிகளில் அஷ்கர் படேலும் ஓரளவு சுமாராக வீசியிருக்கிறார். இவர்கள் இருவரும் சுழற்பந்தாளர்கள். இவர்களை போலசட்டென கூறத்தக்க வேகப்பந்துவீச்சாளர்கள் இந்திய அணியில் தற்போது கிடையாது. அதுதான் அணியின் பலவீனம்.

கபில்தேவ் இற்கு பின்னர் இந்திய அணி குறிப்பிடத்தக்க இரண்டேயிரண்டு வேகப்பந்து வீச்சாளர்களைத்தான் கண்டுள்ளது. ஜவகல் சிறிநாத், சகீர்கான் என்ற இருவருக்கும் சற்று முன்னராகவும், பின்னராகவும் சொல்லிக்கொள்ளும் விதமான வேகப்பந்துவீச்சாளர்களை இந்தியா அடையாளம் காணவில்லை.

சகீர்கான் ஒதுங்கியதன் பின்னர் இந்திய வேகப்பந்துவீச்சில் ஏற்பட்ட தொய்வை போக்க அணிநிர்வாகம் பலமுயற்சிகள் செய்து பார்த்தது. இசாந்த் சர்மா, உமேஷ் யாதவ், பங்கஜ் சிங், சிறிசாந்த், நெஹ்ரா, பாலாஜி, முனாப்படேல், வினய் குமார் என ஒரு பெரிய பட்டாளமே வந்துபோனது. யாரும் தம்மை நிரூபிக்கவில்லை. இவர்கள் தமது தலைமுடிகளை வளர்த்துக் கொள்வதில் காட்டிய அக்கறையை பந்துவீச்சை வளர்த்துக்கொள்வதில் காண்பிக்கவில்லை. இத்தனைக்கும் இவர்கள் அனைவரும் ஐ.பி.எல் ஆட்டங்களில் பிரதான பந்துவீச்சாளர்கள். அவர்களது ஐ.பி.எல் அனுபவம் சர்வதேசஆட்டங்களிற்கு துளியும் பயனுடையதாக அமையவில்லை.

தோனி குறிப்பிட்ட முக்கிய விடயம், மற்ற அணிகளின் பந்துவீச்சாளர்கள் ஓரிரு வருடங்களிற்குள்ளேயே கற்றுக்கொண்டு அடுத்தகட்டத்திற்கு சென்று விடுகிறார்கள். நமது அணியில்த்தான் அது கிடையாது என.

கடந்த சில பருவங்களில் பத்து வரையான வேகப்பந்துவீச்சு பரீட்சார்த்தங்களில் இந்தியா இறங்கிப்பார்த்துள்ளது. ஐ.பி.எல் பெறுபேறுகளின் எதிர்பார்ப்பு மற்றும் ஊடகங்களின் மிகைப்படுத்தல்களிற்கிடையில் சர்வதேச போட்டிகளில் அவர்களால் வெற்றி பெற முடியவில்லையென்பதே யதார்த்தம். தற்பொழுதுள்ள இந்திய வேகப்பந்துவீச்சு குழாத்தில் நம்பிக்கையளிப்பார் என சொல்லும் விதமான பெறுபேற்றை யாரும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

தற்போது வீசுபவர்களில் யாரிடமும் அதிக துல்லியம், வேகம் போன்றன இருப்பதாக தெரியவில்லை. உத்திரீதியில் தனித்தன்மைகளை வெளிப் படுத்துபவர்களாக யாருமில்லை.

வேகப்பந்துவீச்சவின் தொய்விற்கு காரணம் ஐ.பி.எல் தான் என கரடுமுரடாக நாம் சிந்திக்கவில்லை. என்றாலும், அதுவும் குறிப்பிடத்தக்க காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். அதிக பணம், பிரபல்யம் போன்ற விடயங்கள் சுலபமாக ஐ.பி.எல் மூலம் கிடைத்துவிடுகிறது. சர்வதேசப்போட்டிகளில் பல வருடங்கள் போராடி கிடைத்த இடத்தின் மூலம் கிடைக்கும் பணத்தையும், புகழையும் ஐ.பி.எல் சில ஓவர்களில் வாரிக்கொடுத்துவிடுகிறது. வீரர்களின் சாதிக்கும் ஆர்வத்தை மழுங்கடிப்பதாக இது அமையலாம்.

எதுஎப்படியோ, தற்போதைய நிலையில் உடனடியான வேகப்பந்துவீச்சு மாற்றங்கள் எதுவும் இந்தியாவில் நிகழவாய்ப்பில்லை. புதியவர்கள் யாராவது கற்றுத்தேறி வந்தால்த்தவிர, தற்போதுள்ள இந்திய வேகப்பந்துவீச்சு எதிரணியை கலங்கடிக்கப் போவதில்லை. அதுவரை, வடிவேலு பாணியில் எதிராளி 'எவ்வளவு அடிச்சாலும் வலிக்காதது மாதிரி' இருக்க வேண்டியதுதான்.



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687



# குழந்தைகளுக்கான கிரந்தியெண்ணெய்


யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சித்தமருத்துவத்துறையில் தனித்துவம் வாய்ந்தும் பிரபல்ய மானதும் இன்று வரை அனேக வைத்தியர்களினால் பின்பற்றப் பட்டுவரும் வைத்திய முறை கிரந்தியெண்ணைய் சிகிச்சை யாகும். குழந்தை பிறந்து 40 நாட்களில் ஆரம்பிக்கிற இச் சிகிச்சை பரம்பரையாக மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது.

இதை ஒரு வைத்தியமுறை என்று சொல்வதை விட மக்களால் கடைபிடிக்கப்படும் ஓர் சடங்கெனவும் கொள்ளமுடியும்.

நவீன மருத்துவம்கற்றசிலர் தனது பிள்ளைக்கு இது தேவையில்லை என்றுசொன்னாலும் வீட்டிலே இருக்கிற அவரது பெற்றோர்கள் அல்லது மூத்த தலைமுறையினர் அனுமதிப்பதில்லை. ஊரில் உள்ள சித்தமருத்துவரிடம் கிரந்தியெண்ணெய் வாங்கி வைத்தால் தான் அவர்களுக்கு திருப்தி வருகிறது. ஆனாலும் காலத்துக்காலம் இது தேவையில்லை, இதுவெல்லாம் மூடப்பழக்கம், குழந்தைக்கு எண்ணைய் தேவையில்லை, பேபி ஒயில் வையுங்கள் என சிபார்சு செய்கின்ற ஆங்கிலவைத்தியர்களும் இல்லாமல் இல்லை. இந்த நிலையில் ஒரு விடயம் இவ்வளவு காலம் தொடர்ச்சியுறாமல் பின்பற்றப் படுகிறதென்றால் அது நிச்சயம் பய'னுள்ளதாக தானே இருக்க வேண்டும். கிரந்தியெண்ணெய் எவ்வாறு பயனளிக்கிறது என விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராசசேகர மன்னனால் எழுதப் பட்ட பரராசசேகரம் எனும் வைத்திய நூலில் காணப்படும் கிரந்தியெண்ணெய் முறையே யாழ்ப் பாணத்தில் பல வைத்தியர்களால் பாவிக்கப்படுகிறது. சில வைத்தியர்கள் பரம்பரையாக தமேக்கென விசேட முறைகளையும் வைத்திருக் கிறார்கள்.

அதிமதுரம், அக்கரகாரம், கருஞ் சீரகம், கடுகுரோகிணி, கடுக்காய்,



கார்போக அரிசி, செஞ்சந்தனம் என கிரந்தியெண்ணெய் தயாரிப்பதற்கு பொதுவாகவே முப்பத்தி மூன்றுக்கும் மேற்பட்ட மூலிகை சரக்குகள் பாவிக்கப்படுகின்றன.

இவை இடித்து தூள் செய்யப்பட்டு நல்லெண்ணெய்யில் காய்ச்சி வடித்தெடுக்கப்படுகிறது.


இதில் சேரும் நல்லெண்ணெயின் தன்மையையும் மருத்துவ மூலிகைகளின் குணமும் குழந்தைகளின் சருமத்தை பேணுகிறது என சொல்கிறார்கள் அனுபவமுள்ள மருத்துவர்கள்.

இதில் பிரதான சேர்பொருளான நல்லெண்ணெய் எள்ளில் இருந்து எடுக்கப்படுவதாகும். இதில் விற்றமின் ஈ அதிகம் இருப்பதால் சருமத்திற்கு நன்மைஅளிக்கிறது. தவிர இதனுடைய குளிர்ச்சியான தன்மைபித்த அதிகரிப்பால்ஏற்படும் பல நோய்களுக்கு தீர்வாகிறது.

குழந்தைமருத்துவத்தில்முக்கியம் பெறுகின்ற இந்த கிரந்தியெண்ணெய் சிகிச்சை இன்றைய நவீன காலத்திலும் தொடர்ச்சியாக பின் பற்றப்பட்டு வருவது அதன் சிறப் பினை காட்டுகிறது. இந்த கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கிறபோது வைத்தியர் நவரத்தினம் மணிவண்ணன் தனது மருத்துவ கல்லூரி ஆண்டு மலரில் எழுதிய கவிதையொன்று ஞாபகம் வருகிறது

சித்தவைத்தியத்தை சிரிப்போடு சிலர் பார்த்தார்
INJECTION போல வருமா என விழித்தார்
மெத்த படித்தவர் போல் X-RAY படமென்றார்
SCAN என்றார் குழந்தை சிரசவிந்து
கத்த ஓடிப்போய் கிரந்தியெண்ணைய் வைத்தார்
கோரோசனையூட்டி மனம் குளிர்ந்தார்
வைத்தியத்தின் தாயகமே மின்மினிகள் முன்
சூரியனாய் ஒளிர்ந்தாய் வாழி
என்பது தான் அப்பாடல்

ஆம்கிரந்தியெண்ணெய்குழந்தைகளை ஒரு தாய்போல பேணுகிறது.



## வைத்தியர் மணிகரன்

Herbal Product சுதேச மருந்து உற்பத்திநிறுவனம் வேலணை

நாங்கள் நான்கு தலைமுறையாக பாவிக்கப்பட்டு வந்த எங்கள் பரம்பரைமுறையின்படி கிரந்தியெண்ணெயை தயாரிக்கிறோம். பலவைத்தியர்கள் எமது எண்ணெயை வாங்குகிறார்கள். குழந்தைகளின் சருமத்திற்கு ஊட்டத்தையும் எதிர்ப்பாற்றலையும் கிரந்தியெண்ணெய் வழங்குகிறது. வெளிநாடுகளில் உள்ளவர்களும் எம்மிடம் வாங்கி செல்கிறார்கள். சிலருக்கு நாங்கள் அனுப்பிவைக்கிறோம்.

இதில் சேருகின்ற சந்தனம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி, வெந்தயம் போன்றன சிறப்பாக தொழிற்படுகின்றன. நல்லெண்ணெய், சந்தனம் போன்றவை சருமத்திற்கு குளிர்ச்சியையும் கருஞ்சீரகம் சொடுகு போன்றவற்றையும் கட்டுப்படுத்துகிறது.



## வைத்தியர் சுந்தரேஸ்வரன்

மல்லாகம்

நல்லெண்ணையின் சிறப்பும் இதில் சேருகின்ற ஓமம், வசம்பு, அதிமதுரம், வசுவாசி, சாதிக்காய் போன்ற மருந்து மூலிகைகளும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. குறிப்பாக வசம்பு தோலில் ஏற்படும் கிருமித்தொற்றுக்கெதிராக செயற்படுகிறது. கடுகுரோகிணி கிரந்திப்புண்கள் ஏற்படுவதை தடுக்கிறது.

மேலும் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்தி குழந்தைகளுக்கு நோய்வராமல் தடுக்கிறது.

பிறந்த குழந்தைக்கு நாற்பது நாளில் இருந்து மூன்று மாதங்களுக்கு விசேடமாக தயிக்கபடும் கொதியெண்ணையை வழங்குகிறேன். பின்பு முன்று வயது வரை கிரந்தியெண்ணை வழங்குகிறேன். இதை தலைக்குவைக்கும் போது ஒருதுளி நாக்கிலே தடவுவதால் மலசிக்கல் முதற்கொண்டு கிரந்திநோய்களை குணமாக்குகிறது. இது உள்ளுக்கு கொடுக்கப்படுவதால் சுத்திசெய்த மருந்து சரக்குகளே பாவிக்கபடுகின்றன.



## வைத்தியர் சிறீஜீவகன்

யாழ்ப்பாணம்

நான் முப்பது வருடங்களாக குழந்தைகளுக்கு கிரந்தியெண்ணெய் வழங்கி வருகிறேன். அது மிக சிறப்பாக குழந்தை மருத்துவத்தில் பயன்அளிக்கிறது.





வடமராட்சியின் தனியார் ஆங்கில மொழிமூல கல்வி நிறுவனமான "Raveens EMC" இன் வருடாந்த பரிசளிப்பு விழாவும் (2015) தரம் 11 மாணவர்கள் பங்கு பெறும் முன் ஆயத்தம் இல்லாப் பேச்சும் (Impromptu Oratoryஅண்மையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கல்யாண மண்டபத்தில் நிர்வாகி திரு.ப ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. S.கோகிலதாசன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

# கைகளின் அழகை மெருகூட்டும் மெகந்தி



அழகுக்கலை நிபுணர் சுகந்தினி
New lovers corner - manipai

பெண்களின் கொள்ளைப் பிரியர்களில் மருதானியும் ஒன்று. மனிதனின் உடலுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை உபயோகப் படுத்தப்படும் ஒரு மருத்துவ குணம் மிக்க மகத்தான மூலிகை மருதாணி இலை. இந்த இலையில் இருந்து எடுக்கப்படும் மருதாணி பேஸ்ட் பெண்களின் கைகளை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அழங்கரிக்க உதவுகின்றது. இப்பொழுதெல்லாம் நகம் வளர்த்து அதற்கு டிசைன் போடும் பெண்கள் மருதாணியையும் அதன் அழகையும் மறந்து விடுகிறார்கள். மணவறைப் பெண் மட்டும் தான் மருதாணி போட வேண்டும் என்று ஒரு அவசியமும் இல்லை. சாதாரணமாக தினமும் மருதாணியை மிக மெல்லிய டிசைனில் போட்டு கொள்வது கூட உங்கள் பெண்மையை மெருகூட்டி காட்டும்.

சாதாரணமாக தினமும் போடும் பொழுது மிக மெல்லிய சிம்பிலான டிசைன்களை போட்டு கொள்ளலாம். இல்லை உங்கள் உறவுகளின் மங்கள விழாக்களுக்கு செல்லும் பொழுது சற்று அடர்த்தியான பரந்த டிசைன்கள் உகந்தவையாகும். இதுவே நீங்கள் தான் மணவறை பெண் எனில் அச்சமே இன்றி நன்கு பரந்த அடர்தி நிறைந்த டிசைன்களை(உங்களுக்கு பிடித்த டிசைன்) கை நிறைய போட்டு .மணப்பெண்ணிற்கான அழகை மெருகூட்டி விடுங்கள்.



எந்த சந்தர்பத்தில் போட்டாலும் மெகந்தியை போடுவதற்கென்று சில படி முறை உள்ளது.

முதலில் சுகர்பாணி எலுமிச்சைச்சாறு இரண்டையும் ஒன்றாக கலந்துக் வைத்துக் கொள்ளவும். கலந்து வைத்திருக்கும் கலவை பிசுபிசுப்பாக இருக்கும். கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவி உலர விட்டு பிறகு சர்க்கரைஇ எலுமிச்சைச்சாறு கலந்த கலவையை மருதாணி இடும் கைகளில் தேவையான அளவு எடுத்து நன்றாக பூசிக் கொள்ளவும்.

மருதாணியை உள்ளங் கை தவிர்ந்து கீழ் கைகளிற்கும் இடுவதாயின் கையில் உள்ள ரோமங்களை எடுத்துவிட வேண்டும்.

கையில் பூசியிருக்கும் கலவை லேசாக உலர்ந்ததும் உங்களுக்கு பிடித்த விருப்பமான டிசைனை வரைய ஆரம்பிக்கவும்.

கோனில் போடப்படும் டிசைன் மிகவும் மெல்லியதாக வேண்டுமானால் கோனை மிகவும் நுனிப் பகுதியில் வெட்டி விட்டு மருதாணி இடவும்.சிறிது தடிப்பான டிசைனாக போட விரும்புவோர் சற்று மேலே தள்ளி வெட்டிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு டிசைனை போடும் பொழுது ஏற்படும் சிறு தவறுகளை காதிற்கு பயன்படுத்தபடும் பஞ்சு குச்சிகள் அல்லது பல் குச்சிகளைக் கொண்டு கவனமாக நீக்கி துடைத்து விட வேண்டும்.

முதலில் உள்ளங்கைகளில் டிசைனை போட்டுக் கொள்ளவும்.

அடுத்து ஐந்து விரல்களிலும் இதேப் போல் டிசைனை வரைந்துக் கொள்ளவும். கை முழுவதும் போட்டு முடித்தவுடன் சிறிது நேரம் மருதாணியை உலர விடவும்.

மருதாணி உலர்ந்தவுடன் மீண்டும் சர்க்கரை, எலுமிச்சைச் சாறு கலவையை ஒரு பஞ்சில் தொட்டுக் கொண்டு அதன் மேல் தடவவும். சராசரியாக 3 மணி நேரமும், அதிகபட்சம் 5 மணி நேரமும் வைத்திருக்கவும். அல்லது குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது வைத்திருக்க வேண்டும்.

கையில் போட்டிருக்கும் மருதாணி நன்கு காய்ந்தபிறகு ஒரு மெல்லிய கத்தி அல்லது ஸ்பூன் கொண்டு சுரண்டி எடுத்து விட்டு கையை கழுவி விடவும். நன்றாக துடைத்து விடவும். மருதாணி இட்ட கைகளில் மீண்டும் நீர் படாதவாறு இருக்க வேண்டும். இதனால் மருதாணி இட்ட கையில் லேசாக தேங்காய் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாம்.

மருதாணி இட்டு அடுத்தநாள் கையை பார்க்கும்பொழுது மருதாணியின் நிறம் இன்னும் கூடி பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். நன்றாக பழகியப்பின்னர் நமது தேவைக்கு ஏற்ப நாமே மருதாணியை போட்டு கொள்ளலாம்.

---

# மணப் பெண்ணுக்குரிய கோல்ட் பேசியல்

மணப் பெண் என்றாலே குதூகலம் தான் மணவறையில் உட்காருவதற்கு அரை மணி நேரத்தின் முன்பு கூட தாம் அழகாக இருக்கிறார்களா இல்லையா என்று தம் அழகை பற்றி சிந்திக்கும் பெண்கள் திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே அழகு நிலையங்களை நாடி அழகை மெருகூட்ட வேண்டிய தேவை இன்றய பெண்களுக்கு உள்ளது. காரணம் ஒரு தடவை நடக்கும் திருமணத்தில் ஓராயிரம் நட்சத்திரங்கள் திரண்டால் போல் மினுமினுப்பாக திகழ வேண்டும் என்பது ஒவ்வொரு பெண்ணினதும் விருப்பம். இப்படியானவர்களை மினு மினுப்பாக வெள்ளை வெளீரென ஆக்குவது தான் கோல்ட் பேசியலின் வேலை.

கோல்ட் பேசியலுக்கு பயன்படுத்துகின்ற ஜெல் ஸ்கிறப் பேஸ்வோஸ் ஒயில் பேஸ்ட் மாக்ஸ் அனைத்திலும் கோல்ட் கலப்படம் இருப்பது தான் இதன் சிறப்பம்சமாகும்.

இந்த பேசியலை செய்வதற்கு குறைந்தது ஒரு மணி நேரம் தேவைப்படுகின்றது.

முதலில் கிளன்சில் எனப்படும் சுத்தப்படுத்தலை செய்ய வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள வியர்வை அழுக்கு என்பன நீங்கி தோலில் உள்ள துவாரங்கள் திறக்கப்டும். குறைந்தது 10 நிமிடங்கள் செய்ய வேண்டும்.

கிளன்சில்ற்கு பயன்படுத்திய பேஸ்வோஸை துடைத்து விட்டு ஸ்கிறப் மசாஜ் செய்ய வேண்டும். இதனை குறைந்தது 20 நிமிடங்கள் செய்யலாம். இதனால் சருமத்தில் உள்ள இறந்த கலன்கள் நீக்கப்படுகின்றது.

தண்ணீரில் தோய்த்த கொட்டன் பஞ்சு கொண்டு ஸ்கிறப்பை நன்றாக துடைத்து எடுத்து விட்டு பேக்(மாக்ஸ்) போட்டு 20 நிமிடங்கள் உலரவிட வேண்டும். அது உலர்ந்த பின்னர் விசேடமாக அமைக்கப்பட்ட சவருக்கு அனுப்பி மிதமான சுடுநீரால் கழுவிய பின்னர். சவர் ஜெல்லினை பயன்படுத்தி குளிக்க வைக்க வேண்டும். அதன் பின்னர் விசேடமான கோல்ட் கலந்த கிறீமினை பயன்படுத்தி கொள்ளலாம்.







# அழகை அள்ளித்தரும் ஆளுக்கேற்ற ரொப்ஸ்

இன்றய பெண்கள் தங்கள் பாதுகாப்பு மற்றும் இலகு என்பவற்றுக்காக தெரிவு செய்யும் ஸ்ரைலான உடை ஜீன்ஸ் அன்ட் ரொப்ஸ் தான். ஆனால் இந்த ரொப்ஸ் எமக்கு ஏற்றால் போல் அமையப்பெறுமானால் மட்டுமே அழகை அள்ளித்தரும். இல்லையேல் ரொப்பின் அழகும் போய் நமது அழகும் மறைந்து விடும். ஆகவே ரொப்பினை தெரிவு செய்யும் போது ஜீன்சினை மட்டுமின்றி அது எமக்கு பொருத்தமானதா என்பதையும் கவனிக்க வேண்டும். அப்படி தெரிவு செய்யும் இடத்தில் உங்கள் செலக்ஸன் மட்டுமின்றி அழகும் முதலிடம் தான்.

நமக்கேற்ற ரொப்பினை எப்படி தெரிவுசெய்வது. பேரிதாக ஒன்றும் கடினம் இல்லை. இதே எளிய முறை.

**தோற்றம்:** நீங்கள் பார்ப்பதற்கு குள்ளமானவரா நெட்டையானவரா என்பதை முதலில் கவனிக்க வேண்டும். நீங்கள் குள்ளமானவராக இருப்பின் உங்களை உயரமாக காட்ட கூடிய கட்டையான ரொப்ஸ் மற்றும் நிலக்குத்து டிசைன்ஸ் உடையரொப்ஸினை தெரிவு செய்து கொள்ளுங்கள். இல்லை நீங்கள் உயரமானவராயின் நீளமான கிடைக்குத்து வடிவிலான டிசைன்ஸ் உடைய ரொப்ஸ் ஓகே தான்.

**பருமன்:** மிக முக்கியமான விடயம் இத தான். நீங்கள் சேட் வடிவ ரொப்ஸ் வெல்வெட் ரொப்ஸ் அழகாக இருக்கும். ஆனால் நீங்கள் பருத்த உடல் அமைப்பை உடையவராயின் சில்க் போன்ற துணிகளிலான பிளவுஸ் ரொப்ஸ் அல்லது கொட்டன் துணிகலாலான பஞ்சாவி சட்டை ரொப்ஸ் உங்களுக்கே உரியது. இது உங்களுக்கு அழகை தரும் இத்தோடு மெல்லிய துணிகளாலான ரொப்ஸ் உங்கள் பருமனை குறைவாக காட்டும்.

**இடம்:** என்ன தான் நாம் ரொப்பை தெரிவு செய்து விட்டாலும். எமது செலக்ஸன் சில இடஙகளுக்கு பொருத்தமற்றதாகி விடும். ஆகவே நாம் அணிந்து செல்லும் இடமும் முக்கியமானதாகும். அலுவலகங்களுக்கு இல்லை படிக்க செல்லும் பொழுது சேட் வகையிலான இல்லை சட்டை வடிவிலான ரொப்ஸ் பொருத்தமானது. அதே போல் சொப்பிங் செல்லும் பொழுது ரீசேட் வகையிலான ரொப்ஸ் பொருத்தமானது. பிட்னிக் செல்லும் பொழுது முக்கா ஜீன்ஸ்சோடு சேர்ந்த ரீசேட்ஸ் ரொப் பொருத்தமானது. இதே ஒரு பிறந்த நாள் பாற்றி போன்றவற்றிற்கு லெக்குடன் சேர்ந்த மொடலான சட்டை ரொப்ஸ் பொருத்தமானதாகும்.

**கலர்:** கலர் தெரிவு முழுக்க முழுக்க உங்க கையில் தான். நீங்கள்; பளிங்கென்று வௌ;ளை வெளீர் என்று இருப்பீர்களாயின் கடும் கலர்கள் உங்களுக்கு பொருந்தும். இல்லை நீங்கள் பொது நிறமுடையவராயின் மெல்லிய நிறங்கள் பொருத்தமுடையதாகும். அதே போன்று கலரானவர்களுக்கு பிளேன்டிசைன்சும் கலர் குறைவானவர்களுக்கு செக் டிசையின்ஸ் ரொப்ஸ்; பொருத்தமானதாகும்.

**மொடல்:** இப்ப நம்ம நாட்டில மொடல் என்று சொன்னால் ரீசேட் சில்க்துணி போன்ற துணிகளாலான மொடல் சட்டை வடிவிலான ரொப்ஸ்தான். பஞ்சாவி ரொப்ஸ் எல்லாம் பெஸன் போய் விட்டவை. ரீசேட் வடிவிலான பிளவுஸ் வடிவிலான சேட் வடிவிலான ரொப்ஸ் சுட இப்ப மொடலானவை தான்.





# பலி வாங்கும் கிளிநொச்சி கண்ணகி அம்மன்

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் உள்ள இயற்கை எழில் மிகு கிராமம் தான் கலவெட்டித்திடல். விவசாயம் மற்றும் மாடு வளர்ப்பு என்பவற்றை பிரதான தொழிலாக கொண்ட இந்த மக்களின் இறை நம்பிக்கைக்கு இன்றும் குறையில்லை என்று தான் சொல்ல வேண்டும். பல ஆலயங்களை அமைத்து பக்தி பூர்வமாக இறை வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் இந்த ஊர் மக்கள்.

அப்படியாக நீண்ட காலமாக அமைக்கப்பெற்று இன்றும் பக்தி பூர்வமாகவும் குலதெய்வமாகவும் வழிபடப்படுவது தான் கலவெட்டித் திடல் கண்ணகி அம்மன்.

400 ஆண்டு பழமை வாய்ந்த வரலாற்று பிண்ணணியை கொண்ட இந்த ஆலயம் ஆலமரம் மற்றும் கருங்காலி மரம் கொண்டு இயற்கை நடுவே அமையப்பெற்றது.

இந்த ஆலயத்தின் தொன்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த ஊரை சேர்ந்த உப தபால் அதிபரும் வரலாற்றை நன்கு அறிந்தவருமான ம.வேலாயுதப்பிள்ளை என்பவரிடன் கேட்ட போது.

கொழுந்துபுலவு என்னும் கிராமத்தில் வசித்து வந்த மூன்று மூத்த குடிகள் மூன்று வகையான தெய்வங்களை வழிபட்டு வந்ததாகவும் காலப்போக்கில் அவர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கல்வெட்டிதிடலில் வந்து குடியேறியதாகவும் அவர்கலாலேயே இந்த ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது என்றார் அவர்.

கிட்டத்தட்ட 400 ஆண்டுகள் வரலாற்றை கொண்டு விளங்கும் இந்த ஆலயத்தில் இன்று வரை தொன்மையான மரபுப்படி ஓலைகளில் எழுதப்பட்ட ஏட்டின் படியே பூசகர் பூசை செய்வதை காணக்கூடியதாக உள்ளது. வைகாசி விசாகம் அன்று வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு பொங்கல. அதற்கு எட்டு நாட்களுக்கு முதல் விளக்கு வைக்கப்படும் மேற்படி விளக்கு வைக்கப்படும் அன்று இவ் ஆலயத்தில்பொங்கல்விழா பண்டம் எடுத்தலுடன் ஆரம்பித்து சிறப்பாக நடைபெற்று வழிவெட்டுதலுடன் நிறைவு பெறும்.

இங்கு அம்மன் எவ்வாறு வந்து குடியமர்ந்தார் என்பதற்கு ஒரு சிறப்பான வரலாற்று கதையுள்ளதாக குறிப்பிடுகிறார் வேலாயுதப் பிள்ளை. அதாவது சிலம்பு திழருடியதாக பாண்டிய மன்னனால் குற்றம் சுமத்தப்பட்ட தனது காதலனான கோவலன் கள்வன் இல்லை என்பதை பாண்டியனுக்கு புரியவைக்க கண்ணகி இந்தியாவில் இருந்து இலங்கை வந்து பல இடங்களில் குடியமர்ந்ததாகவும். அவர் குடியிருந்த இடங்களை பிற்காலத்தில் அம்மன் ஆலயங்களாக இங்கு வழிபட்டு வருவதாகவும்வரலாற்று கதைகள் கூறுகின்றன. அவ்வாறாகவே இந்த ஆலயத்திலும் கண்ணகி குடியமர்ந்ததாகவும் இதனாலேயே கண்ணகி அம்மன் என் அழைக்கப்பட்டதாகவும் ஆலய ஏட்டில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

இங்கு குடியமர்ந்து விட்டுதான் வற்றாப்பளையில் கண்ணகிசென்று குடியேறியதாகவும் ஏட்டில் குறிப் பிடப்பட்டுள்ளது. இன்று வரை முன்னர் குறிப்பிட்ட மூவர் குடியை சேர்ந்த வழித்தோன்றல்களே பூசகர்களாக இருக்கின்றமை குறிப் பிடலாம். இவ் ஆலயத்தில் ஆரம் பத்தில் பூசகர் குளித்த ஈர உடையுடன் பூசை செய்த வரலாறும் இருந்துள்ளதாம். ஆனால் காலப் போக்கில் அம்முறை மறைந்து விட்டது. இங்கு அம்மனுக்கு அருகில் சன்னியாசி வைரவர் வீரபத்திரர் போன்ற காவல் தெய்வங்களை வைத்து வழிபடுகின்றனர்.

பொங்கலின் எட்டாம் நாள் அன்று இக்காவல் தெய்வங்களுக்கு ஆடு கோழி போன்ற உயிர்களை பலி இட்டு வழிபடுகின்ற முறை இன்று வரை உள்ளமை குறிப் பிடத்த்க்கது. பலி இடுவதை மக்கள் விரும்பாமல் இருந்தாலும் மேற்படி தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாகி விடுவோம் என்ற காரணத்தினால் பலி இடுதலை வருடா வருடம் தவறாமல் மேற்கொள் கின்றனர். இத்தனை சிறப்பும் பழமையும் வாய்ந்த இவ் ஆலயம் இன்று வரை எந்த கட்டிடிங்கள் கூட இல்லாமல் இயற்கையோடு ஒன்றி இருப்பதும் இவ் ஆலயத்தின் சிறப்பாகும்.

இன்றும் கூட இக் கிராமத்தில் சிலரது கனவில் அம்மன் தோன்றி அருல் செய்வதாக கிராம மக்கள் பலர் பக்தி பரவசத்துடன் கூறுகின்றனர்.





**படங்கள்: முரளிதரன்**

---

✎ அனுஹேமன்





சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392

# பெண்கள் "ருது" பலன்களும் பெண்ணின் விவாக நிலையில் அறியக்கூடியவையும்



"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது"

"பெண்ணில்லாமல் மண்ணில் இன்பங்கள் பெறமுடியாது"

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே"

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்"

"பெண் என்றால் பேயும் இரங்கும்"

இவ்வாறு பெண்ணின் பெருமை குறித்து அறிஞர்கள், ஞானிகள், கவிஞர்கள் கூறியுள்ளதை நாம் எல்லோரும் அறிவோம். ஒரு பெண்ணின் பூப்பு என்று சொல்லப்படும் "ருது" பருவம் மிகவும் முக்கியமானது. சிற்றின்பம் பேரின்பம் இரண்டையும் வாழ்வில் அனுபவிக்க பெண் "ருது" எய்தியாக வேண்டும். இல்லறம் என்னும் இன்பம் துய்க்க பெண் "பூப்பு" என்று சொல்லக்கூடிய "ருது" மங்களம் பெற்றாக வேண்டும். பெண்ணின் பூப்பினை ருது, சமைதல், திரட்சி, புஸ்பவதி, மலர்தல் என்ற சொற்பதங்களால் அழைக்கப்படுவதையும் நாம் அறிய வேண்டும்.

பெண்ணின் வாழ்வில் புஸ்பவதி ஆவது ஒரு திருப்பு முனையாகும் ஒரு மலர் மலர்ந்தால் மணம் வீசும் என்பதை நாம் அறிவோம் இவ்வாறு மணம் வீசும் மலர் பிறரை கவரும் எம்மை எடுக்க செய்யும் தனக்கே சொந்தமாக்கி கொள்ளவும் எண்ணவைக்கும்.

> **உயிர்காரகன் என்னும் சூரியன் உடல் காரகன் என்னும் சந்திரன் இருவரும் சேர்ந்து உடலில் உஷ்ணத்தைக் காட்டுபவனாகிய இரத்தகாரன் எனப்படும் செவ்வாயின் பார்வை கிடைக்கின்ற லக்கினத்தில் ஒரு பெண் பூப்படைகின்றாள்.**

பெண்ணின் அறிவு அழகு உடல் தோற்றம் திருமணபந்தம் என்பவை இதில் சம்பந்தப்படும் மலரும் மங்கையும் என்று சொல்வது ஒரு திருப்பு முனையைத் தரக்கூடியது. என்பதாகும் ஒரு பூப்பு என்பது பெண்ணுக்கு நிகழக்கூடிய துல்லியமான காலத்தை நிர்ணயிக்க கூடிய முறையில் சோதிட நிபுணத்துவம் இல்லை என்றே கூறவேண்டும். கராணம் பத்து வயது முதல் பதினைந்து வயது வரையான இடைப்பட்ட வயதெல்லைகளில் பெண் பிள்ளைகள் ருது அடைந்துள்ளதை நாம் கண்கூடாக கண்டுள்ளோம். "ருது" சாஸ்திர நூல்கள் ஒரு பெண் பூப்படைந்த பின்னர் எவ்வாறான சம்பவங்கள் பலாபலன்கள் நிகழலாம் என்பதை பூப்படைந்த நேரம், காலம், திதி, கிழமை, மாதம், நட்சத்திரம் என்பவற்றைக்கொண்டு அறிய முடியும் எனக் கூறுகின்றன. ருது எய்திய நாளில் காணப்படும் கிரக அமைப்பை கொண்டு பெண்ணின் எதிர்கால குடும்பவாழ்வு பலனை கண்டு கொள்ளலாம்.

சதாரணமாக ஜனன சாதகத்தில் இலக்கினம் இராசி கிரகநிலை என்பவற்றை வைத்தும் பலன்கள் சொல்லப்படுவது போல ருது ஜாதகத்திலும் பலன்களைக் கூறலாம். எனினும் ருதுபலன்கள் வித்தியாசமான நுணுக்கங்களை கொண்டுள்ளதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் பெண் அணிந்துள்ள ஆடை,ருதுபட்டுள்ளவடிவம், அதைபார்த்தவர், காலநேரம் என விரிந்து கொண்டே செல்லும்.

உயிர்காரகன் என்னும் சூரியன் உடல் காரகன் என்னும் சந்திரன் இருவரும் சேர்ந்து உடலில் உஷ்ணத்தைக் காட்டுபவனாகிய இரத்தகாரன் எனப்படும் செவ்வாயின் பார்வைகிடைக்கின்றலக்கினத்தில் ஒரு பெண் பூப்படைகின்றாள். இதனை சோதிட மொழியில் கூறுவதாயின் "ருது மங்களம்" எனப்படும். மற்றொரு சிறப்பு ருது நிகழும் சந்தர்பத்தில் இக்கினத்துக்கு 1 2 5 7 9 12 ஆகிய இடங்களில் சந்திரன் இருப்பார் . இதனை விடுத்து சந்திரன் 3 6 10 11 ம் நிலைகளில் இருப்பதாக ருது ஜாதகம் கணிக்கப்பட்டால் அது தவறானது எனக் கொள்ளப்படும் 4ம் 8ம் நிலைகளில் சந்திரன் இருக்குமாயின் அந்த ருது நிச்சயிக்க முடியாத நேரகாலத்தைக் கொண்ட குழப்பமான நிலையைக் காட்டும். எனவே ருது ஜாதகம் கணிக்கப்பட்டதுசரியானதாஎன்பதைமேலே சொல்லப்பட்ட விபரங்களைக் கொண்டு பெற்றோர்கள் அறிந்து சரியானதொரு முடிவுக்கு வரலாம். இதன்பின்னர்ருதுஎத்தகையபலன்களைத் தரும் என்பதை சோதிடர் மூலம் தெளிவு பெறமுடியும்.

ருது பலன்களை ஆராயுமிடத்து திதி முக்கியமான கிழமை முக்கியமான மாதம் முக்கியமான நட்சத்திரம் முக்கியமான என்பது கேள்விக்குரியதாகின்றது. எல்லாமே முக்கியம் தான் எது அதிக நன்மைகளைத் தருகின்றதோ அதனையே பலன்களாகப் பார்க்க வேண்டும்

நட்சத்திரங்கள் 27 மாதங்கள் 12 கிழமைகள் 7 திகதிகள் 15 இலக்கின நிலைகள் 12 இராசி நிலைகள் 12 இவற்றுடன் ஏனைய காலம்ஹரிசனம்வஸ்திரம்என்பவற்றையும் பார்க்க வேண்டும் இவற்றுக்கும் மேலாக 12 வீடுகளிலும் கிரகங்கள் நின்ற பலன்களையும் ஆராய வேண்டும் இலங்கையில் இருந்து வெளியாகும் இரண்டு பிரபல்யமான வாக்கியம் திருக்கணிதம் பஞ்சாங்களில் மேலே உள்ளவற்றில் சில முக்கியமானவற்றை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

**ருது இலக்கினத்தை தெரிந்து கொள்வதற்கு ருது நிகழ்ந்த இடமும் பெண் அணிந்திருந்த ஆடையும் முக்கியம் பெறுகின்றன.**

வெளியூரிலாயின் மேடம் சிங்கம்

கால்நடைகள் கட்டப்படும் இடமாயின் இடபம்

உடுப்புக்கள் மாற்றுமிடமாயின் மிதுனம்

தண்ணீர்க்கரையில் கடகம், மகரம், மீனம்

வேறொரு வீட்டில் துலாம்

மக்கள் கூட்டத்தின் மத்தியில் கன்னி

மரங்கள் சூழ்ந்தசோலை, அடர்ந்த மரக்காடு, விருட்சிகம்

வீட்டிற்குள் தனு, கும்பம்

இவ்வாறுஇடங்களைக்கொண்டு இலக்கினத்தை நிர்ணயிக்கலாம்.

**ஒரு பெண் ருதுவான போது எந்தமாதிரி என்ன நிறம் உடைய உடை அணிந்துகொண்டிருந்தாலோ அதற்கேற்றவாறும் இலக்கினத்தை அறிந்து கனக்கிட்டுக் கொள்ள முடியும்.**

சிவப்பு வர்ண ஆடை மேடம்

மஞ்சள் மற்றும் பச்சை வர்ண ஆடை இடபம், துலாம்

பச்சை வர்ண ஆடை மிதுனம், கன்னி

வெள்ளை நிறமாயின் கடகம்

வெண்மை கலந்த ஆடை சிங்கம்

மஞ்சள் நிறம் கொண்ட ஆடை லேசான கறுப்புடன் விருட்சிகம்

பொன்நிற மஞ்சள் ஆடை தனு மீனம்

கறுப்பு நிற ஆடை மகரம், குடும்பம்

**ருது நிகழ்ந்த இடத்தை கொண்டு பலன்களை அறியலாம்**

வீட்டுக்குள் ருது ஒழுக்கம் பேணுவாள்

வீட்டுக்கு வெளியே சபலமான புத்தி கொண்டவள்

கால்நடை சேர் இடம் பதிவிரதை

உள் கீழாடை இல்லாது இருப்பின் துன்பமான வாழ்வு

தண்ணீர்கரை நீண்ட ஆயுள் உடையவள்.

தோட்டம் மரங்கள் கொண்ட இடம் செல்வம் உல்லாசமான வாழ்வு

அயல் வீடு கஷ்டம் நடத்தை பிறழ்வு

தன்னுடைய கிராமத்தின் மத்தியில் நடத்தை பிறழ்வு.

பெண்கள் கூட்டத்திற்குள் சுகபோக வாழ்வு

படுக்கையில் ருது தகப்பனுக்கு தோஷம் தரும்

உணவு உட்கொள்ளும் போது மிகவும் நன்மைதரும்

வீட்டுத்தோட்டம்பூங்கொல்லை நில புலன்கள் சேரும்

பயனிக்கும் வேளையில் பொருள் சொத்து சேரும்

ஆலய வளாகத்தில் திறமை புத்திக்கூர்மை இருக்கும்

பாடசாலையில் சுகபோகம், சபலமான புத்தி அமையும்

**ருது நடந்தேறிய திசைகளுக்கான பலன்கள்**

கிழக்கு நன்மை, செல்வம் உடையவள்

தென்கிழக்கு புத்திரபாக்கியம் இல்லாமை அற்பபுத்திரர்

தெற்கு சொத்து சம்பத்துக்கள் சேர்ப்பாள்

தென்மேற்கு தரித்திரம் வறுமை

மேற்கு கணவன் தாம்பத்திய உறவில் அதிக விருப்பம்

வடமேற்கு கணவனை சிறிது காலத்தில் இழக்கும் நிலை

வடக்கு அழகு முகவசீகரம் கவர்தல் இருக்கும்

வடகிழக்கு சபலபுத்தியும் நடத்தைப் பிறழ்வும் காட்டும்.

"ருது" குறித்து பெற்றோர்கள் சோதிடர் மூலம் தெளிவான பலன்களை அறிய முட்படவேண்டும்

ருது அடைந்த பெண்ணின் கிரக அமைப்பில் ஏழாமிடம் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும்.

அதாவது பாவக்கிரகங்கள் இல்லாமலும் பாவக்கிரகங்களின் பார்வை இல்லாமலும் இருத்தல் வேண்டும். ருது கிரக நிலையில் 7 இல் சந்திரன் இருப்பது நன்மை. குரு நன்மை செய்யும். புதன் நன்மை செய்யும் குழந்தைப்பாக்கியத்தை தாமதமடைய வைக்கும். 7இல் சுபக்கிரகங்கள் அமையப்பெற்றால் கணவன் நல்ல அழகும் குணமும் உடையவராய் வாய்ப்பார். 7 இல் சூரியன் இருப்பின் கணவன் நிறமாயிருப்பார் . குணமாய் இருக்க மாட்டார் 7ல் செவ்வாய் இருப்பின் கொடிய சுபாவம் கொண்ட கணவர் கிட்டும். 7ல் சனி இருப்பின் கொடிய சுபாவம் கொண்ட கணவர் கிட்டும் 7ல் சனி இருப்பின் கறுப்பு நிறம் கொண்டவரும் மந்தமான புத்தி உடையவரும் கிடைப்பர்.

ருது நடந்தேறியதும் பலன்களை உடனே பார்க்க வேண்டும் என பெற்றோர் ஆர்வமாயிருப்பார் ஆனால் பெற்றோருக்கு ருது பலன்கள் சாதகியின் எதிர்கால குடும்பவாழ்வு பற்றிய விபரங்களையும் விவாகம் அமையப்போகும் நிலைகளையும் குணாம்சங்களையும் உடல் தோற்றம் மற்றும் புத்திர பாக்கியம் செல்வம் சேமிப்பு நிலைகளையும்விபரித்துக்கூறும்என்பதை பெற்றோர்கள் அறிவீர்களாக

# வடக்கு வாலிபர்களின் TOP 10

பரதன்
parath1818@gmail.com

இந்தக்கால இளைஞர்களிற்கு எது எதுவெல்லாம் பிடிக்கிறது? இப்படியொரு கேள்வியை கேட்டுப்பார்த்தால், ஆளாளுக்கு ஒவ்வொரு பதில் சொல்வார்கள். அடுத்த வீட்டுக்காரன் போட்டுள்ள செருப்பு தொடக்கம், அஜித் படத்தில் காட்டப்படும் பருப்பு வரை பலவிதமான பொருட்கள் பலருக்கு பிடித்திருக்கிறது.

நாகரிக மாற்றங்கள், இளைஞர்களின் ரசனைகள் என பல காரணங்கள் இளைஞர்களின் தேவைகளை, வாங்குபவற்றை தீர்மானிக்கிறது. இளைஞர்களை குறிவைத்தே சில உற்பத்தி துறைகள் களமிறங்கிவிட்டன. தேவையென்பதைவிடவும், அது கட்டாயம் இருக்க வேண்டுமென பல விடயங்கள் மாறிவிட்டன. பையன் என்றால்மீசை,தாடி இருக்கவேண்டுமென்பதை போல இந்தக்காலத்தில் பல பொருட்கள் ஆகிவிட்டன.


உயிரைக்கொடுத்தாவது இப்படியானவற்றை வாங்கிவிட வேண்டுமென பையன்கள் விரும்புகிறார்கள். இதயம், காற்று இந்த இரண்டிற்கும் அடுத்ததாக உயிர்வாழ அத்தியாவசியமானதென நமது பையன்கள் கருதும் ஐந்து முக்கிய விடயத்தை பட்டியல்படுத்தியுள்ளோம். வேறெதுவும் இல்லாமல் இருந்துவிடலாம், இந்த ஐந்து விடயமும் இல்லாமல் பையன்களால் வாழ முடியாதென்ற நிலை உருவாகிவிட்டது.

உங்கள் வீட்டிலும் யாராவது வயதிற்கு வந்த பையன் இருந்தால் படித்து, ஒப்பிட்டு பார்த்து கொள்ளுங்கள்.

## உணவை விட முக்கியமானது

இதயம், காற்று இந்த இரண்டிற்கு அடுத்து உயிர்வாழ முக்கியமானதாக பையன்கள் கருதுவது இதைத்தான். உணவுகூட இரண்டாம்பட்சம்தான். தின்னாமல், குடிக்காமல் ஆளில்லாத இடங்களில் ஒதுங்கி, போனை காதிற்கும் வாய்க்குமாக மாற்றி மாற்றி சிரித்துசிரித்து பேசிக் கொண்டிருப்பவர்களை பார்த்திருக்கிறீர்கள்தானே. இதற்குமேல் வேறென்ன ஆதாரம் வேண்டும்.

வீட்டில் அம்மா முடியாமல் இருந்தாலும், அடுத்த வீட்டுக் காரனிற்கு கடன்மீதியிருந்தாலும் அதைப்பற்றி யோசிக்காமல் என்ன பாடுபட்டாவது ஒருஸ்மார்ட்போன் வாங்கிவிட வேண்டுமென்பதே பெரும்பாலான இளைஞர்களின் இலட்சியம். போன் என்றால் நல்ல பெரிய சைஸில் இருப்பதுடன், கலர்கலரான கேஸிங்குடன் இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள்.



இந்த மோகத்தை இன்னும் அதிகரிப்பது, வெளிநாட்டிலுள்ள அத்தான் வகையறாக்கள்தான். கல்யாணம் செய்த புதிதில், மனைவியின் தம்பிக்கு ஒரு ஐபோனை கொடுத்து விடுகிறார்கள். பிறகென்ன, அவனது கூட்டாளிகள் அனைவரிடமும் ஐபோன் மோகம் பிடிக்கிறது. சகோதரிகளுடன் பிறந்தவர்கள் பாடு பரவாயில்லை. இல்லாதவர்கள் வீட்டில் நச்சரித்து, உண்ணாமல் உறங்காமல் கிடந்து ஒரு ஐபோன் வாங்கிவிடுகிறார்கள்.

## கிட்னியிலும் பெரியது

'மச்சி... புதிசா வந்திருக்காம்டா 200 சிசி. நம்மட செற எல்லாரும் எடுப்பமா?' என ஒரு கும்பலாக கடைக்கு சென்று ஒரேவிதமான மோட்டார் சைக்கிள் எடுக்கும் பையன்கள் எல்லாம் இப்பொழுது சர்வசாதாரணம். வீட்டில் திட்டத்திட்ட நடுமத்தியானம் வரை தூக்கம் போட்டுவிட்டு, பாடசாலை முடியும் நேரம், ரியூசன் நேரத்தில் பெண்கள் கல்லூரி வாயில்களிற்கிடையில் முறுக்கிக் கொண்டுதிரிவதற்குஒருமோட்டார் சைக்கிள் வேண்டும். ஒரேவிதமான மோட்டார்சைக்கிளில், ரிபிள்ஸ் அடித்துக்கொண்டு அணிவகுத்து செல்ல வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும்? கிட்னியை விற்கலாமா? ஓகே முடித்துவிடலாம்.

மோட்டார்சைக்கிளில் ஹெல்மெற் அணியாமல் திரியாவிட்டால் 'அட அவனாடா நீ' என மற்றவர்கள் கிண்டலடித்து விடுவார்கள் என பையன்கள் நம்புகிறார்கள். முக்கியமாக, ரியூசன் முடிந்து செல்லும் பெண்கள் கீழ்க்கண்ணால் தம்மை பார்ப்பதென்றால், ஒரு மோட்டார்சைக்கிள் அவசியமென நினைக்கிறார்கள். மோட்டார்சைக்கிள் வாங்குவதற்காக கிட்னி விற்ற பையன்களை பற்றிய செய்திகள் கூட வெளியாகியுள்ளது.




பக்கத்து விட்டு பையன் மோட்டார்சைக்கிள் வாங்கி விட்டான் என்றால், நமது பையனும் வாங்க வேண்டுமென பெற்றோர் நினைப்பதுதான் பையன்களிற்கு பிளஸாக உள்ளது. வெளிநாட்டிலுள்ள சகோதரத்திடமோ, சம்மந்தியிடமோ அழுதுகுழறி காசு வாங்கி ஒரு மோட்டார்சைக்கிள் வாங்கி கொடுத்துவிடுகிறார்கள்.

சொந்தமாக இல்லாவிட்டாலும் யாரிடமாவது இரவல் வாங்கியேனும், பெண்கள் கல்லூரி வீதிகளில் மோட்டார்சைக்கிள் ஓடுவது பையன்களிற்கு அலாதி இன்பம் கொடுப்பது.

## இரத்தக்காதல்

எல்லாம் சரி. அத்தான் கொடுத்த ஐபோன். கடன்காசில் வாங்கிய ஹரிஷ்மா. இதெல்லாம் எதற்கு? எத்தனை நாள்த்தான் அவர்களின் பின்னால் 'லோலோ' என சைக்கிள் மிதிப்பது? வாங்கிய பைக்கில் ஏற்றித்திரியவும், போனில் கடலை போடவும் ஒரு ஜீவன் வேண்டாமா?

கட்டாயம் வேண்டும். முதலிரண்டு விடயங்களும் ஓகேயெனில் மூன்றாவதாக பையன்கள் தேடுவது காதலிகளை.



எல்லோருடைய கனவிலும் நயன்தாராவும், நஸ்ரியாவும்தான் வருவார்கள். ஆனால் பானையில் இருந்தால்த்தானே அகப்பையில் வரும். மீன்... நம்மூரில் அப்படி யாருமில்லையென்பதல்ல. நமக்கு எது முடியுமோ அதைத்தானே செய்ய முடியும். எல்லாப் ,பையன்களுமே ஆரம்பத்தில் ஊரிலுள்ள பேரழகிகளின் பின்னால்த்தான் நடக்க ஆரம்பிக்கிறார்கள். நாளடைவில்நமது'ரேஞ்ச்'எதுவென்பதை தெரிந்து ஒரு காதலியை அமைத்து கொள்கிறார்கள்.

காதலிப்பதென்பதன் அர்த்தம் காதலியின் பெயரை உடம்பில் எழுதுவதென்பதுதான் பல இளைஞர்களின் எண்ணம்.இரத்தம் சொட்டச்சொட்ட பிளேட்டால் கீறியோ, ஊசியால் சூடு வைத்தோ காதலியின் பெயரை பதிப்பதே உச்சபட்ட காதல் வெளிப்பாடு என கருதும் பையன்கள் ஏராளம்.

பையன்களிற்கு அதிக சவாலை கொடுப்பதும் இதுதான். வாழ்க்கையில் பெரியபெரிய சவால்களையெல்லாம் சமாளிப்பார்கள். ஆனால் ஒரு காதலி கிடைக்காமல் அல்லாடுபவர்களும் ஏராளம்.

## கண்ணாண கண்

'இங்க பாரடா.. அவனிட்ட வட்ஸ்அப் இல்லையாம்' என ஆச்சரியமாக பேசும் பையன்களை கண்டிருப்பீர்கள். பேரூந்துக்குள் கண்டவளை எப்படியெல்லாம் சைட் அடிக்கலாமென வட்ஸ்அப் குறூபில் ஐடியா கேட்பவர்கள் அனேகர். பேஸ்புக், ருவிற்றர், வட்ஸ்அப் என பையன்களின் உலகம் மாறிக்கொண்டு செல்கிறது. மனிதர்களிற்கு கண்ணை படைத்தது பேஸ்புக் பார்க்கத்தான் என கருதுமளவிற்கு அதில் மூழ்கியுள்ளனர்.

காலை பத்துமணிக்கும் படுக்கையில் இருப்பதை செல்பி எடுத்து பேஸ்புக்கில் உலாவவிடுபவர்களும் உள்ளனர். அதை பன்னிரண்டு மணிக்கு பார்த்துவிட்டு, 'என்ன மச்சி நேரத்தோட எழும்பிற்றாய்' என ஒரு பக்கி கொமண்ட் அடிப்பான்.


இப்படி மாறிமாறி கலாய்ப்பதற்கும், கூடப்படித்த பெண்கள் 'இன்று நான் தேனீர் வைத்தேன்' என உலகமகா சாதனை புரிந்த ஸ்ரேற்றஸ் போடும்போது விழுந்துவிழுந்து லைக்கவோ, 'வாவ் சூப்பர்' என கொமண்ட் அடிக்கவோ சமூகவலைத்தளங்கள் அத்தியாவசியமானவை என பையன்கள் கருதுகிறார்கள்.

> **எல்லோருடைய கனவிலும் நயன்தாராவும், நஸ்ரியாவும்தான் வருவார்கள். ஆனால் பானையில் இருந்தால்த்தானே அகப்பையில் வரும். மீன்... நம்மூரில் அப்பாடி யாருமில்லையென்பதல்ல.**

## மூளைக்கு வேலை

மேலேயுள்ள நான்கு விடயங்களையும் பார்த்துவிட்டு நமது பையன்கள் எல்லோரும் இப்படித்தான் என நினைக்காதீர்கள். கொஞ்சப்பேர் ஏதாவது படிக்கவும் செய்கிறார்களாம். வாழ்க்கையில் முன்னேற வேண்டும், எதையாவது சாதிக்க வேண்டுமென நினைக்கும் புத்திசாலிப்பையன்கள் இளமைக் காலத்தை மேலே சொன்ன வகையில் கழிக்காமல் பயனள்ளதாக பயன்படுத்துகிறார்கள். முன்னரைப் போல இல்லாமல் இப்பொழுது பல்வேறு துறைசார்ந்த கல்விகள் வடக்கிற்கே வந்துவிட்டன. அங்கெல்லாம் சென்று கல்விகற்கிறார்கள். கப்பல்துறையில் பணியாற்றுவதற்கும் யாழில் கற்கை நெறிகள் ஆரம்பித்துவிட்டன என்றால் பாருங்கள்.

ஏராளம் வாய்ப்புக்கள் நம்முன் விரிந்துள்ளன. சரியான கல்வியை தேர்வு செய்வதன் மூலம் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாமென்ற தெளிவும், வழிகாட்டலும் பையன்களிற்கு இப்பொழுது கிடைக்கிறது. தொழில் கல்விகளை பையன்கள் தேடிச் செல்கிறார்கள்.



# குற்றம்

> அவனால் போதையின்றி இருக்க முடியாது. தாயாரால் அதை பொறுத்துக் கொள்ள முடியாது. இப்படியான நிலை வந்தபோது, வேறு வழி தெரியாமல் தற்கொலை முடிவை எடுத்திருக்கிறார்.

வடக்கில் போதைப்பொருள் பாவனை தலைவிரித்தாடுகிறதென பரவலாக குற்றம்சாட்டப்பட்டுவருவது எல்லோரும் அறிந்தது தான். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பல்வேறு மட்டத்திலும் நடந்து வருகிறது. ஆனாலும் என்ன பயன்? திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாதென்பதை போல, போதைப்பொருள் பாவனையாளர்கள் தாமாக உணர்ந்து திருந்தா தவரை அதனை முற்றாக ஒழிக்க முடியாது. அதனை உறுதிப்படுத்தும் விதமாக அண்மையில் நடந்த சம்பவமிது.

யாழ் நகரத்தில் உள்ள பிரபல்யமான கிறிஸ்தவ பாடசாலையொன்றிற்கு அருகில் அண்மையில் இது நடந்தது. பாடசாலைக்கு அருகில்பாழடைந்தகாணியொன்று உள்ளது. அந்தக்காணிக்குள் சந்தேகத்திற்கிடமான முறையில் பெண்மணியொருவரது நடமாட்டத்தை அவதானித்த அயலவர்கள், என்ன ஏதுவென பார்த்துள்ளனர். பெண்மணியின் நடத்தை சற்று சந்தேகத்தை ஏற்படுத்தவே, அங்கு சென்றுள்ளனர். அதன்பின்னர் தான் தெரிந்தது அந்த பெண்மணி தற்கொலை செய்ய அங்கு வந்திருக்கிறார் என்பது.

உடனடியாக தகவல் காட்டுத்தீயாக பரவ பிரதேச மக்கள் அங்கு குவிந்துவிட்டனர். அவர்கள் அந்தப்பெண்மணியை ஆசுவாசப்படுத்தி, தற்கொலை எண்ணத்தை கைவிடக்கோரியுள்ளனர்.எனினும், பெண்மணி அதற்கு உடன்படவில்லை. தன்னை தற்கொலை செய்ய விடுங்கள் என அடம்பிடித்துள்ளார். இந்த இழுபறி நீடித்துக் கொண்டிருந்த சமயத்தில், அங்கிருந்தவர்களால் பொலிசாருக்கும் வேறு சில துறைசார் அரச நிறுவனங்களிற்கும் அறிவித்துள்ளனர்.

உடனடியாக செயற்பட்ட அதிகாரிகள், இழுபறி நடந்துகொண்டிருந்த இடத்திற்கு விரைந்து சென்றுள்ளனர். விடயத்தில் தலையிட்டு, பெண்மணியை அழைத்துச் சென்றுள்ளனர். இந்த விபரீத முடிவை எடுக்க என்ன காரணம் என அவரிடம் விசாரித்தபோது, அதிர்ச்சி பதிலொன்றை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய பதிலில் அதிகாரிகள் ஆடிப்போய் விட்டனர். பெண்மணியின் பதின்னான்கு வயதான மகன் கஞ்சா போதைப் பொருளுக்கு அடிமையானவனாம். இந்த பகுதியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த பிரபல்யமான கிறிஸ்தவ கல்லூரியிலேயே அவன் கல்விகற்று வருகிறான். தினமும் கஞ்சாப்போதைப்பொருளை நுகரும் அவனால், போதைப்பொருள் இல்லாமல் ஒருநாள்க்கூட இருக்க முடியாதாம். அத்துடன், போதைப்பொருள் பாவித்துவிட்டு வீட்டை இரண்டுபடுத்துவானாம். எவ்வளவோ சொல்லியும் அவனை கட்டுப்படுத்த முடியாமல் போய் விட்டது.

அவனால் போதையின்றி இருக்க முடியாது. தாயாரால் அதை பொறுத்துக் கொள்ள முடியாது. இப்படியான நிலை வந்தபோது, வேறு வழி தெரியாமல் தற்கொலை முடிவை எடுத்திருக்கிறார்.

இதுதான் சம்பவத்தின் சுருக்கம்.

பின்னர், முறையான சட்ட வழிகளின் ஊடாக சிறுவன் நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, சிலநாள் வழிப்படுத்தலின் பின்னர் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளான்.

கடந்த வார இறுதியில் நடந்தது இது. யாழ்ப்பாண நகரத்தில் கஞ்சா விநியோகம் செய்ய முயன்றவர் ஒருவரை பொலிசார் மடக்கிப்பிடித்துள்ளனர்.

வடக்கில் கஞ்சாப் பாவனை தலைதெறிக்கும் வேகத்தில் அதிகரித்து சென்ற காலமொன்றிருந்தது. கஞ்சாப்பாவனை விடயம் பரவலான கவனத்தை ஈர்த்ததையடுத்து பலதரப்பிலிருந்தும் அதற்கெதிரான குரல்கள் எழுந்தன. விடயம் வில்லங்கமானது. பொலிசாரும் அதிரடியில் இறங்கினர். வடக்கிற்கான கஞ்சா மார்க்கங்களை அடைக்கத் தொடங்கினார்கள். பெருந்தொகை கஞ்சா வரிசையாக சிக்கியது.

வடக்கில், குறிப்பாக யாழில் பெருந்தொகை கஞ்சா கடத்துவதற்கு இனி வாய்ப்பில்லையென்ற நிலை வந்ததும், கடத்தல்க்காரர்கள் புதிய உத்தியை கையாள்கிறார்கள். மிகச்சிறியளவில் விநியோகங்களை ஆரம்பித்துள்ளனர். இப்படியான ஒரு மார்க்கமே பொலிசாரிடம் சிக்கியுள்ளது.

கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் ஐந்துசந்திப்பகுதியில் ஒரு 'வட்டா' ரக வாகனத்தில் இருந்த ஒருவரை பொலிசார் மடக்கிப் பிடித்தனர். அவரிடமிருந்து 29 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அவர் முஸ்லீம் என தெரிகிறது. அந்தக்கஞ்சாவை விநியோகத்திற்காகவே அவர் வைத்திருந்தார் என கூறப்படுகிறது.



மன்னார் பிரதேச கலை இலக்கிய விழா படங்கள்









## மாட்டுவண்டியில் மாப்பிள்ளை

யாழ்ப்பாணம் அரியாலையில் நடந்த திருமண வரவேற்பு ஊர்வலம். தமிழர்களின் பண்டைய மரபுமுறைப்படி மாட்டுவண்டியில் மாப்பிள்ளை அழைத்து வரப்பட்டார். மாட்டுவண்டியே அரிதாகிவிட்ட காலத்தில் இந்த காட்சியை பெருமளவானவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்ததை அவதானிக்க முடிந்தது.



## விலங்குப் பெண்!

வில்பத்து காட்டிற்குள் விலங்கு ஆராய்ச்சியாளர்கள் சிலர் கமராக்களை பொருத்தியுள்ளனர். விலங்குகளின் நடமாட்டம் பற்றிய தகவல்களை அறிவதே அவர்களின் நோக்கம். பின்னர் கமராவை ஆராய்ந்தபோது, அவர்களிற்கு தூக்கிவாரிப் போட்டுள்ளது. காரணம் கமராவில் பெண்ணொருவரின் நடமாட்டம் பதிவாகியுள்ளது. காட்டிற்குள் 40 கிலோமீற்றர்கள் தொலைவில் விலங்குகளுடன் விலங்காக வாழ்கிறார் இந்த பெண். வீடியோவை பார்த்துவிட்டு அதிகாரிகளே ஆடிப்போய்விட்டனர். பின்னர் விசாரணை நடத்தியபோதுதான் விடயம் வெளிப்பட்டது. வில்பத்திற்கு அருகிலுள்ள கிராமத்தை சேர்ந்த மனநலம் குன்றிய பெண்ணாம் இது. அடிக்கடி அடர்ந்துகாட்டிற்குள் விசிற் அடித்துவிட்டு திரும்புவாராம்.



## நெஞ்சில் ஏறிய அலவாங்கு!

நிலத்தில் செங்குத்தாக குத்தி வைக்கப்பட்டிருந்த அலவாங்கின் மேல், மரத்திலிருந்து தவறிவிழுந்த மாணவனிற்கு நேர்ந்த கதியை பாருங்கள். புளத்சிங்கள பகுதியில் இந்த பதைபதைக்கும் சம்பவம் நடந்தது. நெஞ்சில் குத்தப்பட்டிருந்த அலவாங்குடன் மாணவன் ஹொரணை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டார். அலவாங்குடனேயே கொழும்பு தேசியவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.



## சித்தப்பாவிற்கு குத்திய யுவதி

தனது தாயின் சகோதரியின் கணவனை கூரிய ஆயுதத்தால் குத்தி, அவரிடமிருந்த ஒரு இலட்சத்து 48 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட முயன்றார் என்ற குற்றச்சாட்டில் யுவதியொருவர் கைதாகியுள்ளார். அட்டனில் இந்த சம்பவம் நடந்தது. யுவதியை நீதிமன்றம் அழைத்து வந்தபோது, ஊடகக்காரர் ஒருவர் படம் எடுத்துள்ளார். இதைப்பார்த்து யுவதியின் உறவினர்கள் சன்னதமே ஆடிவிட்டனர்.



## கைழுவிய காதலன்!

கலிகாலம் என இதைத்தான் சொல்வார்களோ என்னவோ. மனம்பூரிக்க மணமேடையில் இருந்திருக்க வேண்டிய இந்த இளம்பெண் மணக்கோலத்தில் அழுதபடி புகார் சொல்லியிருக்கிறார். மணமேடைக்கு செல்லும் சமயத்தில் மணமகன் வீட்டார் பெண்ணையும், வீட்டாரையும் அடித்து துரத்த, வெளியில் ஓடிப்போய் கலக்டர் அலுவலகத்தில் தஞ்சம் புகுந்து முறையிட்ட காட்சி. இது தமிழகத்தின் திருவள்ளூரில் கடந்த வாரம் நடந்தது. பல மாதங்களாக காதலித்த வாலிபனுடன் இவர் ஏற்கனவே சொல்லாமல் கொள்ளாமல் ஓடியுள்ளார். பின்னர், இருவரையும் அழைத்து வந்து, முறைப்படி திருமணம் செய்து வைக்க முயன்ற சமயத்திலேயே இது நடந்துள்ளது.



## இரத்தமும் சதையும்

மன்னார் பரப்பாங்கண்டல் கன்னியர் மடத்தில் திவ்விய நற்கருணை இரத்தமும் சதையுமாக மாறியதாக கூறப்படுகிறது. அதிசயம் நிகழ்ந்ததாக தகவல் காட்டுத்தீயாக பரவியது. இதனையடுத்து அங்கு பெருமளவு மக்கள் குவிந்து பார்வையிட்டனர். தற்போது அது கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 01.11.2015 அன்று வெளியிடப்பட்டது